இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 198 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 29 திங்கட்கிழமை 12.06.2017

## தங்கம் வெற்றி



»25

## செல்பி எடுக்க முயன்ற சகோதரர்கள் இருவர் ரயிலுடன் மோதிச் சாவு

கொழும்பு, ஜூன் 12
பம்பலபிட்டி - கொள்ளுபிட்டி தொடருந்து நிலையங்களுக்கு இடையே தொடருந்துப் பாதையில் செல்ஃபி எடுக்க முயன்ற சகோதரர்கள் இருவர் தொடருந்துடன் மோதுண்டு உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். »25

# நான்கு அமைச்சர்களையும் பதவி நீக்க உறுப்பினர்களுடன் விக்கி ஆலோசனை

## இந்த நேரத்தில் நீக்குவதற்கு சிவில் சமூகம் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12
வடக்கு மாகாண சபையின் நான்கு அமைச்சர்களையுமே பதவி நீக்கி, அமைச்சரவை மாற்றத்தை மேற்கொள்வது தொடர்பில், ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு நேரடியாக அலைபேசியில் அழைப்பெடுத்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.
2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், அப்போதைய பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனிஜெகநாதன் தலைமையில், ஆளும் கட்சியின் 16 உறுப்பினர்கள் அமைச்சரவையை மாற்றம் செய்யுமாறு வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கோரியிருந்தனர். அவ்வாறு கோரிய 16 உறுப்பினர்களிடமும், அதன் பின்னர் மாகாண சபை உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்ட உறுப்பினர்களிடமுமே, முதலமைச்சர் கருத்துக்களைக் கேட்டறிந்தார்.
வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்த விசாரணைக் குழுவினர், விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், கல்வி அமைச்சர் த.குருகுலராசா ஆகியோர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தனர். விசாரணை அறிக்கையை கடந்த 7ஆம் திகதி சபையில் முதலமைச்சர் சமர்ப்பித்திருந்தார்.
அமைச்சர்களின் தன்னிலை விளக்கம் மற்றும் உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டுத் தானே இறுதி முடிவு செய்வேன் என்றும் »25

## ஐ.தே.க. எமக்கு சவால்விடின் தனித்து ஆட்சி

எச்சரிக்கின்றது சு.க.

கொழும்பு, ஜூன் 12
ஐக்கிய தேசிய கட்சி அரச தலைவருக்குச் சவால் விடுக்குமேயானால் மைத்திரி இன்றே தனித்து ஆட்சி அமைத்துக் காட்டுவார் »25

## புதிய அரசமைப்புக்கு சு.க. உறுப்பினர்கள் பலர் போர்க்கொடி

கொழும்பு, ஜூன் 12
உத்தேச அரசமைப்புத் திட்டம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டால் தாங்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிப்போம் எனவும், அத்தகைய காலகட்டத்தில் இந்த விடயத்தில் தாங்கள் பொது எதிரணியான மகிந்த »25

## இனவாதம் ஊடாக கூட்டாட்சியை நிறுவ நல்லாட்சி முயற்சி

வீரவன்ச குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 12
முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதச் செயற்பாடுகளின் ஊடாக அவசர காலச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் கூட்டாட்சித் தீர்வை உள்ளடக்கிய அரசமைப்பை »25

## அமைச்சுப் பதவிகளைப் பெற சிலர் துரோகமிழைக்கின்றனர்

சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 12
"அற்ப அமைச்சுப் பதவிகளுக்காக ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்து, அந்தப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு சிலர் ஆசைப்படுகின்றனர். கூட இருந்துகொண்டே பதவிக்காக குழி பறிப்பதென்பதைவிட துரோகச் செயல் வேறொன்றுமில்லை"
இவ்வாறு தமிழ்த் தேசியக் »25

## மைத்திரிபால மீது கடுகளவேனும் விசுவாசமில்லை



கூறுகிறார் நாமல் எம்.பி.

கொழும்பு, ஜூன் 12
நாட்டின் அரச தலைவர் என்ற அடிப்படையில் மைத்திரி மீது எமக்கு மதிப்பு உண்டே தவிர அவர்மீது எமக்கு கடுகளவேனும் விசுவாசம் இல்லை. இதனால்தான் மகிந்த அணியால் அவரின் தலைமையை ஏற்று அவருடன் »24

## 2 அருட்தந்தையர்கள், 2 சட்டத்தரணிகளும் மைத்திரியுடனான சந்திப்பில் பங்கேற்பர்

யாழ்ப்பாணம், ஜூன் 12
காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவினர்களுடன் இரு சட்டத்தரணிகள் மற்றும் இரு அருட்தந்தையர்களும் இணைந்தே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்திக்கவுள்ளனர். இந்தச் சந்திப்பு இன்று மாலை 4 மணிக்கு, வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சந்திப்பு இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதும், திடீரென அது மாலை 4 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத் »25

முச்சந்தி முரளி



அப்ப அவருக்கு மட்டும்தான் நுளம்பு கடிக்குமோ...



## முகாமுக்குள் மக்களை விட்டு வாயிலை மூடியது ராணுவம்!

கேப்பாபிலவில் நேற்றுப் பதற்றம்

முல்லை., ஜூன் 12
கேப்பாபிலவில் நேற்றுத் திறந்து விட்ட சாலையூடாக சென்று மக்கள் வழிபாடுகளில் ஈடுபட்ட சமயம் பிரதான நுழைவாயிலை இராணுவம் மூடியதால் பதற்ற நிலமை ஏற்பட்டது.
கேப்பாபிலவு »24



## யாழ். செயலகத்தைச் சூற்றி நுளம்பைத் தடுக்கும் புகை

மைத்திரியின் இன்றைய கூட்டத்துக்காக

யாழ்ப்பாணம், ஜூன் 12
வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலமை மற்றும் எதிர்காலத் திட்டம் தொடர்பிலான கலந்துரையாடல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இன்று »25

## ஞானசாரரைக் கைது செய்யும் முழு முயற்சியில் பொலிஸ்

அதன் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 12
"முஸ்லிம் வர்த்தக நிலையங்களைத் தீயிட்டுக் கொளுத்தியமை மற்றும் இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் பொதுபல சேனா அமைப்பின் உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரைக் கைது செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் முன்னெடுக்கப் »25

## கத்தி முனையில் அச்சுறுத்தி நகைகள், பணம் கொள்ளை

கல்லாற்றில் நேற்று அதிகாலை அட்டகாசம். கொள்ளையர் தாக்கி ஒருவர் படுகாயம்

கிளிநொச்சி, ஜூன் 12
வர்த்தக நிலையத்தை கொத்தி உடைத்து உட்புகுந்த திருடர்கள் உரிமையாளரை அடித்து அச்சுறுத்தி 40 பவுண் தங்க நகை மற்றும் 6 லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் கிளிநொச்சி, கல்லாறில் நேற்று அதிகாலை நடந்துள்ளது.
அதேபகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய ரங்கநாதன் சந்திரதேவன் என்பவரே கொள்ளை »23

## பன்னாட்டு விசாரணையே இலங்கை மீது அவசியம்

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தி.மு.க. வலியுறுத்தல்



கொழும்பு, ஜூன் 12
இலங்கையில் நடைபெற்ற இறுதிக் கட்டப் போரின்போதான மீறல்கள் குறித்துப் பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணையை நடத்த வேண்டும் என்று, ஐ.நா. மனித உரிமைகள் துணை ஆணையாளருக்கு, தி.மு..க செயல் தலைவர் ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் »25

அமைதிப் படையில் இணைய

## 360 இராணுவத்தினருக்கு ஐ.நா. அனுமதி மறுப்பு

கொழும்பு, ஜூன் 12
இறுதிக் கட்டப் போரில் பங்கேற்றவர்கள் என்ற காரணத்தால், ஐ.நா. அமைதிப்படையில் இணைந்து கொள்வதற்கு 360 இலங்கை இராணுவத்தினருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகி »25

## ரூ. 10கூட வருமானமில்லை 5, 000 குடும்பங்கள் பாதிப்பு

நந்திக்கடலில் மீன்கள் இறந்ததால் இந்த அவலம்

முல்லைத்தீவு, ஜூன் 12
நாளாந்தம் 4 ஆயிரம் ரூபாவுக்கும் மேல் வருமானமீட்டக்கூடிய நந்திக்கடலில் தற்போது 10 ரூபா வருமானத்தைக்கூடப் பெறமுடியவில்லை. இதனால் 5 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் கவலை தெரிவித்தனர். »24

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் பொங்கல் இன்று

முல்லைத்தீவு, ஜூன் 12
வரலாற்றுப்புகழ்மிக்க வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய வைகாசி பொங்கல் உற்சவம் இன்றாகும். முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் இருந்து காலை ஐந்து »24

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மரநடுகைத் திட்டத்தால் வருடா வருடம் மாகாண சபை நிதி வீண் விரயமாகியது

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.தியாகேந்திரன், எஸ்.பரமராஜா மற்றும் ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர் எஸ்.பத்மநாதன் ஆகியோர் அடங்கிய விசாரணைக் குழுவின் அறிக்கையின் நான்காம் பகுதி

### நிலத்தடி நீர் பிரச்சினையில் விவசாய அமைச்சர் தேவையற்ற தலையீடு

வடக்கு மாகாணத்தில் கொழும்பு அரசின் செயற்பாடுகள் எந்தவிதத் தடையுமின்றி மாவட்டச் செயலாளரின் ஒருங்கிணைப் போடும், வழிகாட்டலோடும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதேநேரம் நிலத்தடி நீருக்குப் பொறுப்பான தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையும், நீர் வளச் சபையும் இயங்கிக்கொண்டிருக்கும் சூழ் நிலையில் பொதுமக்களுக்கான எந்த சூழல் பிரச்சினையையும் எதிர்நோக்கக் கூடிய மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில் கொழும்பு சுற்றாடல் அமைச்சும், சுற்றாடல் அதிகார சபை மூலம் தனது செயற்பாட்டை நடத்திக் கொண்டுவரும் யாழ்ப்பாண மாவட்டத்தில், சுற்றாடல் அமைச்சுடனோ அல்லது நீர் விநியோகத்துக்குப் பொறுப்பான அமைச்சுடனோ ஒரு புரிந்துணர்வை (M.O.U) ஏற்படுத்திக் கொள்ளாது மாகாண விவசாய அமைச்சர் இந்த விடயத்தில் தலையிட்டு, நிபுணர் குழுவை நியமித்தமையும் அதற்காக மாகாண நிதி 1.9 மில்லியன் ரூபா செலவு செய்தமையும் நியாயமான தொன்றாக விசாரணைக் குழு கருதவில்லை.

### நிபுணர் குழுவை நிறுவியமை நிதி வீண் விரயச் செயற்பாடே

அத்தோடு அமைச்சர் தனது விளக்கத்தில் இந்தக் குழு ஓர் ஆய்வையும் தாமாகவே செய்யவில்லை எனவும் கொழும்பு அரச நிர்வாக அலகுகளால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் தரவுகளை வைத்துக்கொண்டே தனது இந்த நடவடிக்கை செய்யப்பட்டது என்ற விளக்கம் ஏற்றுக்கொள்ள முடியாத தொன்றாகும். ஏனெனில் மாகாண சபையின் அனுமதிக்கு விண்ணப்பித்ததே விவசாய அமைச்சரேயாகும். அப்பொழுது தனதும், மாகாண சபையினதும் அதிகார எல்லையை வரையறை செய்யும் அறிவு அமைச்சருக்கோ அல்லது அவரது செயலாளருக்கோ இருந்திருக்க வேண்டும். எனவே இதற்காக செலவிடப்பட்ட செலவு அப்பட்டமாக ஓர் வீண் விரயம் என விசாரணைக் குழு அபிப்பிராயப்படுகின்றது.

4.7) 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முன்னெடுக்கப்பட்ட 5 லட்சம் மரநடுகைத் திட்டம் தொடர்பில் பணமோசடி செய்தமை மரநடுகை என்பது குறிப்பாக விவசாயத் திணைக்களத்தால், பயன்தரு மரங்கள் நடும் திட்டம். ஒவ்வொரு வருடமும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பனை அபிவிருத்திச் சபையும் ஒவ்வொரு வருடமும் பெரியளவில் பனை மீள் நடுகைத் திட்டத்தை செயற்படுத்தி வருகின்றது. அதற்கு மேலான அரசும் தேசிய ரீதியான மரம் நடுகைத் திட்டத்தை செயற்படுத்தி வருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 30 வருட காலமாக மரநடுகைத் திட்டம் செயற்படுத்தப்படுவதுடன் அதில் கண்ட அனுபவம் காரணமாக மரம் நடுதலை மரம் நட்டு பராமரித்தல் என்ற புதுத் தொனியுடன் இந்தத் திட்டம் 1990ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் பயனை மிருசுவில் வரையிலான ஏ9 வீதியோர மரங்கள், வல்லைவெளி - யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியோர மரங்கள், மானிப்பாய் வீதியில் மருங்கில் உள்ள மரங்கள் என்பன சான்றாகியுள்ளன. அதாவது மரம் நடுதல் மாத்திரமல்ல அந்த மரங்கள் தாமாகவே வளரும் வரை அவற்றைப் பராமரித்தல் என்ற கொள்கையடிப்படையிலேயே இந்த மரநடுகை உலர் வலயத்தில் பரிமாணம் பெற்றுள்ளது. அதே நேரம் போரின் பின்னர் பல லட்சக்கணக்கான தென்னை மற்றும் பயன்தரு மரவகைகள் குடும்பங்களுக்கு வழங்கி அவர்களால் பராமரிக்கப்பட்டு, பயன்தரும் நிலையில் உள்ளன.

இந்த வரலாற்றைக் கொண்ட மரநடுகை, மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர் 2015 நவம்பர் மாதத்தில் 5 லட்சம் மரங்கள் நடுவோம் என்ற குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தில் 14 ஆயிரத்து 193 மரக்கன்றுகள் மாத்திரம் விவசாய அமைச்சால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அதற்கு ரூபா 2.5 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

இம்மரக்கன்றுகள் நடுகைத் திட்டம்:

(அ) நேரடியாக அமைச்சருக்கூடாகச் செய்யப்பட்டது
(ஆ) சம்பந்தப்பட்ட திணைக்களங்களூடாகச் செய்யப்பட்டது
(இ) பொது அமைப்புக்கள் மூலம் செய்யப்பட்டது

என அமைச்சின் செயலாளரது சாட்சியத்தை விசாரணைக்குழு ஏற்றுக் கொள்கின்றது. ஆனால் வவுனியா சேமமடு வீதியில் இளமருதங்குளம் கிராமத்தில் முதலமைச்சர், விவசாய அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் முன்னிலையில், பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்துக்கு உரித்தான 15 ஏக்கர் காணியில் பெரும் விழாவாக நடப்பட்டது. அதில் மரங்களுக்கு யார் உரிமையாளர் என்பதை அமைச்சின் செயலாளரோ அல்லது அமைச்சரோ விசாரணைக் குழுவுக்கு விளக்கமளிக்கத் தவறிவிட்டனர். அமைச்சரின் நேரடிப் பங்குபற்றுதல் இல்லாது இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் முதலமைச்சரும் இந்த நிகழ்வுக்கு சமுகமளித்திருந்ததாக பொதுமக்கள் குழுவிடம் நேரடியாகத் தெரிவித்துள்ளனர்.

விசாரணைக் குழு அந்தப் பிரதேசத்துக்குச் சென்று கள ஆய்வு செய்த போது, மரங்கள் நட்டதை நிரூபிக்கும் குழிகளும் ஓரிரு தேக்கம் கன்றுகளையும்தான் அங்கு காணக் கூடியதாக இருந்ததுடன் எல்லை வேலிகள் பாழடைந்து எந்தவிதப் பராமரிப்புமின்றி அந்தக்காணி இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

### மாகாண சபை நிதி வீண் விரயமாகியது

எனவே குறிப்பிட்ட இடத்தில் மரம் நடுகையை தூண்டியது யார்? அதற்கான செலவு எவ்வளவு? அது யாருடைய நிதி? முதலமைச்சர், விவசாய அமைச்சரால் பெரு விழாவாக முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டம் மாகாண சபையின் திட்டமெனவே அந்தப் பகுதி மக்கள் அபிப்பிராயப்படுவதோடு இவ்வாறு பொதுமக்கள் நிதியை திட்டமிடாது செலவு செய்து வீண்விரயமாக்குவது வடக்கு மாகாண சபை என அவர்கள் கொள்ளும் அபிப்பிராயத்தை விசாரணைக் குழு புறந்தள்ள முடியாதுள்ளது.

### அமைச்சர்களின் செல்வாக்கை முன்னிலைப்படுத்தவே விழா

இது விடயமாக அமைச்சின் செயலாளர் மரங்களைப் பராமரிக்கும் பொறுப்பு தங்களுடையது அல்ல எனவும் அதற்கான பொறிமுறை தம்மிடம் இல்லை எனவும் அவ்வாறு செய்வதாயின் பெருமளவு நிதி தேவை எனவும் விசாரணையின் பொழுது தெரிவித்த கருத்து ஏற்றுக் கொள்ள முடியாதது. அத்துடன், விழா எடுப்பதும் அமைச்சர்களின் செல்வாக்கை முன்னிலைப்படுத்துவதும்தான் அமைச்சர்களதும் அமைச்சின் செயலாளர்களதும் பணியே என விசாரணைக் குழு தனது ஆதங்கத்தை தெரிவித்துக் கொள்கிறது.

விவசாய அமைச்சருக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டை எண்பிப்பதற்கு முழுமையான ஆதாரங்கள் விசாரணையின்போது வெளிக் கொண்டுவரப்படவில்லையாயினும் வழங்கப்பட்ட மரக்கன்றுகளை பராமரித்து பாதுகாப்பதற்கான பொறிமுறை இல்லாத இந்தத் திட்டம் வெற்றியளிக்காத திட்டம் என்பதுடன் முழுமை பெறாததும் வருடாவருடம் நிதி வீண் விரயத்துக்கும் கொண்டு செல்வதற்கான காரணமாக அமைந்துவிட்டது என விசாரணைக்குழு அபிப்பிராயப்படுகிறது.

இந்த விழாவுக்கான செலவு வீண்விரயமே. இந்தச் செலவை வவுனியா மாவட்ட பனை, தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் செய்திருப்பதற்கான நியாயபூர்மான காரணங்கள் உள்ளன. எனினும் இதற்கான சாட்சிகள் விசாரணைக்குழுவிடம் முன்வைக்கப்படாத நிலையில் இந்தச் செலவுகளுக்கு அமைச்சரே பொறுப்பு எனச் சுட்டிக் காட்ட விசாரணைக் குழுவுக்கு முடியாதுள்ளது.

4.8) ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் இதுவரையில் நன்கு வெற்றி அளிக்கவில்லை எனத் தெரிவித்திருந்தும் தவறான செல்வாக்கைச் செலுத்தி நீர்ப்பாசனத் திணைக்களத்திட மிருந்து சாத்தியக்கூற்று அறிக்கையைப் பெற்று புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை முன்னெடுத்து 32 மில்லியன் ரூபாவை வீண்விரயம் செய்தமை.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணைக் குழு, முறைப்பாட்டாளர், சம்பந்தபட்ட திணைக்களப் பிரதிநிதிகளது சாட்சியங்களைப் பதிவு செய்ததோடு விசாரணையின் போது முன்வைக்கப்பட்ட ஆவணச் சான்றுகளையும் கவனத்தில் எடுத்துக் கொண்டது. அதற்கு மேலதிகமாகக் களப் பரிசோதனை செய்ததுடன் மாயவனூர் கிராம மக்களான பயனாளிகளையும் சந்தித்து அவர்களது கருத்துகளையும் விசாரணைக் குழு பதிவு செய்துள்ளது.

புழுதியாறு நீர்ப்பாசனத் திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி கிராமத்தில் மாயவனூர் என்னும் கிராமத்தில் மகரநாட்டிலிருந்து குடியேறி தலா 1/2 ஏக்கர் மேட்டுக் காணிகளைப் பெற்று குடியிருக்கும் 100 குடும்பங்களுக்கு அவர்கள் தமது காணியில் மேட்டு நிலப் பயிர் செய்கையை செய்து அவர்களது வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்கமாக புளிக்கன் குளத்தில் இருந்து நீர்கால்வாய் வெட்டி நீரை கொண்டு வந்து சுமார் 20 அடி உயரத்தில் உள்ள மேட்டு நிலத்துக்கு டீசலினால் இயங்கும் நீர்பம்பி மூலம் நீரை மேலேற்றி நீரை விநியோகிக்கும் திட்டமாகும்.

இதுபோன்ற ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள், குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கூட்டு விவசாயிகள் பங்குபற்றும் அடிப்படையில் கடந்த காலங்களில் (1980 -90ஆம் ஆண்டுகளில்) ஆரம்பிக்கப்பட்டு பின்னர் அரச உதவியின்மையாலும் மேலதிகச் செலவுகள் காரணமாகவும் விவசாயிகளால் கைவிடப்பட்ட திட்டமாகும். பின்னர் முத்தையன்கட்டு திட்டத்தில் போரின் பின்னர் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் மீள ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் அந்தத் திட்டம் முழுமையான வெற்றியளிக்கவில்லையாயினும், நீர் இறைப்பு இயந்திரங்களை இயக்குவதற்கு கூடிய செலவு காரணமாக உச்ச பயனைப் பெற முடியவில்லை.

### விவசாய அமைச்சின் செயலரின் சாட்சியத்தில் சந்தேகம் எழுகிறது

அதேநேரத்தில் விவசாயத் திட்டமொன்றை செயற்படுத்த திட்டமிடும் பொழுது நீர்ப்பாசனம் தொடர்பான சாத்தியக்கூற்று அறிக்கையை மாத்திரம் நம்பியிருக்காது விவசாய சமூக பொருளாதார சாத்தியக்கூற்று அறிக்கைகளையும் பெற்றே திட்டத்தில் முதலீடு செய்ய வேண்டும் என்பது யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் நியதியாகும். எல்லா செயற்றிட்டங்களையும் செயற்படுத்துவது அமைச்சு, கொள்கைத் தீர்மானம் எடுப்பதுதான் அமைச்சர் செய்யும் பணி என அமைச்சர் சார்பாக விசாரணைக் குழு முன் சாட்சியமளித்த அமைச்சின் செயலாளருக்கு ஏன் மேற்படி விடயம் தெரியவில்லை என்பது அவரது சாட்சியங்களின் உண்மைத்தன்மையில் விசாரணைக்குழு தனது சந்தேகத்தைத் தெரிவிக்கின்றது.

இந்தத் திட்டப் பயனாளிகள் அரை ஏக்கர் மேட்டுக் காணியை மாத்திரம் கொண்ட கூலித் தொழிலாளர்கள். ஓரிரு குடும்பத்தவர்கள் தவிர, மற்றவர்கள் பொருளாதார ரீதியில் ஏழைகள், சேமிப்பு அற்றவர்கள். அவர்கள் டீசல் நீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்க நிதி வசதியற்றவர்கள். அவர்களால் இந்தத் திட்டத்தை இயக்க முடியாது என்பதுடன் அவர்களை ஒன்றிணைக்கும் ஓர் அமைப்பேனும் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பாக ஒழுங்காக இயங்குவதாகத் தெரியவில்லை.

அத்தோடு முக்கியமான ஒரு விடயம் விவசாயத் திணைக்களம் இந்தச் செயற்றிட்டத்தில் இணைக்கப்படவில்லை. இணைக்கப்பட்டிருப்பின் மக்களது அனுபவத்தின் படியும் மண் வளத்தின் அடிப்படையில் கிடைக்கக் கூடிய நீரை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வோர் விவசாயக் குடும்பத்துக்குமான பயிர் செய்கை அட்டவணையைத் தயாரித்து இந்தத் திட்டத்தை சிறப்பாக இயக்கியிருக்க சந்தர்ப்பம் உண்டு.

பயனாளிகளின் கருத்துப்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நீர் இறைக்கும் இயந்திரம் இயக்கப்படவில்லையெனவும் தங்களோடு கலந்துரையாடப்படாமல் செயற்படுத்தப்பட்ட திட்டமெனவும் கருத்துத் தெரிவித்துள்ளதோடு, இந்தத் திட்டத்துக்கு பதிலாக சூரிய சக்தியால் இயங்கும் செலவு குறைந்த நீர் இறைக்கும் இயந்திரத்தை பூட்டியிருக்க லாம் எனவும் ஒவ்வொரு காணிக்கும் ஒவ்வொரு கிணறை தந்திருக்கலாம் எனவும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

நீர்ப்பாச்சு வாய்க்கால்கள் நல்ல முறையில் நிர்மாணிக்கப்பட்டு இருப்பினும், அவை பராமரிக்கப்படாமையால் செடிகள் வளர்ந்தும்சேதமாகியும்இருப்பதுபயனாளிகளதோ அல்லது அந்தத் திட்டத்தை நிர்மாணித்த திணைக்களத்தினதோ அக்கறையின்மையைக் காட்டுகின்றது.

### அமைச்சரின் விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாது

விசாரணைக் குழு முன் சாட்சியமளித்த நீர்ப்பாசன பிரதி பணிப்பாளர், விவசாய அமைச்சரின் கோரிக்கையின்படியே இந்தத் திட்டத்தை செயற்படுத்தியதாகவும் வாய்க்காலில் நீர் இருப்பதால் மறைமுகமாக நிலத்தடி நீர்ம்ட்டம் உயர்ந்து, கிணறுகளில் நீர்மட்டம் உயர்வதற்கான சாத்தியம் உள்ளது எனத் தெரிவித்துள்ளதுடன் டீசல் நீர் இறைப்பு இயந்திரத்தின் இயக்கச் செலவு அதிகமாக இருக்கும் என்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அதேநேரத்தில், இந்தத் திட்டம் பயனளிக்கக் காலம் எடுக்கும், பின்னர் சரியாக வரும் என்ற கருத்துப்பட விசாரணையின் பொழுது விவசாய அமைச்சர் வழங்கிய விளக்கம், முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது என விசாரணைக் குழு கருதுகின்றது.

### ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் நிதி வீண் விரயச் செயற்பாடே

நீண்டகாலம் போர் காரணமாக, வடக்கு மாகாணத்தின் முக்கிய வாழ்வாதாரத் துறையாகிய விவசாயத்துறை பெரிதும் பாதிக்கப்படுகின்றதுடன் தேசிய தரத்துக்கு

# யாழ்கோ சங்கத்தின் தலைவர் நியமனத்தில் அமைச்சர் ஐங்கரநேசன் அதிகார முறைகேடு

இந்தத் துறையை மேம்படுத்த பல வேலைத்திட்டங்களை செயற்படுத்தப்பட வேண்டிய இந்தக் காலப்பகுதியில் ரூபா 32 மில்லியன் செலவு செய்து நடைமுறைப்படுத்தப்படாது உள்ள இந்தத் திட்டத்துக்கு செய்யப்பட்ட செலவு ஓர் வீண் விரயம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அமைச்சர்களின் நெருக்குதல் காரணமாக மற்றைய தொடர்புடைய திணைக்களங்களது உதவி பயனாளிகளது பொருளாதார நிலை என்பவற்றை கருத்தில் எடுக்காது. நிர்மாணிக்கப்பட்ட இத்திட்டம் எதிர்பார்த்த இலக்கை அடையவில்லை. இதற்கு விவசாய நீர்ப்பாசன அமைச்சரே பொறுப்புக் கூற வேண்டும் என இக்குழு அபிப்பிராயப் படுகின்றது.

4.9) யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கத்துக்கு 2014ஆம் ஆண்டு மே மாதம் வரை தலைவராக இருந்த பெரியதம்பி இராசநாயகம் இரஞ்சன் என்பவரை நியாயமான காரணங்களின்றி கூட்டுறவு ஆணையாளருக்கு ஊடாக அதிகார முறைகேடு மூலம் பதவிநீக்கம் செய்தமை.

யாழ்கோ நிறுவனம் கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சங்கங்களில் ஒன்றாகும். அதை சங்கத்தின் உப விதிகளின்படி, பணிப்பாளர் சபைக்கு 9 அங்கத்தவர்களை நியமிக்கும் அதிகாரம் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் இருந்தது. ஆனால் கொழும்பு அரசால் ஆரம்பிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திக் கருத்திட்டத்தால் உருவாக்கப்பட்டுப் பின்னர் கூட்டுறவு சங்கம் என்ற வலையமைப்புக்குள் அதன் நிர்வாகம் கொண்டுவரப்பட்ட போதும் கொழும்பு கால்நடை அபிவிருத்தி அமைச்சாலும் மாவட்டச் செயலாளராலும் இந்தத் திட்டத்துக்கு பெருமளவு நிதி வழங்கப்பட்ட காரணத்தால் அதன் நிதியை பாதுகாக்கும் நோக்கில் பணிப்பாளர் சபைக்கான இரு அங்கத்தவர்களை மாவட்டச் செயலாளரின் பரிந்துரையில் நியமிக்கப்பட வேண்டும் என்ற கடப்பாடு கூட்டுறவுச் சங்க துணை விதி 35.1ன் கீழ் உள்ளது.

### அமைச்சரின் தலையீட்டால்தான் யாழ்கோவுக்குப் புதிய தலைவர்

கூட்டுறவு உதவி ஆணையாளர் 2014ஆம் ஆண்டு மாவட்டச் செயலாளரின் பரிந்துரையைப் பெறாது 01.05.2014இலிருந்து இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா, கந்தையா மகாதேவன் ஆகிய இருவரையும் பணிப்பாளர் சபைக்கு நியமித்துள்ளார். இந்த நியமனம் மூலம், மாவட்டச் செயலாளரின் பரிந்துரைப்படி முன்னர் பொதுச் சபைக்கு நியமிக்கப்பட்டு, பொதுச் சபையால் தலைவராக தெரிவு செய்யப்பட்டு 30.04.2014 வரை தலைவராக கடமையாற்றிய ரஞ்சனது பதவி பறிக்கப்பட்டுள்ளது. அந்தப் பதவிக்கு மாவட்டச் செயலாளரின் பரிந்துரை பெறப்படாமல் இ.சர்வேஸ்வரா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்துக்கான பரிந்துரை, கூட்டுறவுத் திணைக்களம் விவசாய அமைச்சுக்குக் கீழ் கொண்டுவராத காலப்பகுதியான 2014.04.03ஆம் திகதி, விவசாய அமைச்சரினால் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அமைச்சரின் ஆலோசனைப்படி, இந்த நியமனம் செய்யப்பட்டதாக முன்னாள் கூட்டுறவு ஆணையாளரின் சாட்சியை இங்கு ஏற்க வேண்டியுள்ளது.

### கூட்டுறவு ஆணையாளரும் நிர்வாக முறைகேடு செய்தார்

அதேநேரத்தில் மாவட்டச் செயலாளரின் பரிந்துரை பெறப்படாது ஒருவரை இயக்குநர் சபைக்கு நியமித்து அவரை தலைவராகத் தெரிவு செய்ததில் உள்ள நிர்வாக முறைகேட்டைத் தவிர்ப்பதற்காக மாவட்டச் செயலாளரிடம் பணிப்பாளர் சபைக்கு இருவரை பரிந்துரை செய்யும்படி கோரிக்கை விடுவதைத் தவிர்த்து தம்மால் முறைகேடாக நியமிக்கப்பட்ட இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா மற்றும் கந்தையா மகாதேவன் ஆகியோர்களது பெயர்களை தமது கடிதத்தில் உள்ளடக்கி அதுவும் அந்த நியமனம் வழங்கப்பட்டபின் ஏறக்குறைய ஒருவருடத்தின் பின்னரே அதாவது 27.04. 2015 இல் கூட்டுறவு உதவி ஆணை யாளரால் மாவட்டச் செயலாளருக்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. அவரிடம் அனுமதியும் பெறப்பட்டுள்ளது. இது வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரால் செய்யப்பட்ட நிர்வாக முறைகேடாகும். இம்முறைகேடு விவசாய அமைச்சரின் அழுத்தத்தால் ஏற்பட்டதாகும்.

ஆனால் விவசாய அமைச்சரின் பரிந்துரையின் அடிப்படையிலேயே இ.சர்வேஸ்வராவின் நியமனத்தை செய்ததாக முன்னாள் கூட்டுறவு ஆணையாளரது சாட்சியில் தெரிவித்துள்ளமையை விசாரணைக்குழு தனது கவனத்தில் எடுத்துள்ளது. ஆனால் அந்த நியமனக் காலத்தில் கூட்டுறவு திணைக்களம், அமைச்சர் ஐங்கரநேசனது அமைச்சுடன் இணைக்கப்பட்டு இருக்கவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அதாவது கூட்டுறவுத் துறை முதலமைச்சரது அமைச்சுடன் இணைக்கப்பட்டு இருந்துள்ளது. இ.சர்வேஸ்வராவின் நியமனத்தால் ரஞ்சனது நியமனம் தானாகவே செயலிழந்துள்ளது.

### நிர்வாக முறைகேட்டை மூடிமறைக்க முயற்சி

ரஞ்சன் பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கான காரணம் அவருக்கு தெரிவிக்கப்படவில்லை என்பதுடன் 2014இல் நிர்வாகச் சீர்கேடு என்ற அடிப்படையில் பதவி நீக்கம் செய்யப்பட்டதென முன்னாள் கூட்டுறவு ஆணையாளர் விசாரணயின்போது தெரிவித்திருந்தாலும் ரஞ்சன் அவர்களுக்கெதிரான குற்றப்பத்திரம் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு பின்னரே அதாவது 2016இல்தான் அனுப்பட்டதை கவனத்தில் கொள்ளும்பொழுது கூட்டுறவு ஆணையாளரும் அமைச்சரும் விசாரணைக் குழுவுக்கு முன்னர் அளித்த சாட்சியும் விளக்கமும் உண்மைக்கு புறம்பானதென்பதையும் கூட்டுறவு ஆணையாளர், தனது அதிகாரத்தை தானே அமைச்சருக்குக் கையளித்துள்ள நிர்வாக முறைகேடும் அமைச்சரால் செய்யப்பட்ட அதிகார முறைகேட்டையும் மூடி மறைப்பதற்கு செய்யப்பட்ட செயலாக கருத வேண்டியுள்ளது.

இதனடிப்படையில் பார்க்கும்பொழுது சர்வேஸ்வரா. மகாதேவன் ஆகியோரை கூட்டுறவு ஆணையாளர் மூலம் யாழ்கோ பணிப்பாளர் சபைக்கு நியமனம் செய்து அதன் தலைவர் பதவியில் இருந்து ரஞ்சனை நீக்கம் செய்தமை அமைச்சரது அதிகார முறைகேடுஎன விசாரணைக்குழு கருதுகிறது.

4.9 2015 யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கத்துக்குத் தலைவராக முன் அனுபவமில்லாதவரும் மாவட்டச் செயலாளரின் பரிந்துரை பெறப்படாதவருமான இரத்தினசிங்கம் சர்வவேஸ்ரா என்பவரை குடும்ப நண்பர் என்ற அடிப்படையில் கூட்டுறவு ஆணையாளர் மூலம் தலைவராக நியமித்தமை தொடர்பில் அதிகார முறைகேடு செய்தமை.

### சர்வேஸ்வராவை தலைவராக்குவதில் அமைச்சர் உறுதி

யாழ்கோ கூட்டுறவு சங்கத்தின் பணிப்பாளர் சபைக்கு மாவட்டச் செயலாளரின் பரிந்துரை பெறப்படாது 01.05.2014இலிருந்து விவசாய அமைச்சரின் பரிந்துரையின் அடிப்படையாகக் கொண்டு இ.சர்வேஸ்வரா மற்றும் கந்தையா மகாதேவன் ஆகியோர் நியமிக்கப்பட்டதாகவும் சட்டபூர்வமாக அமைச்சருக்கு அந்த அதிகாரம் இல்லை எனவும் கூட்டுறவு ஆணையாளர் இந்த விசாரணைக் குழுவின் முன் அளித்த தனது சாட்சியத்தில் குறிப்பிட்டதை யும் நேரடியாக இ.சர்வேஸ்வராவின் பாற்பண்ணை தொழில் தொடர்பான அனுபவமின்மையை அமைச்சருக்குத் தான் தெரிவித்ததாகவும் அதற்கு அமைச்சர் மகாதேவனின் ஆலோசனையைக் கேட்டு சர்வேஸ்வரா நடந்துகொள்வார் எனத் தெரிவித்து சர்வேஸ்வராவின் நியமனத்தில் உறுதியாக இருந்துள்ளமையை கூட்டுறவு ஆணையாளரது சாட்சியிலிருந்து தெளிவாகின்றது.

### சர்வேஸ்வராவுடனான உறவை மறைக்க முயன்றார் அமைச்சர்

அதேநேரத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இந்தியாவிலிருந்து வந்த காலம் தொடக்கம் அமைச்சரைத் தனக்குக் தெரியும் என இ.சர்வேஸ்வரா குழுவின் முன் அளித்த சாட்சியத்தில் தெரிவித்துள்ளமையும் அவர் தனது மனைவியுடைய குடும்ப நண்பர் எனவும் தனது மாமனாரின் பள்ளித் தோழன் எனவும் அவர் தனது பெயரைப் பரிந்துரை செய்திருக்கலாம் எனவும் அவர் தனது சாட்சியத்தின் பொழுதுதெரிவித்திருக்கும் அதேநேரத்தில் அமைச்சர் இரத்தினசிங்கம் சர்வேஸ்வராவை அவர் யாழ்கோ தலைவராக நியமிக்கப்பட்ட பின்னர்தான் தெரியும் என தனது சாட்சியத்தின் பொழுது முரண்பாடாக சாட்சியமளித்து சர்வேஸ்வராவுக்கும் தனக்கும் இடையே உள்ள முன் உறவை மறைக்க முயற்சித்துள்ளமையை விசாரணைக்குழு தனது கவனத்தில் எடுத்துள்ளது.

அத்துடன் தனக்கு கூட்டுறவு ஆணையாளரை நன்கு தெரியும் எனவும் அதனாலேயேதான் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்டச் செயலாளரின் பரிந்துரையின் பேரிலேயே தனது நியமனம் இருந்தது என்றும் உண்மைக்குப் புறம்பாக இ.சர்வவேஸ்வராவின் சாட்சியும் அவர் உத்தியோகத்தர் என்ற உண்மைக்கு புறம்பான அமைச்சரின் சாட்சியும் சர்வேஸ்வரா அமைச்சர் ஆகிய இருவருக்கும் இடையே நிலவிவந்த முன் தொடர்பையும் அமைச்சரின் பரிந்துரையின் அடிப்படையிலேயே கூட்டுறவு ஆணையாளருக்கு நெருக்குதல் வழங்கி இந்த நியமனம் செய்யப்பட்டதென்பதை கூட்டாக இந்த இருவரும் மறுக்கும் விதத்தில் சொல்லப்பட்ட சாட்சி உண்மைக்கு புறம்பான தென இந்த விசாரணைக்குழு கருதுகின்றது.

இந்த நிலையில் அமைச்சர் தனது பதவி அதிகாரத்தை முறைகேடு செய்து இரத்தினசிங்கம் சர்வேஸ்வராவை பணிப்பாளர் சபைக்கு கூட்டுறவு ஆணையாளர் மூலம் நியமித்து பின்னர் அவரைத் தலைவராக்கி உள்ளார். அத்துடன். ரஞ்சனை தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து மாகாண விவசாய அமைச்சர் தனது அதிகாரத்தை முறைகேடு செய்துள்ளார் என்பது விசாரணைகளின் போது சாட்சியங்களின் மூலம் எண்பிக்கப்பட்டுள்ளது. யாழ்கோ தலைவர் நியமனத்தில் விவசாய, கமநல சேவை, கால்நடை அபிவிருத்தி, நீர் வழங்கல், உணவு வழங்கல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அதிகார முறைகேடு செய்துள்ளார் என்று விசாரணைக்குழு கருதுகின்றது.

4.10) மருதங்கேணி கடற்றொழில் சமாசத் தலைவரை நியாயமான காரணங்களின்றி கூட்டுறவு ஆணையாளர் மூலம் 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதமளவில் பதவிநீக்கம் செய்தமை மூலம் அதிகார முறைகேடு செய்தமை.

பொன்னுச்சாமி பிரேமதாஸ் என்பவர் உடுத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்பட்டார். மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 15 சங்கங்களின் தலைவர்களால் மருதங்கேணி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசத்தின் தலைவராகவும் அவர் கடமையாற்றி வந்துள்ளார். சமாசத்தின் நோக்கம், மருதங்கேணி பிரதேசத்தில் வசிக்கும் கடற்றொழிலாளர்களது தொழில்சார் வாழ்வாதாரத்தை அதிகரிப்பதாகும்.

அதே நேரம் 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் ஆசிய அபிவிருத்தி வங்கி, விவசாய, கமநலசேவை, கால்நடை அபிவிருத்தி, நீர் வழங்கல், உணவு வழங்கல், விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன், கூட்டுறவு ஆணையாளர், பிரதேச செயலாளர் ஆகியோர் அடங்கிய பொதுக் கூட்ட மொன்று பொ.பிரேமதாஸின் தலைமையில் நடைபெற்றுள்ளது. அதில் மருதங்கேணி கடல் பிரதேசத்திலிருந்து கடல் நீரை எடுத்து சுத்திகரித்து அந்த நீரை யாழ். மாவட்டத்துக்கு குடிதண்ணீராக விநியோகிப்பது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட நீர் போக மீதி நீரை கடலில் விடுவதாகவும், அதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படமாட்டாதெனவும் அமைச்சராலும் ஆசிய அபிவிருத்தி வங்கி, தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை உத்தியோகத்தர்களாலும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் கூட்டத்தில் பங்குபற்றிய கடற் றொழிலாளர்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினாலும் தமது றொழிலுக்கு பாதிப்பு ஏற்படுமென தெரிவித்து அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தமது சம்மதத்தை வழங்க முடியாதெனவும் தெரிவித்துள்ளனர். அதனால் கூட்டம் இடைநடுவில் நிற்பாட்டப்பட்டுள்ளது.

### நன்னீர்த் திட்டத்துக்கு சம்மதிக்காததால் சமாசத் தலைவர் நீக்கம்

மாகாண முதலமைச்சரின் தலைமையில் அவரது வதிவிடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் திட்டத்துக்கான சம்மதத்தை வழங்க வேண்டுமென எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு இணங்கவும் இந்தத் திட்டத்துக்கான அனுமதியை வழங்கும்படி பிரதேச செயலாளர் மருதங்கேணி, கூட்டுறவுத் திணைக்களம் என்பன அமைச்சரது அழுத்தம் காரணமாக சமாசத் தலைவருக்கு நெருக்குதல் கொடுத்த காரணத்தினாலும், சமாசத் தலைவர் சமாச கடிதத் தலைப்பில் சங்கங்கள் மற்றும் நலன்விரும்பிகளைக் கொண்ட கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தி இருந்துள்ளார்.

அந்தக் கூட்டத்திலும் இந்தத் திட்டத்துக்கு சம்மதம் கிடைக்கவில்லை. இந்த நிலையில் அமைச்சர் சமாசத்தின் தலைவரை அந்தப் பதவியிலிருந்து நீக்குவதன் மூலமும் புதிய பணிப்பாளர் சபையை நியமிப்பதன் மூலமும் நீர்வழங்கல் தொடர்பான சம்மதத்தைப் பெறலாம் என்று எண்ணி சமாசத்தின் பொது முகாமையாளர் மூலம் தலைவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான காரணங்களைப் பெற திட்டமிட்டு இருந்ததாக எண்ணுவதற்கான காரணம் இருந்துள்ளது. ஏனெனில் சங்கத்தின் கடிதத் தலைப்பை பாவித்து தலைவர் கூட்டம் கூட்டிய ஆவணத்தை பொது முகாமையாளர் தலைவரின் முன் அனுமதியின்றி அமைச்சரிடம் கையளித்துள்ளார். அமைச்சர் அதனைக் காரணம் கொண்டு சமாசத் தலைவரை அதிகார முறைகேடு என்ற குற்றச்சாட்டின் கீழ் பதவிநீக்கம் செய்யும்படி கூட்டுறவு ஆணையாளருக்கு பணித்துள்ளார். கூட்டுறவு உதவி ஆணையாளர் மூலம் அந்தக் குற்றச்சாட்டின் தன்மை அதன் தாக்கம் சட்டபூர்வத்தன்மை என்பவற்றை ஆராயாமல் அமைச்சரின் பணிப்புரையை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இந்தச் செயற்பாட்டை அனுமதித்துள்ளார்.

சமாசத் தலைவர் கடிதத் தலைப்பை குறிப்பிட்ட நோக்கத்துக்காக பாவித்தமை அவரை பதவிநீக்கும் அளவுக்கான பாரதூரமானவை அல்ல என்று விசாரணைக் குழுவின் முன்னிலையில் கூட்டுறவு ஆணையாளர் அளித்த சாட்சியமும் முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர் அவசரப்பட்டு பிழையான தீர்மானத்தை எடுத்துள்ளார் என்று விசாரணைக் குழு முன்னிலையில் அமைச்சரின் விளக்கமும் மேற்படி கூற்றுக்கு சாதகமாக அமைந்துள்ளன.

(நாளை தொடரும்)



# தமிழக அரசியலில் திடீர்க் குழப்ப நிலை

*அ.தி.மு.க அணிகள் இணைப்புக் குழுவை நேற்றிரவு கலைத்தார் பன்னீர்ச்செல்வம்*

சென்னை, ஜூன் 12
தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியுடனும் அவர் தலைமையிலான சட்டமன்ற உறுப்பினர்களுடனும் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும் அவர் தலைமையிலான சட்டமன்ற உறுப்பினர்களும் இணைந்து செயற்படவென உருவாக்கப்பட்ட இணைப்புக் குழுவை ஓ.பன்னீர்செல்வம் நேற்றிரவு திடீரெனக் கலைத்துள்ளார்.

தமிழகத்தில் ஆட்சியமைத்துள்ள அ.தி.மு. கழகம் தற்போது மூன்றாக உடைந்துள்ளது. முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தற்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, 'அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளர் என்று தன்னைச் சொல்லிக் கொள்ளும் டி.டி.வி. தினகரன் ஆகியோர் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் மூன்றாகப் பிரிந்து செயற்பட்டு வருகின்றனர்.

எடப்பாடியும் பன்னீர்செல்வமும் இணைந்து செயற்பட பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனினும் இணைப்பு என்பது கடந்த பல வாரங்களாக சாத்தியமற்ற ஒன்றாகவே இருந்து வருகிறது. இந்த நிலையில் பன்னீர்செல்வம் திருச்சி செல்வதற்காகச் சென்றபோது, சென்னை வானூர்தி நிலையத்தில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையில் "எமது தர்மப் போர் வெற்றியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது" என்று குறிப்பிட்டார். ஓ.பி.எஸ். தமது வெற்றி என்று குறிப்பிட்டது தினகரன், சசிகலா இருவரும் அந்தக் கட்சியில் இருந்து முழுமையாக நீக்கப்படவுள்ளனர் என்பதையும், அ.தி.மு. கழகம் இணையப்போகிறது என்பதையும் குறிப்பிடுகிறது என்று சில இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இதனால் இணைப்பு விரைவில் நடைபெறவுள்ளது என்று எதிர்பார்க்கப்படுகையில், பேச்சு நடத்தவென தனது தரப்பில் இருந்து தான் உருவாக்கிய குழுவை நேற்று இரவு கலைத்து உத்தரவிட்டார் பன்னீர்செல்வம்.

24 மணிநேரத்தில் இணைப்புத் தொடர்பான விடயத்தில் ஓ.பன்னீர்செல்வம் இருவேறு சமிக்ஞைகளை வெளிப்படுத்தியமை தமிழக அரசியலில் மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. **(ஏற்கனவே கிடைத்த செய்தி பக்கம் 14)** (வ-ம)

# சசிகலா, தீபக்கும் கூட்டுச் சேர்ந்து ஜெயாவைக் கொலை செய்தனர்

*தீபா நேற்றிரவு பரபரப்புப் பேச்சு*

சென்னை, ஜூன் 12
சசிகலாவும், எனது தம்பி தீபக்கும் இணைந்து பணத்துக்காக அத்தை ஜெயலலிதாவைக் கொன்றுவிட்டனர் என்று புதிய குண்டைத் தூக்கிப் போட்டார் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா.

ஜெயலலிதா வசித்த போஜஸ் இல்லத்தில் நேற்றுக் காலையில் இருந்து மாலை வரை சிறு பரபரப்பு நிலவியது. தீபாவுக்கும் அவரது தம்பி தீபக்குக்கும் சில இழுபறி நிலைகள், வாக்கு வாதங்கள் குறித்த பகுதியில் நடந்தன என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.

செய்தியாளர் சந்திப்பையும் நேற்றிரவு தீபா நடத்தினார். "என்னை போஜஸ் இல்லத்துக்கு எனது தம்பி தீபக் வரவழைத்து தினகரன் பற்றி பேசக்கூடாது என்று தெரிவித்து அச்சுறுத்தினார். எனக்கும் என் கணவருக்கும் கொலை மிரட்டலையும் அவர் விடுத்தார். என்னை என்னவேண்டுமானாலும் செய்வார்கள். எனது தம்பி தீபக்கும், சசிகலாவும் இணைந்துதான் ஜெயலலிதாவை பணத்துக்காக கொன்றுள்ளனர். இது தொடர்பில் விசாரித்து தீபக்கையும் தண்டிக்க வேண்டும்" என்று தீபா செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (வ-ம)

## ஐரோப்பிய ஒன்றியத்திடம்

# வரிச் சலுகையைப் பெறாததை நியாயப்படுத்துகிறார் மகிந்த

கொழும்பு, ஜூன் 12
ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளப்பெறுவதற்கு தனது ஆட்சியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச நியாயப்படுத்தி கருத்து வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் ஐரோப்பிய சந்தையை வரிகளற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கின்ற போதிலும் அதற்காக அந்த நாடுகளுக்கு விலை செலுத்தவேண்டியுள்ளது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை பெறுவதற்காக குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவு செய்யவேண்டியுள்ளன. அந்த நிபந்தனைகளை நிறைவு செய்வதால் நாட்டின் அரசமைப்புக் கட்டமைப்புக்குப் பாதிப்பு ஏற்படலாம்.

இதன் காரணமாகவே ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த கோரிக்கைகளான எமது படையினருக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைகள், அதிகளவான அதிகாரப்பகிர்வு போன்றவற்றுக்கு இணங்காமல் எனது அரசு ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையை கைவிட்டது.

2010ஆம் ஆண்டு ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை இழந்த பின்னர் நாட்டின் ஏற்றுமதிகளுக்கு சலுகை அடிப்படையிலான வரி விதிக்கப்பட்டது.

கடந்த மாதம் இலங்கைக்கு மீண்டும் வரிச்சலுகை வழங்கப்பட்டதை தொடர்ந்து மீன்பிடித் தொழில்துறை, ஆடை தொழில்துறை உட்பட அனைத்து துறைகளிலும் வளர்ச்சி ஏற்படும் என அரசு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய சந்தைக்கான வரிச்சலுகையற்ற ஏற்றுமதியை பயன்படுத்துவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முயல்வார்கள் என்ற நம்பிக்கையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வரிச்சலுகையை அடிப்படையாகவைத்து எங்கள் எதிர்காலம் முழுவதையும் கட்டி எழுப்ப முடியும் என அரசு மக்களுக்கு தெரிவித்து வருகின்றது. எனினும் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை தற்காலிக நன்மைகளையே கொடுக்கும் என்பது கவனிக்கப்படவேண்டிய விடயம்.

இலங்கை உயர் மற்றும் நடுத்தர வருமான நாடு என்ற நிலைக்கு அருகில் உள்ளதால் நாங்கள் ஜி.எஸ்.பி. பிளஸ் இல்லாத நிலைக்கு எங்களை தயார்படுத்திக்கொள்ளவேண்டும்" என்று மகிந்த ராஜபக்ச மேலும் தெரிவித்தார். (வ-த)

# ஈழத் தமிழர் ஆதரவு முன்னாள் எம்.பி ஜேம்ஸ் பெரி தோல்வி

லண்டன், ஜூன் 12
பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தலில், தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவராக இருந்த ஜேம்ஸ் பெரி தோல்வியடைந்துள்ளார்.

கொன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில் இவர், கிங்ஸ்டன் அன் சேர்பிடன் தொகுதியில் போட்டியிட்டிருந்தார். லிபரல் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த சேர் எட் டேவியிடம் ஜேம்ஸ் பெரி 4 ஆயிரத்து 124 வாக்குகளால் தோல்வியடைந்தார்.

சேர் எட் டேவி 1997ஆம் ஆண்டு தொடக்கம், 2015ஆம் ஆண்டு வரை பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியில் இருந்தவர். அப்போது அவர் இலங்கை அரசைக் கடுமையாக விமர்சித்து வந்தவர். குறிப்பாக மனித உரிமைகள் பதிவுகள் மற்றும் தமிழ் மக்களை நடத்தும் விதம் குறித்து அவர் இலங்கை அரசுக்கு எதிரான கடுமையான கருத்துக்களை முன்வைத்து வந்தவர். (வ-த)



# குருநகரில் இரவு கைகலப்பு; 6 பேர் வைத்தியசாலையில்

*3 பேர் தைாகி விசாரணையில்*

யாழ்ப்பாணம், ஜூன் 12
யாழ்ப்பாணம் குருநகரில் கைகலப்பில் ஈடுபட்டுக் காயமடைந்த நிலையில் 6 க்கும் மேற்பட்டோர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். காயம் விளைவித்த குற்றச்சாட்டில் 3 பேரைக் கைது செய்துள்ளதாக பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

தொடர்மாடிக் குடியிருப்பை அண்மித்து நேற்றிரவு இந்தக் கைகலப்பு இடம்பெற்றது. முதலில் 3 பேரும் பின்னர் 3 பேருமாக 6 பேர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் விசாரணையில் உள்ளனர். அதன்பின்னர் அவர்கள் நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4-101)

# இலங்கை - அமெரிக்க பாதுகாப்புச் செயலர்கள் சிங்கப்பூரில் சந்தித்தனர்

கொழும்பு, ஜூன் 12
அமெரிக்க பாதுகாப்புச் செயலர் ஜேம்ஸ் மாட்டிசை, இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

சிங்கப்பூரில் கடந்த 2ஆம் திகதி தொடக்கம் 4ஆம் திகதி வரை நடந்த சங்கிரிலா கலந்துரையாடல் எனப்படும், 16 ஆவது ஆசிய பாதுகாப்புக் கருத்தரங்கின் போதே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறுகிய நேரமே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்போது இருவரும் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு, உரையாடியுள்ளனர். பேசப்பட்ட விடயங்கள் தொடர்பான எந்தத் தகவல்களும் அதிகாரபூர்வமாக வெளியாகவில்லை.

கடந்த ஜனவரியில் அமெரிக்க பாதுகாப்புச் செயலராகப் பதவியேற்ற பின்னர், ஜேம்ஸ் மாட்டிசை இலங்கையின் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த உயர்மட்டப் பிரமுகர் ஒருவர் சந்தித்திருப்பது இதுவே முதல்முறை என்று கூறப்பட்டுள்ளது. (4)

## மலேசியாவுக்குள் நுழையத் தடை

# இலங்கையைச் சாடுகிறார் வைகோ

விடுதலைப்புலிகள் அமைப்பைச் சார்ந்தவர் எனத் தெரிவித்து என்னை மலேசியாவுக்குள் நுழைய அந்த நாட்டு அதிகாரிகள் தடை விதித்தமையின் பின்னணியில் இலங்கை அரசின் சதிச்செயலே உள்ளது என்று வைகோ சாடியுள்ளார்.

மலேசியாவின் பினாங்கு மாநிலத் துணை முதல்வர் பேராசிரியர் இராமசாமியின் மகள் திருமண வரவேற்பு பினாங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் பங்கேற்கச் சென்ற வைகோ மலசியாவின் கோலாலம்பூர் வானூர்தி நிலையத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை அந்த நாட்டு அதிகாரிகளால் நாடு திருப்பப்பட்டார்.

சென்னை திரும்பிய வைகோ வானூர்தி நிலையத்தில் வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைகள் பற்றி எந்த நாட்டிலும் பேசக் கூடாது என்பதற்காக எனக்கு நுழைவிசைவு கிடைக்காமல் செய்து வருகிறது இலங்கை அரசு. மலேசியாவில் நுழைய எனக்கு அனுமதி கிடைக்காததற்கு இலங்கை அரசே காரணம். ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளும் எனக்கு நுழைவிசைவு கொடுப்பதில்லை. இது தொடர்பாக மலேசிய அரசிடம் விளக்கம் கேட்குமாறு வலியுறுத்தி தலைமை அமைச்சர் மோடிக்கு கடிதம் எழுத இருக்கிறேன்" என்று வைகோ தெரிவித்தார். (வ-ம)

# மேலும் 100 மாணவர்களுக்கு

## மருத்துவக் கல்வி வாய்ப்பு

"2016 - 2017 கல்வி ஆண்டில் மருத்துவக் கல்வியைத் தொடர மேலும் 100 பேருக்கு வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. இதற்கமைய மருத்துவ பீடங்களுக்கு இம்முறை ஆயிரத்து 440 மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்"

இவ்வாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா தெரிவித்தார். கடந்த வருடத்தில் மருத்துவ பீடங்களுக்கு ஆயிரத்து 340 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

அரச பல்கலைக்கழகங்களில் மருத்துவ பீடங்களுக்கு 50 மாணவர்களும், கொத்தலாவல பாதுகாப்பு மருத்துவ பீடத்துக்கு 50 மாணவர்களும் இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர்.

கொத்தலாவல மருத்துவ பீடத்துக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை நாடு முழுவதிலும் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையிலேயே இடம்பெறும். ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்று மருத்துவ பீடங்களுக்கு அனுமதி பெற முடியாத மாணவர்களுக்கான சந்தர்ப்பமாக இது அமையும்.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் அடுத்த வருடம் புதிதாக ஆரம்பிக்கப்படும். வயம்ப பல்கலைக்கழத்தில் ஆரம்பிக்கப்படும் மருத்துவ பீடத்துக்கு 100 மாணவர்கள் அடுத்த வருடம் முதல் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். சப்ரகமுவ பல்கலைக்கழத்தில் ஆரம்பிக்கப்படும் மருத்துவ பீடத்துக்கு 2019ஆம் ஆண்டிலிருந்து 100 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

2016-2017 கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்துக்கு மேற்பட்டதாகும்" என்று பேராசிரியர் மொஹான் டி சில்வா மேலும் தெரிவித்தார். (வ)



தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு கலவாவோடை அம்மனின் பக்தர் சச்சிதானந்தத்தின் ஒத்துழைப்புடன் ஒருதொகுதி அலுவலக உபகரணங்கள் இரண்டு குளிர் சாதன பெட்டிகள் ஆகியன மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் திவாகரிடம் கடந்த வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டன. (ஐ)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 12

மேனாள் இந்துப் பண்பாட்டுப் பேராசிரியர் அமரர் இரா.வை கனகரத்தினத்தின் முதலாண்டு நினைவையொட்டி பண்பாட்டியல் சிந்தனைகள் நூல் வெளியீடு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை 4மணிக்கு திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்திச் சங்க மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் வி.ரி. சிவலிங்கத்தின் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை கலாநிதி க.ஸ்ரீகணேசனும், நயப்புரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையின் மூத்த விரிவுரையாளர் எஸ்.முகுந்தனும், ஏற்புரையை நூலின் பதிப்பாசிரியர் முருகேசு கௌரிகாந்தனும் வழங்குவார்கள்.

நூலின் முதற் பிரதியை பேராசிரியரின் பாரியார் திருமதி கனக மீனலோசனி பெற்றுக்கொள்வார் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ற-12)



சாவகச்சேரி நகரப் பகுதியில் வீசிய கடும் காற்றால் சாவகச்சேரி வைத்தியசாலையின் பின்புறத்தில் டச்சு சாலையுடன் இணைந்துள்ள வைத்தியசாலை வளாகத்துக்குள் காணப்பட்ட வேப்ப மரத்தின் கிளை முறிந்து வீழ்ந்தது. (ற-9)

## ரயில்வே அபிவிருத்திக்கு இந்தியா 318 மில்லியன் டொலர் நிதியுதவி

கொழும்பு, ஜூன் 12

இலங்கை தொடருந்துச் சேவை அபிவிருத்திக்காக இந்தியா 31.8 கோடி (318 மில்லியன்) அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான உடன்படிக்கையொன்று கடந்த வெள்ளிக்கிழமை நிதியமைச்சில் கைச்சாத்திடப்பட்டது. இலங்கை அரசின் சார்பில் நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எச்.சமரதுங்கவினாலும் இந்தியாவின் சார்பில் இறக்குமதி வங்கியின் நிர்வாகப் பணிப்பாளர் டேவிட் ராஸ்குயின்ஷாவும் கைச்சாத்திட்டனர்.

2015ஆம் ஆண்டு இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி மேற்கொண்ட முதலாவது பயணத்தின்போது இந்த நிதியுதவிக்கான பிரேரணை அவரால் முன்வைக்கப்பட்டது. இதற்கு முன் இந்தியா வழங்கியிருந்த 96.6 கோடி (966 மில்லியன்) அமெரிக்க டொலர் நிதியுதவியில் இலங்கையின் தென் மற்றும் வடமாகாணத்துக்கானதொடருந்துப் பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

இப்போது வழங்கப்படவுள்ள நிதியுதவி இலகு கடன் திட்டத்தின் கீழ் திருப்பிச் செலுத்தப்படவுள்ளதாகவும் இந்தநிதியுதவியின்கீழ்பலரயில்பாதைகளும்சமிக்ஞை விளக்குகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (த)

# தாய்மொழியை மறந்து உருவாகும் ஒற்றுமை எமக்குத்தேவையில்லை

## நாடு இல்லையென்பதற்காகத் தமிழரை நாதியற்றவரென நினைக்கவேண்டாம் என அமைச்சர் மனோ எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 12

""தாய் மொழி, கலாசாரம், இனம், பண்பாடு, வரலாற்றை மறந்துவிட்டுத்தான் நாட்டில் ஒற்றுமையை உருவாக்கவேண்டுமென்றால், அப்படியொரு ஒற்றுமை வேண்டாம்" என்று தெரிவித்துள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.



""தமிழர்கள் கொத்துக்கொத்தாகக் கொல்லப்பட்டபோது கண்ணை மூடிக்கொண்டு இருந்துவிட்டு, பிறகு செம்மொழி மாநாட்டை நடத்துவதால் மட்டும் தமிழ் மொழி வாழ்ந்துவிடாது.

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டபோது தமிழகத்தில் செம்மொழி மாநாடு நடத்தப்பட்டது. தமிழ் மொழியை வாழவைக்க வேண்டுமானால் தமிழர்கள் வாழவேண்டும் என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

சிறுபான்மையினராக வாழும் தமிழர்கள் சற்று அசந்துவிட்டால், அவர்களை ஆட்கொண்டு விடுவார்கள். தாய் மொழி, கலாசாரம், இனம், பண்பாடு, வரலாற்றை மறந்துவிட்டுத்தான் நாட்டில் ஒற்றுமையை உருவாக்கவேண்டுமென்றால், அப்படியொரு ஒற்றுமை நமக்கு வேண்டாம்.

நாடு இல்லை என்பதற்காக தமிழர்களை நாதியற்றவர்கள் என்று நினைத்துவிட வேண்டாம்" என்றும் அவர் கூறினார். (த)

## சீதனப் பிரச்சினைகளினால் பல வறிய தமிழ்ப் பெண்கள் மதம் மாறிச் செல்கின்றனர்

### *முன்னாள் எம்.பி.கிருஸ்ணபிள்ளை கவலை*

மட்டக்களப்பு, ஜூன்12

பல தமிழ் பெண்கள் வறுமை தாங்கமுடியாமலும், சீதனக் கொடுமைகளினாலும் ஏனைய மதங்களைத் தழுவிச் செல்கின்றார்கள்.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினருமான ஞானமுத்து கிருஸ்ணபிள்ளை தெரிவித்தார்.

இந்துசமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வுக் கொடி வாரத்தை முன்னிட்டு நேற்று மட்டக்களப்பில் நடைபெற்ற திருஞான சம்பந்தர் குருபூசைப் பேரணி கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்து மதத்தையும், தமிழினத்தையும் பேணிப்பாதுகாப்பதற்குரிய சரியான சட்டத்திட்டங்களில்லை. ஆதியும், அந்தமும் இல்லாத எமது மதமும், தமிழினமும் குந்தி இருப் பதற்கு ஒரு நாடு இல்லை. இந்நிலையில்கூட பல தமிழ்ப் பெண்கள் வறுமை தாங்கமுடியாமல் சீதனக் கொடுமைகளினால் கடந்தசில நாட்களுக்குள் ஏனைய மதங்களைத் தழுவிச் சென்றுள்ளார்கள். இவற்றுக்கெல்லாம் காரணம் என்போன்ற மக்கள் தலைவர்களும், தனவந்தர்களும், இந்து மதத் தலைவர்களுமே.

கடந்த காலத்தில் சைவ சமயத்திலும், தமிழினத்திலும் எவற்றையெல்லாம் இழந்தோமோ அவற்றையெல்லாம் எதிர் காதலத்தில் மீளப் பெறவேண்டும். இதுவே எமதினத்தின் தலையாய கடமையாகவுள்ளது. அறநெறிப் பாடசாலைகளின் பணியை மேன்மேலும் பலமடங்கு அதிகரிக்கச் செய்து, அவற்றினூடாக மாணவர்கள் அனைத்து நெறிகளையும் அறிந்தவர்களாக உருவாக்கப்பட வேண்டும்.

ஏனைய மதங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு அந்த மதங்களைச் சேர்ந்த மக்கள், மக்கள் பிரதிநிதிகள், மதப்பெரியார்கள், தனவந்தர்கள், கல்விமான்கள் என அனைவரும் ஒன்றிணைந்து ஒரு அமைப்பை உருவாக்கி வைத்துள்ளார்கள். ஆனால் தமிழ் மக்கள் வாழும் கிராமங்களில் வசதிபடைத்தவர்களும், உயர் பதவிகளில் உள்ளவர்களும், சாதிகளில் உயர்ந்தவர்களுமே அமைப்புக்களிலே பதவி வகித்துக்கொண்டு இந்து ஆலயங்களில் பல லட்சம் ரூபா செலவில் பட்டாசு கொளுத்தி திருவிழாக்களை நடத்துகின்றார்கள். ஹெலிகொப்டரில் ஆலய கும்பாபிசேகங்களுக்கு பூமழை சொரிகின்றார்கள்.

பட்டாசு கொளுத்தி புகையாக்கும் பணத்தை அறநெறி ஆசிரியர்களுக்கு மனம்குளிரக்கூடிய வேதனத்தை வழங்கலாம். மாணவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யலாம் - என்றார். (த-ய-46)

# ராஜிதவின் கருத்துக்கு சிஹல ராவய கண்டனம்

ஞானசார தேரர் அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பில் இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருக்கும் கருத்துக்கு சிஹல ராவய கட்சியின் பொதுச் செயலாளர் மாகல்கந்த சுதத்த தேரர் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரரைக் கைதுசெய்வதற்கான நீதிமன்றப் பிடியாணை விடுக்கப்பட்டுள்ள போதிலும் அவர் அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பில் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுவதால் அவரைக் கைதுசெய்ய முடியாமல் இருப்பதாகக் கடந்த புதன்கிழமை ராஜித சேனாரத்ன கூறியிருக்கிறார் எனவும் அவர் உண்மையைப் புரிந்துகொள்ளாமல் பிதற்றிக்கொண்டிருக்கிறார் எனவும் சுதத்த தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அளுத்கம அசம்பாவிதத்தின் பின்னணியைப் புரிந்துகொள்ளாமல் ராஜித சோனாரத்ன தனது கருத்துகளைக் கூறி வருகிறார் எனவும் அவரது இந்தக் கருத்தை வாக்குமூலமாகப் பதிவுசெய்யுமாறு தாங்கள் பொலிஸ் மா அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்போவ தாகவும் தெரிவித்த சுதத்த தேரர் அமைச்சரவைப் பேச்சாளர் என்ற மிகப் பொறுப்பான பதவியில் இருக்கும் ராஜித சேனாரத்ன உண்மைக்குப் புறம்பாகப் பேசுவது மாபெரும் தவறு எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (த)

## வருடாந்தத்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 10

வண்ணார்பண்ணை காட்டுத்துறை சிறி அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 21ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஐ-10)

# தலைமை காரியாலய பரிசோதகர் ஓய்வு

சாவகச்சேரி, ஜூன் 10

சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய பரிசோதகர் சீ.ஐ.மெனிக்பே நேற்றுடன் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

அவரது சேவையைப் பாராட்டி பொலிஸ் நிலையத்தினரால் நேற்று சேவை நலன் பாராட்டு விழா நடத்தப்பட்டது. (ற-9)

## கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 10

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலத்தின் புதிய கட்டடத் தொகுதி திறப்புவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் அ. ஆனந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரான த.குருகுலராசா கலந்து கொள்ளவுள்ளார். (ற-10)

## ஆங்கில வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ் கால்பந்தாட்ட அக்கடமியில் பயிற்சிகளை பெறும் மாணவர்களின் ஆங்கில மொழியை விருந்தி செய்யும் நோக்குடன் பேச்சு ஆங்கில வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று முதன்மை பயிற்றுனர் ட னிங்ரன் விஜயகுமார் தெரிவித்தார். மாணவர்களுக்கான ஆங்கில வகுப்பை அருட்தந்தை பிலிப் அடிகளார் ஒவ்வெரு சனிக்கிழமைகளில் காலை 10 மணி தொடக்கம் 11 மணி வரை நடத்தவுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். (ற-23)



யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டத்தில் காணப்படும் மின்கம்பத்தில் உள்ள இரண்டு மின் குமிழ்களும்,அதனை அண்மித்து சாலையோரமாக உள்ள மின்கம்பங்களிலும் மின்குமிழ்கள் பகலிலும் ஒளிர்ந்துகொண்டிருக்கின்றன. இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பயணிகள் கோருகின்றனர். (4-ரி)

# சமூகத்துக்கு முன்மாதிரியானோராக பல்கலை. மாணவர் திகழவேண்டும்

## யாழ். பல்கலை. துணைவேந்தர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 12

"மனித வாழ்க்கையில் ஒழுக்கம் என்பது மிகவும் முக்கியமான ஒன்று. பாடசாலையில் ஒழுக்கத்துடன் இருக்கும் மாணவர்கள், பல்கலைக்கழகம் வந்ததும் அதனின்றும் வழுவிச் செல்கின்றனர். இது தவறு. பல்கலைக்கழக மாணவர்கள் சமூகத்துக்கு முன்மாதிரியாக நடக்கவேண்டும். போதையற்ற, புகைப்பொருள் அற்ற நாட்டைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

ஜி.சி.ஈ. சாதாரணதர பரீட்சையில் 9 ஏ சித்தி பெற்றுச் சாதனை படைத்த வலிகாமம் கல்வி வலய மாணவர்களை பன்னாட்டு



புகைப்பொருள் ஒழிப்புத் தினத்தை முன்னிட்டுக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் உடுவில் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் மற்றும் புகைப் பொருளை ஒழித்தல், ஒழுக்கமிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் சாதனை மாணவர்களைக் கௌரவித்தல் என்று வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் காலத்துக்குத் தேவையான சமூகப் பணிகளை முன்னெடுத்து வருவது பாராட்டுக்குரியது.

இந்த அமைப்புத் தனது கிளைகளை நாடு பூராவும் விரிவாக்கி, சிறப்புறத் தனது பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன்" என்றார். (ற-10)



பாசையூர் சென். அன்ரனிஸ் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தால் பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு பொருளாதாரத்தில் நலிந்த மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பாசையூர் கடற்றொழிலாளர் சங்க பணிமனையில் பாசையூர் ஜே.64 கிராம அலுவலர் திருமதி சோபனா அம்பிகை பகீதரன் தலைமையில் நடைபெற்றது. (ற-23)

## டிறிபேக் கல்லூரி உயர்தர மாணவர்கள் ஒன்றுகூடல்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கல்லூரியின் உயர்தர மன்றத் தலைவர் த.கோபிதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தலைமை விருந்தினராக சாவகச்சேரி திருக்கணித பதிப்பக முகாமையாளர் கா.சிவஞானசுந்தரம் தம்பதியினர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கல்லூரி உயர்தர மன்ற உறுப்பினர்களின் கலை நிகழ்வுகளும், விருந்தினர்களின் உரைகளும் இடம்பெற்றன.

ஜி.சி.ஜி. உயர்தரப் பரீட்சையில் அனைத்து மாணவர்களும் உன்னத நிலையை அடையக் கூடிய பெறுபேறுகளைப் பெற்று, தென்மராட்சி மண்ணின் பெருமைக்கேற்ப சிறந்த பிரஜைகளாக மிளிரவேண்டும். என்று தலைமை விருந்தினர் மாணவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார். (ற-ஐ-9)



கேப்பாபிலவு பிரதான சாலை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய உற்சவத்துக்காக நேற்றுக் காலை முதல் திறந்து விடப்பட்டது. நாளை மீண்டும் மூடப்படும் என இராணுவதரப்பு தெரிவித்துள்ளது. அதேவேளை, தமது சொந்த நிலத்தில் மீண்டும் மீள்குடியமர்த்தப்பட வேண்டும் என வலியுறுத்தி நேற்று 103ஆவது நாளாகவும் மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (ற)

## பேருந்துக் கட்டணங்கள் ஜூலை முதல் உயரும்

கொழும்பு, ஜூன் 12

வருடாந்த பேருந்துக் கட்டண திருத்தத்துக்கு அமைவாக எதிர்வரும் ஜூலை மாதத்தில் இருந்து, பேருந்துக் கட்டணம் 6.5 வீதத்தால் அதிகரிக்கப்பட உள்ளது என போக்குவரத்துத் துறை பிரதி அமைச்சர் அசோக் அபயசிங்க தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பிலான சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 20ஆம் திகதி இடம்பெற உள்ளது எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (ற)

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 | 60 |
| கத்தரி | 140 | 140 | 140 | 180 | 160 |
| கரட் | 250 | 280 | 280 | 350 | 320 |
| மரவள்ளி | 70 | 80 | 50 | 60 | 60 |
| பயிற்றை | 140 | 60 | 80 | 120 | 100 |
| பாகல் | 180 | 200 | 180 | 180 | 180 |
| கருணைக்கிழங்கு | 120 | | 90 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 80 | 100 | 90 |
| சி.வெங்காயம் | 250 | 350 | 250 | 320 | 240 |
| பூசணி | 70 | 80 | 60 | 90 | 80 |
| தக்காளி | 150 | 140 | 100 | 140 | 140 |
| வாழைக்காய் | 60 | 80 | 30 | 40 | 40 |
| கீரை | 30 | 30 | 20 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 20 | 30 | 30 |
| பச்சை மிளகாய் | 400 | 500 | 400 | 400 | 500 |
| புடோல் | 140 | 100 | 80 | 100 | 100 |
| கோவா | 160 | 200 | 140 | 240 | 160 |
| வெண்டி | 120 | 120 | 70 | 100 | 100 |
| போஞ்சி | 200 | 240 | 180 | 240 | 220 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 | 120 | 140 |
| தேங்காய் | 70 | 65 | 55 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 80 | 80 | 70 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 300 | | 160 | 240 |
| இராசவள்ளி | 200 | - | | 300 | 260 |
| முருங்கைக்காய் | 160 | 140 | 100 | 120 | 140 |

## அறநெறிக் கல்வி வாரத்தை முன்னிட்டு நல்லூரில் நடைபவனி

யாழ்ப்பாணம், ஜூன் 12

நல்லூர் பிரதேச செயலக இந்து கலாசார அலுவலர் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்து சமய அறநெறி கல்வி வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நடைபவனி நல்லூரில் நேற்று இடம்பெற்றது.

நல்லூர் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற நடைபவனி நல்லூர் பிரதேச



செயலகத்திலிருந்து ஆரம்பமாகி நல்லூர் ஆலயம் வரை இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து ஆலயத்தில் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. மீண்டும் நடைபவனி நல்லூர் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது.

நடைபவனியில் இந்து சமயத் தலைவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற-ஐ-8)

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 800 | 800 | 1000 |
| நண்டு | 400 | 300 | 400 | 300 |
| கணவாய் | 700 | 700 | 700 | 1000 |
| பாரை | 600 | 700 | 700 | – |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 500 | 500 | 400 |
| விளை | 500 | 500 | 500 | 200 |
| முரல் | 400 | 500 | 400 | 500 |
| கும்பிளா | 400 | 600 | 400 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 600 | 600 |
| ஓரா | 300 | 400 | 300 | 500 |
| திரளி | 250 | 300 | 200 | 300 |
| நகரை | 300 | 200 | 300 | – |
| சூடை | 200 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 100 | 300 | 300 | – |
| திருக்கை | 250 | – | 300 | 300 |
| மதனம் | 250 | 150 | 250 | – |
| கொய் | 150 | 70 | 120 | 80 |
| பாலை | 250 | 250 | 400 | 500 |
| வாழை | 200 | – | 300 | – |




சிறிய வகையான பல்வேறு பரிசுப் பொருள்கள் தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. நினைவுச் சின்னங்களாகக்கூட இவற்றை வழங்கலாம். இவை மரத்தினாலும், மாபிளினாலும் செய்யப்பட்டுள்ளன. இவை 2ஆயிரத்து 400 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## சுகாதாரத் தொண்டர்கள் போராட்டம் தொடர்கிறது

வவுனியா, ஜூன் 12

நிரந்தர நியமனம் வழங்கக் கோரி வவுனியா பிராந்திய மருத்துவ அதிகாரி அலுவலகத்தின் முன்பாகச் சுகாதாரத் தொண்டர்கள் முன்னெடுத்து வரும் கவனவீர்ப்புப் போராட்டம் 39ஆவது நாளாக நேற்று இடம்பெற்றது. போராட்டம் தினமும் காலை 9 மணி முதல் பி.ப. 5 மணி வரை நடத்தப்பட்டு வருகின்றது.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று அவர்கள் தெரிவித்தனர். (ற)

# வற்றாப்பளை ஆலயத்தில் கமராக்கள் கண்காணிப்பில்

## திருட்டுக்களைத் தவிர்க்க

யாழ்ப்பாணம், ஜூன் 12

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணி அம்மன் ஆலயத்தில் கூடும் பக்தர்களின் உடமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் ஆலயச் சூழல் முழுவதும் இரவு நேரத்தில் கண்காணிப்பில் ஈடுபடுவதற்கென அதி நவீன கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படுகின்றன.



முல்லைத்தீவு மாவட்டம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் இன்று திங்கட்கிழமை இடம்பெறுகிறது.

இவ்வாறான பிரசித்திபெற்ற ஆலயங்களில் கூடும் பக்தர்களின் நகைகள் உள்ளிட்ட உடமைகளைத் திருடுவதற்கும் பக்தர்களுடன் பக்தர்களாக திருடர்களும் கலந்திருப்பர். எனவே லட்சக்கணக்கான பக்தர்களின் நன்மை கருதி, பக்தர்களின் உடமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் ஆலயச் சூழலில் அதி நவீன கமராக்கள் பொருத்தும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இன்று திங்கட்கிழமை இவை கண்காணித்துக் கொண்டிருக்கும். ஆலய நிர்வாகத்தினர் கமராக்கள் பொருத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இது, பக்தர்களின் உடமைகளைப் பாதுகாப்பது மட்டுமன்றி கடமையில் ஈடுபடும் பொலிஸாருக்கும் பெரும் உதவியாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. (4-101)

# விபத்தில் உயிரிழந்த சாரதிக்கு இரங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 12

நோயாளர் காவு வண்டி விபத்துக்குள்ளாகியதில் உயிரிழந்த வண்டியின் சாரதிக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் இரங்கல் தெரிவித்தார்.

கிளிநொச்சியிலிருந்து நேற்றுமுன்தினம் நோயாளர்களை கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றபோது விபத்து இடம்பெற்றது. விபத்தில் யோ.தயேந்திரன் உயிரிழந்தார். அவரது குடும்பத்துக்கு வடக்கு சுகாதார அமைச்சர் இரங்கல் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அமைச்சரின் ஊடகப்பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நீர்கொழும்பில் நடைபெற்ற விபத்தில் அம்புலன்ஸ் வண்டியை ஓட்டிச்சென்ற சாரதி உயிரிழந்தார். உயிரை காப்பாற்றும் உயரிய கடமையைச் செய்கின்ற நோயாளர் காவு வண்டிகளின் சாரதிகள் போற்றப்பட வேண்டியவர்கள். தயேந்திரன் விபத்தில் உயிரிழந்தமை துர்ப்பாக்கியமானது. அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். என்றுள்ளது. (4)

# வறட்சியிலிருந்து மீண்டெழ 200 பேருக்கு நிதி உதவி

## துணுக்காயில் வேள்ட் விஷன் 12 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவுள்ளது

யாழ்ப்பாணம், ஜூன் 12

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக வறட்சி காரணமாக விவசாயிகள் உட்பட தொழில் இன்றி அவதியுறுவோரின் வாழ்வாதாரத்துக்கு ஏதுவாக 200 பேருக்குத் தலா 12 ஆயிரம் ரூபா வீதம் வேள்ட் விசன் நிறுவனப் பங்களிப்பில் வழங்கப்படுவதாக துணுக்காய்ப் பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தெரிவித்ததாவது:

இது தொடர்பில் பிரதேச செயலாளர் மேலும் விபரம் தெரிவிக்கையில் ,

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் இந்தத் திட்டத்துக்கென கல்விளான் மற்றும் கோட்டைகட்டியகுளம் ஆகிய இரு கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. கல்விளானில் இருந்து 96 பேரும் கோட்டை கட்டியகுளம் கிராமத்தில் இருந்து 104 பேருமாக மொத்தம் 200 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொருவருக்குமே தலா 12 ஆயிரம் ரூபா இந்த மாதம் இறுதியில் கிடைக்க கூடியதான வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்காக நாள் ஒன்றுக்கு 700 ரூபா வீதம் கணிக்கப்பட்டு 6 மணி நேரம் அவர்கள் வேலை செய்வார்கள். பொது மண்டபங்கள், வாய்க்கால்கள் துப்பரவுப் பணிகள் செய்வதே அவர்களது வேலையாக இருக்கும்.

இவ்வாறு இவர்கள் மேற்கொள்ளும் பணிக்காக ஒவ்வொரு பயனாளிக்கும் 12 ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாது பணம் வழங்கப்படவுள்ளது. என்றார். (4-101)

## தெற்கு மீனவர்களுக்கு உடந்தை

# பொலிஸாருக்கு எதிராக மக்கள் விரைவில் வீதியில் போராடுவர்

## கூட்டமைப்பு எம்.பி. நிர்மலநாதன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 12

கொக்குளாய்ப் பகுதியில் நீதிமன்றத் தடை உத்தரவினையும் மீறி கடற்றொழில் புரியும் மீனவர்களைப் பொலிஸார் கைது செய்யவில்லை. பொலிஸாரை எதிர்த்து மக்கள் விரைவில் வீதியில் இறங்கிப்போராட வேண்டிய நிலை ஏற்படும்.



இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

கொக்குளாய்ப் பகுதியில் நீதிமன்ற தடை உத்தரவினையும் மீறி தென்னிலங்கை மீனவர் தொழில் செய்யும் இடத்தை நேரில் சென்று பார்வையிட்டதோடு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பிரதிநிதியையும் நேரில் அழைத்து கான்பித்துள்ளேன். தென்பகுதி மீனவரின் மீன்பிடி இன்னும் தொடர்கிறது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய் பிரதேசத்தில் உள்ளூர் மீனவர்களுக்கும் தென்னிலங்கை மீனவர்களுக்கும் இடையில் வாடி தொடர்பான வழக்கு நீதிமன்றில் இடம்பெற்று வருகிறது. இதன் பிரகாரம் குறித்த வழக்குடன் தொடர்புபட்ட இரு தரப்புக்குமே நீதிமன்றத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த உத்தரவினையும்மீறி தென்னிலங்கை மீனவர்கள் மட்டும் படையினர் மற்றும் பொலிஸாரின் மறைமுக ஆதரவுடன் தற்போதும் தொழில் புரிகின்றனர். சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய பொலிஸாரோ ஒருபக்கச் சார்பாக தென்னிலங்கையரை தொழில் புரிய அனுமதித்துவிட்டு உள்ளூர் மீனவர்கள் தொழில் புரிகின்றனரா என்பதனை மட்டும் தீவிரமாகக் கண்காணிக்கின்றனர்.

கொக்குளாயில் நீதிமன்றினால் தடைவிதித்த பிரதேசத்தில் தொழில் புரிவது எமக்குத் தெரியாது என்று பொலிஸார் கூறமுடியாது. ஏனெனில் இது தொடர்பான நீதிமன்றின் உத்தரவுப் பிரதி பொலிஸாருக்கு வழங்கி உள்ளூர் மீனவர்கள் கொக்குளாய் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்துள்ளனர்.

சட்டத்தினை அவமதித்துத் தொழில் புரியும் தென்னிலங்கை மீனவர்களுக்கு முல்லைத்தீவு தலைமைப் பொலிஸ் அதிகாரி மற்றும் கொக்குளாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் நேரடியாகத் துணை புரிகின்றனர்.

பொலிஸார் சட்டத்தை காட்டியும் தடுக்க முடியாத நிலைமையே ஏற்படும். ஏனெனில் இதே நீதிமன்றை அவமதித்து தொழில் புரிபவர்களுக்குப் பக்கச் சார்பாகச் செயல்படும் பொலிஸார் எந்த முகத்துடன் சென்று நீதிமன்றிடம் தடை உத்தரவைக்கோர முடியும்? என்றார். (4-101)

# கால்நடைகளுக்கும் காப்புறுதிகள்; தேவையானவர்கள் பெறமுடியும்

யாழ்ப்பாணம் ஜூன் 12

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையினால் கால்நடைகளுக்கான காப்புறுதிகள் வழங்கப்பட்டு வருவதாக சபையின் உதவிப் பணிப்பாளர் து.கிரிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் நலன் கருதித் தற்பொழுது மாடுகளுக்கான காப்புறுதிகள் வழங்கப்பட்டுவருகின்றன. அதன்படி காப்புறுதிப் பணமாக வருடம் ஒன்றுக்கு ஒரு மாட்டின் பெறுமதியின் 3 வீதத்தினை செலுத்த வேண்டும்.

அவ்வாறு செலுத்தி எங்கள் சபையின் ஊடாக வளர்க்கப்படும் மாடுகளுக்கு காப்புறுதிகளைசெய்வதன் மூலம் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மாடு வளர்ப்போர் எங்கள் ஊடாக காப்புறுதி செய்திருப்பின் அவர்களின் மாடுகளுக்கு ஏதாவது இடர் ஏற்படின் அந்த மாட்டின் பெறுமதியின் 85 வீதமான பங்குப் பணத்தினை காப்புறுதிப் பணமாக பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தக் காப்புறுதி தொடர்பான விபரங்களை அறிய திருநெல்வேலியில் அமைந்துள்ள நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகில் உள்ள கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையுடன் நேரடியாகவோ அல்லது 0212227105 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகளை மேற்கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றார். (4-8)

# தலைமன்னாரிலுள்ள பனைகள் இரவோடிரவாக வெட்டிச் சரிப்பு

## தடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

மன்னார், ஜூன் 12

தலைமன்னாரில் அண்மைக் காலமாக, பல்லாயிரக்கணக்கான பனைமரங்கள் இரவோடு இரவாகத் தறித்து ஏற்றிச் செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்று கவலை தெரிவிக்கும் பிரதேச மக்கள், இந்தச் சட்டவிரோத செயல்களை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தனர்.


கோப்புப் படம்

தலைமன்னார், ஓலைத்தொடுவாய், கட்டுக்காறன் குடியிருப்பு, துள்ளுக்குடியிருப்பு, பேசாலை, கரிசல், சிறுத்தோப்பு போன்ற கிராமங்களிலேயே அதிகளவான பனை மரங்கள் அதன் உரிமையாளர்களுக்கும் தெரியாமல் பட்டப் பகலில் வெட்டப்பட்டு. இரவோடு இரவாகக் கடத்தப்படுவதாகப் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

மன்னாரில் இருந்து தலைமன்னார் தீவுப்பகுதிவரையான 32 கிலோ மீற்றர் தூரத்துக்கும் பனை மரங்களே காணப்படும்.

அவ்வாறு வடக்கு மாகாணத்தில் அதிகமான பனை மரங்களை கொண்ட பிரதேசமாக தலைமன்னார் பகுதி காணப்படுகின்றது. அவ்வாறுள்ள பனைமரங்களைச் சட்ட விரோதமாக இனந்தெரியாத கும்பல்கள் திட்டமிட்டு வெட்டிக் கடத்திக் கொண்டு சென்றுவிடுவிடுகின்றன.

சில குழுக்கள் நடுக்காட்டில் இரவோடு இரவாகச் சட்டவிரோதமாகப் பனை மரங்களைத் தறிக்கின்றனர். விடியும் போது அவர்கள் வெட்டப்பட்ட மரங்களை ஊருக்குள் கொண்டு சென்று சட்டடிப்படி தறிக்கப்பட்ட பனைமரங்களாக அடையாளப்படுத்திக் கொண்டு செல்கின்ற நிலையும் காணப்படுகிறது.

இவ்வாறு சட்டவிரோதமான செயற்பாடுகளால் பனைமரங்கள் நாளாந்தம் தறிக்கப்படுவதால் தமது வளம் பாதிக்கப்படுகிறது என்று மக்கள் குற்றம் சாட்டினர். இதற்கு உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோருகின்றனர். இது தொடர்பாக மன்னார் பிரதேச சபையுடன் தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் தொடர்பு கிடைக்கவில்லை. (4-21)

## வழிகாட்டல்செயலமர்வு

கிளிநொச்சி, ஜூன் 12
அரச பதவிகளுக்கு விண்ணப்பிப் போருக்கான உளச்சார்பு வினாத்தாள்கள் தொடர்பான வழிகாட்டல் செயலமர்வுகள் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் பிரதி திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை மாவட்ட சமூக சேவைகள் அலுவலக கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளன. முதலாவது நிகழ்வு இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகும்.
நலன்விரும்பிகளின் நிதிப் பங்களிப்புடன் பொதுமுகாமைத்துவஉதவியாளர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான சிறப்பு வழிகாட்டல் செயலமர்வுகள் கடந்த மாதம் மாவட்ட பிரதேச செயலகங்களில் அனுவபமும் ஆற்றலுமிக்க வளவாளர்களால் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ந-ஜ-9)

### கூட்டம் ஒத்திவைப்பு

கண்டாவளை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை இடம்பெற இருந்தபோதும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்று கண்டாவளை பிரதேச செயலர் தெரிவித்தார்.
இதனுடன் தொடர்புடைய திணைக்களங்களின் தலைவர்களுக்கும், அமைப்புக்களுக்கும் வோறொரு திகதி அறியத்தரப்படும் என்று அவர் தெரிவித்தார். (ந-10)

## இறுதிப் போரில்:
# தாயைப் பறிகொடுத்த பள்ளியில் தனயனுக்கு முதல் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 12
இறுதிப் போரில் இடம்பெயர்ந்து, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் தங்கியிருந்த போது ஷெல் தாக்குதலில் அந்தப் பாடசாலையிலேயே தனது தாயை இழந்த மாணவனுக்கு அதே பாடசாலையிலேயே, முதலாவது ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்கு விஞ்ஞானப் பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமனம் வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வைத்து, அரியாலையைச் சேர்ந்த வாமதேவன் சஞ்சீவன் என்ற இளைஞனுக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கே மேற்படி இளைஞனுக்கு நியமனம் கிடைக்கப் பெற்றுள்ளது.


கோப்புப்படம்

2009 ஆம் ஆண்டு இறுதிப் போரின்போது வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து மேற்படி பாடசாலையில் குடும்பமாக தங்கியிருந்துள்ளனர். 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி, ஷெல் தாக்குதலில் சஞ்சீவனின் தயார் உயிரிழந்திருந்தார்.
இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்கால் சென்று, அங்கிருந்து முகாமில் தங்கியிருந்து பின்னர் படித்துப் பட்டதாரியாகிய சஞ்சீவனுக்கு கல்வி அமைச்சு, அவரது தயாரைப் பறிகொடுத்த பாடசாலையிலேயே நியமனம் வழங்கியுள்ளது.
இந்த விடயம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனின் கவனத்துக்குகொண்டு செல்லப்பட்டுள்ளது. நியமனம் வழங்கும் போது, இவ்வாறான பின்னணிகள் தொடர்பில் ஆராய்வதில்லை என்றும், இருப்பினும் குறித்த இளைஞனின் மனநிலை கருதி, அதே வலயத்தில் வேறு பாடசாலை மாற்றி வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று, கல்வி அமைச்சின் செயலர் குறிப்பிட்டுள்ளார். (5-101)

# மலத்தியோனை விற்கும் வர்த்தகர்கள் மீது வழக்கு

## சுகாதாரத் திணைக்களம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 11
மலத்தியோன் பூச்சி கொல்லிப் பவுடர் இலங்கை அரசினால் தடை செய்யப்பட்டுள்ளது. அதனை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
இவ்வாறு யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.
இது தொடர்பில் திணைக்களத் தகவல்களில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,
இலங்கை அரசினால் தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள பொருள்களைச் சட்ட விரோதமாக வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்வது கண்டு பிடிக்கப்பட்டால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.
மலத்தியோன், புற்களை அழிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ரவுண்டப் போன்ற இரசாயனப் பொருள்களைக் கடைகளில் பதுக்கி வைத்து தற்பொழுதும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகப் பொது மக்கள் சார்பில் இருந்து எதாவது முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையம் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் சட்ட விரோதமான முறையில் இவ்வாறான பொருள்கள் விற்கப்படுவதை அறிந்தால் உடனடியாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரசேவைகள்திணைக்களத்துக்கு நேரடியாகவோ அல்லது 021 222 2278 என்ற அலைபேசி இலக்கத்துக்கோ முறைப்பாடுசெய்ய முடியும் என்றுள்ளது. (4-8)

# பள்ளிக்குடாவில் 64 குடும்பங்கள் நிரந்தர வீடு தருமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 11
கிளிநொச்சி பள்ளிக்குடா கிராமத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளடங்கலாக 64 குடும்பங்களுக்கு இதுவரை நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர் .
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் பள்ளிக்குடா கிராமம் உள்ளது. அங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போதும் இதுவரை 64 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.
இதில் போரால் பாதிக்கப்பட்டவர்களும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களும் அடங்குகின்றனர். இது தொடர்பாக பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளருக்கு தெரியப்படுத்தியிருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.
"பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் நீண்ட வகைப்படுத்தல் மற்றும் புள்ளியிடலின் முறையில்தான் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு 138 புதிய வீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் சிறப்புத் தேவையடையோருக்கு 38 வீடுகளும் 100 சாதாரண வீடுகளும் கிடைத்துள்ளன.
புள்ளியிடல் முறைமையின் கீழ் 14 புதிய வீடுகள் குறித்த கிராமத்துக்குக் கிடைத்துள்ளன. இதில் பெண் தலைமைத்துவ குடும்பம் என்பது பெரும்பாலும் தனிநபர் உள்ள வீடாக இருக்கலாம். இவர்களுக்குப் புள்ளியிடலில் உள்ள தாக்கம் காரணமாகத்தான் வீடுகள் வழங்கப்படவில்லை. பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் பொருத்து வீடுகளுக்காக ஆயிரத்து 400 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. புதிதாக வீடுகள் வருகின்றபோது வீடுகள் கிடைக்கப் பெறாதவர்களுக்கு வழங்கப்படும் என்று பூநகரி பிரதேச செயலாளர் தெரிவித்தார். (4-6)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் பள்ளிக்குடா கிராமம் உள்ளது. அங்கு மீள்குடி யேற்றம் செய்யப்பட்ட போதும் இதுவரை 64 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

## காலநிலையும் கைகொடுத்திருந்ததால்
# யாழ்ப்பாணத்தில் டெங்குத் தொற்றுக் குறைந்தது
## சுகாதார சேவைகள் திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 12
யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. கடந்த மாதங்களுடன் ஒப்பிடுகையில் டெங்குத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. மழை குறைந்து காலநிலை கைகொடுத்தமையும் இதற்கு ஒரு காரணம் என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.
இது தொடர்பாக அவர்கள் தெரிவிக்கையில், கடந்த மாதங்களில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டிருந்த டெங்கு நோயின் தாக்கம் தற்பொழுது குறைவடைந்துள்ளது. அத்துடன் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்ட நோயாளர்களாக யர்ழ்ப்பாணம் போதனா வைத்தியசாலியில் கணிசமான அளவினர் மட்டுமே தற்போது அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். தற்போதைய காலநிலையின் காரணமாக டெங்கு நுளம்புக்களின் பெருக்கம் குறைவடைந்துள்ளது. டெங்கு நுளம்புகள் குறைவடைந்துள்ளதால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் மாவட்டத்தில் குறைவ டைந்துள்ளது. தற்பொழுதும் டெங்கு தொடர்பாக விழிப்பு ணர்வுகள் மற்றும் டெங்கு தோற்று அபாயம் உள்ள இடங்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்டு வருகின்றன.
யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்குத் தொற்றுத் தொடர்பில் அவதானிக்கப்பட்டதில் கடந்த ஜனவரி மாதம் 558 பேரும், பெப்ரவரி மாதம் 483, மார்ச் மாதம் 880, ஏப்ரல் மாதம் 492, மே மாதம் 307 பேரும் பதிவாகியுள்ளனர் என்று சுகாதார திணைக்களபுள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன. யாழ்ப்பணத்தில் டெங்கு தாக்கம் கணிசமாக குறைந்தமைக்கு முக்கிய காரணியாக மழை வீழ்ச்சி இன்மையால் நுளம்பின் பெருக்கம் ஏற்படவில்லை. இதன் காரணமாகவே டெங்கு தொற்று தற்பொழுது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்று சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (4-8)

# தோற்றுப்போன அரசியல்வாதிகளில் சிலர் மக்களைக் குழப்பிப் பரப்புரை

## கூட்டமைப்பு மீதான விமர்சனம் அதனால்தான் என்கிறார் சாந்தி எம்.பி.

முல்லைத்தீவு, ஜூன் 12
மக்களால் நிராகரிக்கப்பட்ட அல்லது தோற்றுப்போன முன்னாள் அரசியல்வாதிகள் சிலர் மக்களைக் குழப்புகின்ற வகையில் பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர்.
அதனால்தான் மக்கள் கூட்டமைப்பை விமர்சிக்கின்ற நிலை காணப்படுகிறது என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
"என்னைப் பொறுத்த வரையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீதான விமர்சனம் என்பது மக்கள் விமர்சிக்கின்றார்களா அல்லது மக்களை விமர்சிக்க வைக்கச் செய்யப்படுகின்றதா என்ற ஒரு கேள்வியையே முன்வைக்கவேண்டியுள்ளது. கூட்டமைப்பு மீது மக்கள் நம்பிக்கை வைத்தமையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆணைவழங்கி யிருக்கிறார்கள்.
கூட்டமைப்பு அதில் இருந்து நழுவிப் போகவில்லை. துரோகம் செய்யவில்லை என்பதும் உண்மை.



எங்கள் மக்கள் ஏற்றுக் கொள்ளாத, எங்களுடைய மக்களுக்கு திருப்தியளிக்காத எந்தவொரு தீர்மானத்தையும் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளாது என்று எங்களுடைய சம்பந்தன் ஐயா அடிக்கடி கூறுவார். இந்த ஆட்சி மாற்றத்தின் பின்புதான் தமிழர்களைப் பொறுத்தவரையில் இரண்டு காரியம் கைகூடியிருக்கின்றது. இலங்கையின் இரண்டு பெரும்பான்மை முதன்மைக் கட்சிகள் ஒன்றிணைந்து இருப்பது. இரண்டாவது பன்னாட்டுச் சமூகம் தமிழ் மக்களுக்கான உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஐக்கியநாடுகள் சபையின் மனிதவுரிமைப் பேரவை ஊடாக நடவடிக்கைகளை எடுத்தது. இதனை மக்கள் நன்றாக விளங்கிக் கொண்டு சரியாகக் கையாள வேண்டும்.
இதைக் குழப்பு கின்ற வகையில் தேர்தலில் தோற்றுப்போன சிலர் அல்லது மக்களால் நிராகரிக்கப்பட்ட முன்னாள் அரசியல்வாதிகள் மக்களைக் குழப்பு கின்ற வகையில் பல பரப்புரை செய்வதனால்தான் மக்கள் கூட்டமைப்பை விமர்சிக்கின்ற ஒரு நிலை காணப்படுகிறது. அதுவே உண்மை, என்றார். (4-21)

# கட்டார் அசாதாரண நிலை இலங்கைக்கும் பாதிப்பா?

## சில வாரங்களில் தெரியும் என்கிறார் ஹர்ஸ டி சில்வா

கொழும்பு, ஜூன் 12

கட்டாரில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை இலங்கைக்கு எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தும் என்று இன்னும் ஓரிரு வாரங்களில் தெரிய வரும் என்று பிரதி அமைச்சர் ஹர்ஸ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐந்து முஸ்லிம் நாடுகள் கட்டாருடனான இராஜதந்திர உறவை துண்டித்ததைத் தொடர்ந்து இலங்கையிலும் ஒருவகையான பதற்றம் ஏற்பட்டுள்ளது. அந்த நாட்டில் இலங்கை தொழிலாளர்கள் 1.5 லட்சம் பேர் தொழில் புரிகின்றனர். அவர்களின் தொழிலுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சம் இலங்கையர்கள் மத்தியில் நிலவுகின்றது.

கட்டாரில் ஏற்பட்ட இந்த அசாதாரண நிலமையானது நாம் நினைத்துப் பார்க்காத ஒன்றாகும். எப்படி இருப்பினும், அது நடந்துவிட்டது. இந்த நிலமை அங்கு தொடர்ந்து இருக்கும் என்று சொல்ல முடியாது.

ஈரான் மற்றும் ஐ.எஸ் பயங்கரவாதிகளுக்குக் கட்டார் ஆதரவு வழங்குகின்றது என்று குற்றம் சுமத்தியே முஸ்லிம் நாடுகள் கட்டாருடனான உறவைத் துண்டித்துக் கொண்டன.

உண்மையில், முஸ்லிம் நாடுகளிடையே பிளவுகள் ஏற்படுவது ஆரோக்கியமான ஒன்றல்ல. ஏனைய நாடுகளின் பொருளாதாரத்திலும் அது நிச்சயம் தாக்கம் செலுத்தும்.

கட்டாருடனான உறவைத் துண்டிப்பதாக அந்த நாடுகள் அறிவித்தவுடனேயே இலங்கையிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன.

கட்டார் ரியாலை மாற்றுவதற்கு கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் இயங்கும் வங்கிகள் மறுப்புத் தெரிவித்தன.

மத்திய வங்கி இப்படியொரு முடிவை எடுக்கவில்லை. அச்சத்தால்தான் சில வங்கிகள் இந்த முடிவை எடுத்தன. கட்டார் நாணயத்துக்கும் தடை விதிக்கப்பட்டுவிடுமோ என்று பயந்துகொண்டுதான் அந்த வங்கிகள் பணத்தை மாற்றுவதற்கு மறுத்தன.

இருந்தாலும், கட்டாரின் நிலமை உண்மையில் இலங்கைப் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துமா, அங்கு தொழில் புரியும் எமது நாட்டவர்களின் தொழிலுக்கு ஆபத்து ஏற்படுமா என்று இப்போது எதுவும் சொல்ல முடியாது. இன்னும் ஓரிரு வாரங்களில் உண்மை நிலைமை தெரிய வரும்.

சாதாரண நிலமையை ஏற்படுத்துவதற்கு அங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதால் சற்று பொறுமையுடன் இருந்து அனைத்தையும் அவதானித்துப் பார்ப்போம்.

கட்டாரின் நிலமை வழமைக்குத் திரும்புவதே அனைவருக்கும் நல்லது என்றார். (த-3)

## பிச்சையெடுக்கும் சிறுவர்களைப் பிடிப்பதில் பொலிஸார் தீவிரம்

### மூன்று மாதங்களில் 18 பேர் கைது

கொழும்பு, ஜூன் 12

கொழும்பிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் பிச்சையெடுக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகமாகியிருப்பதால் அவர்களைப் பிடிப்பதற்கான தீவிர நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களில் 18 சிறுவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டனர் எனவும், இவர்கள் மூலமாக இவர்களைப் பிச்சையெடுக்கும் தொழிலில் ஈடுபடுத்துபவர்களைக் கைதுசெய்து சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த மூன்று மாதங்களில் கைதுசெய்யப்பட்ட 18 சிறுவர்களில் நால்வர் சிறுவர் காப்பகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர். 14 பேர் அவர்களது பெற்றோர்களின் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மகளிர் சிறுவர் பாதுகாப்புப் பொலிஸ் பிரிவின் தலைமையகத்தாலும் அதன் 42 கிளை அலுவலகங்கள் மூலமாகவும் பிச்சை யெடுக்கும் சிறுவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கை தொடரும் எனவும் பிரியந்த ஜயக்கொடி குறிப்பிட்டார். (த)


## கண்ணீர் அஞ்சலி



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட

**சூசைப்பிள்ளை டீனல் சந்திரன்**

06.06.2017 ஆம் திகதி இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். பிரிவால் துயருறும்.

ஜடா, இமெல்டா, ஜெயா (சகோதரர்கள்)

## மரண அறிவித்தல்



**யோகரத்தினம் தஜேந்திரன் (பவா)**

(சாரதி - மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி, கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான பொருளாளர், கணேசபுரம் சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலய செயலாளர்)

இல.55/4, கணேசபுரத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட யோகரத்தினம் தஜேந்திரன் (பவா) 10.06.2017 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோகரட்ணம் - இந்திராணி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற குலசேகரம் - சரோஜினிதேவி தம்பதியரின் மருமகனும், தட்சலாவின் பாச மிகு கணவரும், தயூரா (2016 - விஞ்ஞானப் பிரிவு மாணவி - கிளி / புனித திரேசா பெண்கள் கல்லூரி), டிதுசன் (தரம் -08 - மாணவன் - கிளி / கிளிநொச்சி மகா வித்தியாலயம் ), ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜொஜேந்திரன் (ஜொஜே), ராஜேந்திரன் (ரயூ) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசிகலா (சுவிஸ்), சந்திரசேகரம் (சந்திரன் - சுவிஸ்), குணசேகரம் (சேகர் - சுவிஸ்), வஸ்தலா (பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கிளிநொச்சி), பிரமிலா (லண்டன்), கைலாசபதி (பவா - வட்டுக்கோட்டை), விஜயலக்சுமி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (12.06.2017) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 127 0470 / 077 730 4354

## மரண அறிவித்தல்கள்

**சண்முகம் இராமநாதன்**



நல்லூர் சங்கிலியன் வீதியைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை கில்னர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் இராமநாதன் . நேற்று (11.06.2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - தவமணிதேவி தம்பதியரின் மகனும், வரதாம்பிகையின் அன்புக் கணவரும், ஜீவரட்ணம் (இத்தாலி), அருமைநாயகம், பத்மநாதன், சச்சிதானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காயத்திரி, ராம்தீபன் (நிர்வாக உத்தியோகத்தர் கரிகணன் தனியார் நிறுவனம்), ராம்குமரன், ராம்ஜி, ராம் கார்த்திகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2017) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணிய ளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

187/11, கில்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

077 011 1034



தோற்றம் 16 . 03 . 1946

மறைவு 10 . 06 . 2017

**கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு**

**(அகில இலங்கை சமாதான நீதிவான் - ஓய்வுபெற்ற கிராம சேவகர் )**

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், சுதுமலை மற்றும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட அகில இலங்கை சமாதான நீதிவானும் ஓய்வுபெற்ற கிராம சேவகருமான (கந்தரோடை) கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு 10.06.2017 சனிக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இராசமலர் தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்வமாணிக்கம் - அற்புதம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும், கலைவாணியின் பாசமிகு கணவரும், தயந்தன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), நேசகோபன் (கணக்காளர் - கொழும்பு), அரவிந்தன் (பணிகள் தலைமை முகாமையாளர் மற்றும் விரிவுரையாளர் - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாமினியின் (நிர்வாக உத்தியோகத்தர் - சிங்கப்பூர்), அன்பு மாமனாரும், ஆகாஷியின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தனபூபதி , காலஞ்சென்ற தனபாக்கியவதி (ஆசிரியர்), அகிலேஸ்வரி (பிரான்ஸ்), தனபாலசிங்கம் (கொழும்பு), ரஞ்சிதமலர் ( பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மகேந்திரன் (நில அளவையாளர்), காலஞ்சென்ற உமாமகேஸ்வரன் (நில அளவையாளர்), சிவனேஸ்வரி, ஜெயச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ஜெனித்தா (பிரான்ஸ்), ஜெனினா (பிரான்ஸ்), அஜிலியன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டர்சனா, லுகர்னா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக மகிந்த மலர்ச்சாலையில் (கல்கிசை) வைக்கப்பட்டு. இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2017) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை பொதுமயானத்துக்கு பிற்பகல் 4.30 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:- குடும்பத்தினர்.

077 990 6199, 011 272 3570, 077 937 1836, 077 977 8907

# ரத்துபஸ்வெல சூட்டுக்கு கோத்தாவே பொறுப்பு

## இடதுசாரி நிலையம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 12
மகசின் சிறைச்சாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு, ரத்துபஸ்வெலவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு ஆகிய இரு சம்பவங்களும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாயவின் உத்தரவுக்கு அமையவே இடம்பெற்றதாக இடதுசாரி நிலையம் குற்றம் சாட்டியுள்ளது.

மக்கள் சக்தி அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஊடகவியளார் மாநாட்டில் கருத்து வெளியிட்ட இடதுசாரி நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் சமீர பெரேரா, குற்றமிழைத்தவர்களை விட குற்றங்களுக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வசீம் தாஜுதீன் படுகொலை செய்யப்பட்டதாக இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னரே உறுதியானது அதற்கு முன்னர் அது ஒரு விபத்து என்றே கூறப்பட்டது. இது தொடர்பில் விசாரணை செய்ய அப்போதைய மகிந்த ஆட்சியாளர்கள் தவறிவிட்டனர். மகசின் சிறைச்சாலையில் பெயர் குறிப்பிட்டு 26 பேர் படுகொலை செய்யப்பட்டனர். அது தொடர்பில் வழக்கு விசாரிக்கப்பட்டதா? ஆணைக் குழுவின் அறிக்கை எங்கே? கோத்தபாய ராஜபக்சவின் தேவைப்பாட்டுக்கு அமையவே படுகொலை செய்யப்பட்டார்கள். அது தொடர்பில் யாரும் பேசவில்லை. ஒரு குடும்ப உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செய்த குற்றங்களை மூடிமறைக்க முயன்றனர்.

எனினும் அது தொடர்பிலேயே முதலில் விசாரணை செய்ய வேண்டும். எனினும் அரசின் வேகம் போதவில்லை. அது தொடர்பில் எமக்குப் பிரச்சினை இருக்கின்றது.

அதுபோல் கடந்த காலங்களில் இடம்பெற்ற கடத்தல்களுக்கு நான் மட்டும் பொறுப்பல்ல எனவும், முன்னாள் இராணுவத் தளபதி உள்ளிட்டவர்களையும் விசாரிக்க வேண்டுமெனவும் கோத்தபாய கூறுகின்றார்.

ஆகவே தான் குற்றவாளி என்பதைஅவர்நிராகரிக்கவில்லை. கடந்த காலத்தில் ரத்துபஸ்வெல துப்பாக்கிச் சூடு தொடர்பில் கம்பஹா நீதிமன்றில் முன்னாள் பிரிகேடியர் அளித்துள்ள வாக்குமூலத்தில், இது எனது தனிப்பட்ட விருப்பத்தில் நடைபெற்ற விடயமல்ல. எனது தேவைக்காக மேற்கொண்ட விடயமல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்குப் பொறுப்புக் கூற வேண்டியது நானல்ல. எனக்குக் கிடைத்த உத்தரவுக்கு அமைய நான் செயற்பட்டேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த உத்தரவை பிறப்பித்தது யார்? அப்பேரீது பாதுகாப்பு அமைச்சில் பொறுப்பாக இருந்தது யார்? கோத்தபாய ராஜபக்ச, அப்போதைய இராணுவத்தளபதி யார் தயா ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சர் யார் மகிந்த ராஜபக்ச. எமக்குத் தெரியும் மஹிந்த ராஜபக்ச கோத்தபாயவிடம் கேட்காமல் எந்தக் காரியத்தையும் செய்ய மாட்டார்.

ஆகவே கோத்தபாயவின் அறிவுறுத்தல் இல்லாமல் ரத்துபஸ்வெலவில் துப்பாக்கிச் சூடு நடத்த வாய்ப்பில்லை.

கோத்தபாயவிற்கு ஏன் இவ்வளவு பயம்? ஏன் அது தொடர்பில் விசாரணை செய்ய இந்த அரசாங்கம் தயங்குகின்றது?- என்றார். (த)

# சிறப்புப் புலனாய்வு பிரிவு உருவாக்கம்

## நிதி மோசடிகளைக் கண்டறிந்து அரசுக்கு அறிக்கையிடுவதற்கு

கொழும்பு, ஜூன் 12
அரச நிதி மையங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் மோசடி முறைகேடுகளைக் கண்டுபிடித்து அறிக்கை சமர்ப்பிக்கப் புதிய புலனாய்வு பிரிவுவொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

இந்தப் பிரிவினால் பெறப்படும் தகவல்கள் நிதியமைச்சர் மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கும் வகையில் நிதியமைச்சர் மங்கள சமரவீரவால் இந்தப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான சிறப்புப் புலனாய்வு பிரிவுகள் பல வெளிநாடுகளில் இயங்கி வருகின்றன. சிங்கப்பூர் போன்ற நாடுகள் தங்கள் நாட்டில் இடம்பெறும் நிதி மோசடிகளைக் குறைத்துக் கொள்வதற்காக இவ்வாறான புலனாய்வுப் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளன.

தற்போது இலங்கையிலும் நிதி மோசடி விசாரணைப் பிரிவு இயங்கி வருகின்றது. அங்கு ஏதாவது ஒரு மோசடி தொடர்பில் முறைப்பாடு கிடைத்தால் மாத்திரமே விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அரச நிதி நடவடிக்கை தொடர்பில் எந்த நேரமும் அவதானத்துடன் இருப்பதற்குப் புலனாய்வுப் பிரிவு அவசியமாகியுள்ளது.

பிரேமதாச ஆட்சிக்காலத்தில் லொரன்ஸ் மாபியா என்ற பெயரில் சிறப்புப் பொலிஸ் பிரிவு இயங்கியது. அத்துடன் அமைச்சில் இடம்பெறும் முறைகேடுகள் மற்றும் பலவீனங்கள் அரச தலைவருக்கு அறிக்கையிடப்பட்டன.

அது அரசியல் கோபங்களை தீர்த்துக் கொள்வதற்காக அரச தலைவர் பயன்படுத்திக் கொண்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. எப்படியிருப்பினும் புதிய பிரிவில் நிதி குற்றம் தொடர்பில் சிறப்பு அறிவுடைய பொலிஸ் அதிகாரிகள், வங்கி நடவடிக்கை மற்றும் நிதி சந்தை நடவடிக்கை தொடர்பில் பலரின் உதவி கிடைத்துள்ளது.

அத்துடன் இதற்கு வெளிநாட்டு நிபு ணர்களின் சிறப்பு ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள நிதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (த-5)

# இன்னும் 10 வருடங்களில் லயன்கள் ஒழிக்கப்படும்

கொழும்பு, ஜூன்12
மலையகப் பெருந்தோட்டங்கள் அனைத்திலும் இன்னும் 10 வருடங்களில் லயன்கள் இல்லாமல் செய்யப்படும் என பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவரும், முன்னாள் பிரதியமைச்சருமான வடிவேல் புத்திரசிகாமணி தெரிவித்தார்.

ல்யன் வாழ்க்கை முறை ஒழிக்கப்பட்டு அனைத்து மக்களுக்கும் தனிவீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கண்டி இராகலை சூரியகாந்தி தோட்டத்தில் 35 வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல்நடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்திய அரசு கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் 4000 வீடுகளை அமைப்பதற்குத் திட்டமிட்டது. அந்தத்திட்டம் நான்கு வருடங்களுக்குப் பின்னர் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளது. அமைச்சர் திகாம்பரத்தின் முயற்சியால் இன்று வீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல் நடப்படுகின்றது. 1334 வீடுகள் தற்பொழுது கட்டப்பட்டு வருகின்றன - என்றார். (த-ய)

# 2 தொலைக்காட்சி நிறுவனங்களை மூடுவதற்கு மைத்திரி அரசு திட்டம்

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 12
ஊடக சுதந்திரம் பற்றி வாய் கிழியப் பேசி வரும் இந்த அரசு தனக்குச் சாதகமாகச் செய்திகளை வெளியிடாத இரண்டு தொலைக்காட்சி நிறுவனங்களை மூடிவிடுவதற்குத் திட்டமிட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ஆட்சியில் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர் என்றும் கடத்தப்பட்டனர் என்றும் ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டன என்றும் இந்த அரசு கூறி வருகின்றது. அது தொடர்பிலான பட்டியல் இருப்பதாகவும் சொல்கிறது. அப்படியென்றால் ஏன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றது?



இந்த அரசு ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதாகக் கூறி வருகின்றபோதிலும், மறைமுகமாக அது ஊடக சுதந்திரத்தை நசுக்குவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஊடக நிறுவனங்களின் பெயர்களைச் சொல்லி பகிரங்கமாக விமர்சிக்கின்றார், ஏசுகின்றார் மிரட்டல் விடுக் கின்றார்.

அம்பாந்தோட்டையில் ஊடகவியலாளர் கடற்படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்தை நாம் அறிவோம். அது தொடர்பில் அரசு எந்தவொரு நடவடிக்கையையும்எடுக்கவில்லை. இப்போது அமைச்சர் ஜோன் அமரதுங்க ஊடகவியலாளர்களைத் தாறுமாறாகத் திட்டித் தீர்த்துள்ளார். சி.எஸ்என்தொலைக்காட்சி நிறுவனத்தின் அனுமதிப்பத்திரத்தை அரசுநீக்கிஅதன்மூலம்ஏனைய ஊடக நிறுவனங்களுக்கு மிரட்டல் ஒன்றை விடுத்துள்ளது.

இரண்டுபிரபல தொலைக்காட்சி நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்களை நீக்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. அந்த நிறுவனங்களுக்குக் கடிதங்களை அனுப்பி நாம் உங்களின் அனுமதிப் பத்திரங்களை ஏன் நீக்கக்கூடாது என்று விளக்கம் தாருங்கள் என்று ஊடக அமைச்சின் செயலாளர் கேட்டிருந்தார்.

அதற்கான விளக்கம் வழங்கப்பட்டுள்ளபோதிலும் ஊடக அமைச்சு எந்தப் பதிலும் சொல்லாமல் அமைதியாகவுள்ளது. இதன்மூலம் அந்த நிறு வனங்களை அரசுக்குச் சாதகமாக செயற்படுத்தத் திட்டமிடப்பட்டிருப்பது தெளிவாகின்றது.

இப்படித்தான் இந்த அரசின் ஊடக சுதந்திரம் இருக்கின்றது. வெளியே ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டு திரைமறைவில் அதை நசுக்கிக்கொண்டு இருக்கின்றது இந்த அரசு.

ஆகவே, ஊடக சுதந்திரம் பற்றிப் பேசும் அருகதை இந்த அரசுக்கு அறவே கிடையாது. நாம் ஊடக சுதந்திரத்தை நசுக்கினோம் என்று இவர்களால் குற்றம் சுமத்தவும் முடியாது- என்றார். (த-3)

# அரச நிறுவனங்களின் பணிப்பாளர் சபையினர் பதவி விலக மறுப்பு

அமைச்சரவையில் மாற்றங்கள் நடந்த பின்பும் பல அரச நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் பதவி விலக மறுப்புத் தெரிவித்துவருகின்றனர் என அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

மாற்றப்பட்ட அமைச்சர்கள் தங்களுக்கு விருப்பமானவர்களை பணிப்பாளர் சபைகளில் நியமிக்க முயற்சித்தபோதிலும் ஏற்கனவே இருக்கும் உறுப்பினர்கள் பதவி விலகத் தயாராக இல்லாததால் பல சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதாகவும், இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அரச தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த)

**உடன் விற்பனைக்கு**
சிறிய காலம் மட்டுமே பாவித்த நல்ல நிலையிலுள்ள NP BO XXXX இலக்கமுடைய Mahendra Centro Motor Bike உடன் விற்பனைக்கு
**077 853 6808**
**(9.00AM - 3.00 PM)**

**பாலா மல்ரி சென்ரர்**
சிறு நடுத்தர வியாபாரிகளுக்கு ஒரு சந்தர்ப்பம் நமது நாட்டில் மிக குறைந்த விலையில் 150/- ரூபா பெறுமதியான பாட்டாக்களை 100/- ரூபாவுக்கு எம்மிடம் பெற்றுக்கொள்ளும் அரிய சந்தர்ப்பத்தை அனைத்து வியாபாரிகளும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
**518, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.**
**021 490 0151**

**VACANCY**
யாழ் திருநெல்வேலி சந்தியை அண்மித்த பிரதேசத்தில் உள்ள பிரபல நகைக்கடை ஒன்றுக்கு
DATA ENTRY OPERATER பதவிக்கு
1. ஆண்கள் (வயது எல்லை 18 -25)
2. தகைமை (O/L . A/L)
3. கணினி அறிவு மிக முக்கியம்
4. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
பொருத்தமானவர்கள் தமது சுயவிவரக்கோவையை மேற்படி மின்னஞ்சல் முகவரிக்கு Rajjewel2002@gmail.com 16.06.2017 இற்கு முன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
**077 786 1677**

**செய்து கொடுக்கப்படும்**
யாழ். நகரில் உள்ள உங்கள் வீடுகளை புனரமைத்து கொள்ளவும் புதிய வீடுகளை கட்டிக்கொள்ளவும் எம்மை தொடர்பு கொள்க. நம்பிக்கையுடனும் உத்தரவாதத்துடனும் வேலைகள் செய்து தரப்படும்.
**077 045 4140 (ஜெரால்ட்)**

**வீடு வாடகைக்கு உண்டு**
யாழ் பல்கலைக்கழகம், யாழ் வைத்தியசாலையை அண்மித்து யாழ் பலாலி வீதியில் கெற்றப்போல சந்திக்கு அருகில் மூன்று அறைகள், சமையலறை, குளியலறை, வரவேற்பறை போன்றவற்றினை உள்ளடக்கியதான புதிய வீடு வாடகைக்கு உண்டு. (C 29187) (14)
**076 918 2942/ 076 664 5638**



# அரசியல் சுயநலத்தால் விடுபட்டுப் போனது தமிழ், முஸ்லிம் உறவு

*அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு*

செங்கலடி, ஜீன்12
தமிழர்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக சேர்ந்து வாழ வேண்டும். இரண்டு இனமும் பிட்டும் தேங்காயப்பூவும் போல எனப் பேசுகிறார்கள். ஆனால் தேர்தல் நோக்கங்களுக்காக, சுயநலனுக்காக அவர்களுடைய செயற்பாடுகளைப் பார்க்கின்றபோது ஒற்றுமையை நாங்கள் காணவில்லை.
இவ்வாறு வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.
தமிழர்களும் முஸ்லிம்களும் தமக்குள்ளே பிளவுகளை உருவாக்கிக்கொண்டு இருக்கக்கூடாது. இவ்வாறு தொடரும்பட்சத்தில் இரண்டு சமூகங்களுக்கிடையிலான உறவு ஒருபோதும் தழைத்தோங்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.
லங்கா சதொசவின் 378 ஆவது கிளை மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:
நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக நாங்கள் பொருளாதாரத்தை இழந்து, உறவுகளைப் பறிகொடுத்து அடுத்தவரிடம் கையேந்தும் நிலை உருவாகியுள்ளது. காணாமற்போனவர்களின் உறவுகள் வீதிகளில் தவம் இருக்கின்றார்கள். கடந்த காலங்களில் எமக்கு ஏற்பட்ட இழப்புகளைப் படிப்பினையாகக் கொண்டு எதிர்காலத்தில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் இணைந்து செயற்பட வேண்டும் -என்றார். (கு-ய-46)

# உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்படமாட்டாது

*செப்ரெம்பரில் திகதி அறிவிக்கப்படும் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த*

கொழும்பு. ஜீன் 12
உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுட்காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடைவதையடுத்து, தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
அதன்பின்னர் எக்காரணம் கொண்டும் தேர்தல்கள் பிற்போடப்படாது என்றும் அவர் கூறினார்.
சட்டவாக்கச் சபையின் தற்போதைய கட்டளைகள் மற்றும் அரசமைப்புக்கு அமைய, மக்கள் கருத்துக்கணிப்பு அல்லது நீதிமன்றத் தீர்ப்பொன்றினூடாக மட்டுமே தேர்தல் ஒன்றை நடத்தாமல் இருக்கமுடியும். வேறெந்த நடவடிக்கையினூடாகவும் அதனைச் செய்யமுடியாது.
வாக்காளர் பதிவுப் பட்டியலைத் தயாரிப்பதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.
நாட்டில் ஏற்பட்ட இடர் காரணமாக, வாக்காளர் பதிவுப்பட்டியலைத் தயாரிக்கும் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் ஜீலை மாதம் 31 ஆம் திகதியளவில் முடிவுறுத்தப்படும்.
உரிய மாவட்டச் செயலகங்களின் பரிந்துரைகளுடன் வாக்காளர் பட்டியல் வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (கு-ய)

## மூதூர் சிறுமிகள் வன்புணர்வு; பக்கச்சார்பற்ற விசாரணைக்கு அமைச்சர் மனோ பணிப்புரை

கொழும்பு. ஜீன்12
திருகோணமலையில் மூன்று சிறுமிகள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்றமுறையில் எவ்வித அரசியல் தலையீடுகளும் இன்றி விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று அமைச்சர் மனோ கணேசன் பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.
கிழக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட தாம் இந்தப் பணிப்புரையை விடுத்ததாக அவர் தெரிவித்தார்.
சிறுவர்கள் தொடர்பில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள நீதிமன்ற விசாரணைகளின்போது, சட்ட உதவிகளைத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (கு-ய)

# பதவியில் இருக்கும்போது சேவை செய்யவேண்டும்

*மட்டு. நீதிபதி கணேசராசா வலியுறுத்தல்*

கொக்கட்டிச்சோலை, ஜீன்12
உயர்பதவிகள் வகிப்பது முக்கியமானதல்ல. பதவி வகித்தால் சிறப்பான சேவையை மக்களுக்கு செய்ய வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி மா.கணேசராசா தெரிவித்தார்.
கொக்கட்டிச்சோலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்களுக்கான இலவச சட்ட ஆலோசனை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் அனுசரணையில், இலங்கை சட்டக்கல்லூரி இந்து மகாசபை சட்ட மாணவர்களால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய நீதிபதி, மக்களை அழைத்து அவர்களுடன் கலந்துரையாடுகின்ற போது வித்தியாச மான அனுபவங்கள் ஏற்படும். மக்களுக்கான சேவைகளை விரிவுபடுத்த வேண்டும். வெறுமனே பதவிகளை மாத்திரம் வகித்தால் போதாது. எங்களது பணிகளை விரிவுபடுத்த வேண்டும் என்பதில் அக்கறையாகசெயற்படவேண்டும். முல்லைத்தீவு மாவட்டம் மிகவும் மோசமாகப் புறக்கணிக்கப்பட்டிருந்தபோது, சட்ட உதவிகளை வழங்கியிருந்தோம். அதனை இன்றும் மறவாது இருக்கின்றனர், அப்பிரதேசத்து மக்கள். வளர்ந்து வருகின்ற சட்டத்தரணிகள், மக்களுக்காக சேவைகளை ஆற்றவேண்டும். உயர்பதவிகள் வகிப்பது முக்கியமான விடயமல்ல. பதவிவகித்தால் சிறந்த சேவையை மக்களுக்காக செய்யவேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் பதவியில் இருந்தால் என்ன, இறங்கினால் என்ன, எந்தவொரு பிரயோசனமும் இல்லை. மக்களுக்காக சேவை செய்ய திட்டங்களை பயன்படுத்த வேண்டும்- என்றார். (கு-ய)

# தபாலகங்களை வெளிநாட்டவர்களுக்கு தாரைவார்ப்பதற்கு வலுக்கிறது எதிர்ப்பு

*இன்று கொழும்பில் மாபெரும் போராட்டம்*

கொழும்பு, ஜீன் 12
123 வருடங்கள் பழைமை வாய்ந்த நுவரெலியா பிரதான தபாலகக் கட்டடத்தை ஹோட்டல் நிர்மாணத் துக்காக இந்தியாவுக்கு வழங்குவதற்கு அரசு மேற்கொண்டிருக்கும் முயற்சிகளுக்கு தபால்துறை தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் மற்றும் நுவரெலியா பிரதேசவாசிகள் ஒன்றிணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.
நுவரெலியா தபாலகத்தைப் போலவே புராதன பெருமை வாய்ந்த கொழும்பு கோட்டை மற்றும் காலி தபாலகங்களையும் அரசு ஹோட்டல் நிர்மாணத் துக்காக வெளிநாட்டவர்களுக்குத் தாரைவார்ப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதென ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசங்களை எழுப்பினர்.
இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகளின் சங்கத் தலைவர் எஸ்.காரியவசம், மக்களின் இவ்வாறான தேசிய சொத்துகளை வெளிநாட்டு வியாபாரிகளுக்கு விற்பதை ஒருபோதும் அனுமதிக்கமுடியாதென்றும், இது தொடர்பில் மாபெரும் கண்டனப் போராட்டமொன்று இன்றும், எதிர்வரும் 26ஆம் திகதியும் கொழும்பில் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (கு)

## டெங்கு ஒழிப்புப் பணிகள் முப்படையினரிடம் ஒப்படைப்பு

வெள்ளப்பெருக்காலும், மண்சரிவாலும் ஏற்பட்ட அனர்த்த நிலை சீரானதும் தீவிரமாகத் தலைதூக்கியுள்ள டெங்கு மற்றும் ஏனைய தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு முப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கமைவாக டெங்கு ஒழிப்புப் பணிகளில் சுகாதார அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகளுக்கு முப்படையினரும் ஒத்துழைப்பு வழங்கவுள்ளனர் எனவும், வெள்ளம் வடிந்துள்ள கொழும்பு, இரத்தினபுரி, களுத்துறை ஆகிய பகுதிகளில் டெங்கு நோய் மீண்டும் தலைதூக்கியிருப்பதாலேயே முப்படையினரின் இந்த சிறப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். (கு)

# பாதை ஒழுங்கு முறை இன்று முதல் கட்டாயம்

கொழும்பு, ஜீன் 12
கொழும்பிலும் அதை அண்மித்த பகுதிகளிலும் உள்ள பிரதான பாதைகளில் பாதை ஒழுங்கு முறை கட்டாயமாக்கப்பட்டிருப்பதாகவும், அந்த ஒழுங்கை மீறுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொலிஸ் தலைமையகத்தின் போக்குவரத்துப் பிரிவு தெரிவித்துள்ளது. சிறப்பாகக் காலி வீதி, சிறிஜயவர்தனபுர பிரதான வீதி உட்பட கொழும்பை நோக்கிவரும் பிரதான வீதிகளில் இந்தச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது எனவும், இதற்காகப் பொலிஸ் மோட்டார் சைக்கிள்கள், பொலிஸ் கார்கள், கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்ட பொலிஸ் வாகனங்கள் ஆகியவற்றுடன் மேலதிக பொலிஸாரும் பணியில் அமர்த்தப்படுவார்கள் என பொலிஸ் தலைமையக உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (கு)




யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை
அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில்

மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2017

| | | |
|---|---|---|
| 13.06.2017 | - செவ்வாய்க்கிழமை | - கொடியேற்றம் - 11.00 மணி |
| 17.06.2017 | - சனிக்கிழமை | - தண்டிகை திருவிழா - மாலை 6.00 மணி |
| 19.06.2017 | - திங்கட்கிழமை | - வேட்டைத் திருவிழா - மாலை 6.00 மணி |
| 20.06.2017 | - செவ்வாய்க்கிழமை | - சப்பறத்திருவிழா - மாலை 6.00 மணி |
| 21.06.2017 | - புதன்கிழமை | - தேர் உற்சவம் - முற்பகல் 10.00 மணி |
| 22.06.2017 | - வியாழக்கிழமை | - தீர்த்தோற்சவம் - முற்பகல் 10.00 மணி |
| 23.06.2017 | - வெள்ளிக்கிழமை | - பூங்காவனம் - மாலை 6.00 மணி |
| 24.06.2017 | - சனிக்கிழமை | - வைரவப் பொங்கல் - மாலை 6.00 மணி |

- ஆலய அறங்காவலர்கள் -

## அமெ. கப்பல் இலங்கையில்



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக ஒரு தொகை உதவிப் பொருள்களுடன் அமெரிக்கக் கடற்படையின் கப்பலொன்று இலங்கை வந்துள்ளது. இடரால் பாதிக்கபட்ட மக்களுக்கு அமெரிக்க கடற்படை ஏற்கனவே உதவிகளை வழங்கி வரும் நிலையில் நேற்று வந்துள்ள பயிற்றப்பட்ட படையினர் மேலும் பல மனிதாபிமான உதவிகளை வழங்கவுள்ளனர். (ற)

## இறந்த நிலையில் வயோதிப பெண் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

மண்டை தீவுப் பிரதேசத்தில் தனித்து வாழ்ந்து வந்த வயோதிபப் பெண்மணியொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் மண்டைதீவுப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. அதில் மண்டை தீவை சேர்ந்த செல்லப்பெருமாள் சரஸ்வதி (வயது 77) என்ற வயோதிபப் பெண்மணியே சடலமாக மீட்கப்பட்டார். சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. (ற-8)

# அரசு மௌனம் சாதித்தால் அடுத்த கட்ட நடவடிக்கை

## அமைச்சர் ரிசாத் எச்சரிக்கை

அம்பாறை, ஜூன் 12

எமது முஸ்லிம் சமூகத்தின் மீது தொடுக்கப்பட்டு வரும் இனவாத ரீதியானதாக்குதல்கள், செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. முஸ்லிம் பிரதிநிதிகள் எம் மக்களைக் காப்பதற்காக வேற்றுமையிலும் ஒற்றுமை கொண்டு ஒன்றுபட்டுள்ளோம். நம்பிய கூட்டரசின் மௌனம் தொடருமானல் அடுத்த கட்ட நடவடிக்கையைத் தீர்மானிக்க நாம் தயாராகவுள்ளோம்.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியத்தலைவரும், வர்த்தக, கைத்தொழில் அமைச்சருமான ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

முன்னாள் தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதித் தவிசாளருமான கலாநிதி எஸ்.எம்.எம் இஸ்மாயிலின் ஏற்பாட்டில் சம்மாந்துறையில் நடைபெற்ற இப்தார் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முஸ்லிம் சமுதாயம் இன்று இக்கட்டான நிலையில், துன்பதுயரங்களுக்கு உள்ளாகி வாழும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. உலக ரீதியிலும், தேசிய ரீதியிலும் முஸ்லிம்கள் வேதனைப்படும் நிலையிலுள்ளனர். நாம் நமது 2 ஆயிரம் பள்ளிவாசல் மிம்பர்களிலும் முழங்கி பிரார்த்தித்தும், உலமாக்கள், இளைஞர்கள், நமது ஊடக சமூகம் என்பனவும் பேராதரவு வழங்கியும் இன்றைய கூட்டரசை மலரச் செய்தோம்.

கூட்டரசிலும் முஸ்லிம்களுக்கு எதிரான, இனவாத ரீதியிலான செயற்பாடுகள் கோரத் தாண்டவமாடிவருவது தான் எம்மை வேதனையில் வாட்டிக் கொண்டிருக்கின்றது. ஒரு மத குருவும், ஒருசிலதிருடர் கூட்டமும் சிங்களவர்களையும், முஸ்லிம்களையும் மோத விட்டு முஸ்லிம்களை அடிமைப்படுத்துவதற்கு சதி செய்து வருவதுடன், முஸ்லிம்களின் பொருளாதாரத்தையும், நிம்மதி, அமைதியையும் அழித்து சீர்குலைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர்.

சட்டம், ஒழுங்கு தம்மை நம்பி ஆட்சிபீடமேற்றிய மக்களைக் காக்க வேண்டிய அரசு தீய செயற்பாடுகளைத் தொடரவிட்டு மௌனம் காத்து வருகின்றது.

சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியவர்கள் கூட இன்று உண்மை நிலை அறிந்திருந்தும் விதண்டாவாதம் பேசிக் கொண்டு எம்மக்களை வேதனையில் ஆழ்த்தியுள்ளனர். முஸ்லிம் சமுதாயத்தின் இருப்பு, பொருளாதாரம், என்பவற்றைக் கேள்விக்குறியாக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் தீய, இனவாத செயற்பாடுகளை இனியும் அனுமதிக்க முடியாது.

சில தினங்களுக்குள் முஸ்லிம்களுக்கெதிரான இனவாத செயற்பாடுகள் தொடர்பில் தலைமை அமைச்சரை நேரில் சந்தித்து, அவரது கவனத்துக்கும் கொண்டு வந்து விடிவைக் கோரவுள்ளோம். தொடர்ந்தும் இந்த நிலமை தொடருமானால், ஒன்றுபட்டுள்ள மக்கள் பிரதிநிதிகளாகிய, முஸ்லிம் அரசியல் தலைமைகளாகிய நாம், எம் மக்களுக்காக அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கத் தயாராகவுள்ளோம். முஸ்லிம் மக்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு. நல்லாட்சி அரசு மக்களைக் காக்க வேண்டும். காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ற-10-30)



தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான சாவற்கட்டு போட்டி நேற்று கொக்குவில் செம்பாட்டுப் பகுதியில் நடந்துள்ளது. போட்டியில் சாவற்கட்டுக்காக வளர்க்கப்பட்ட சேவல்கள் களத்தில் இறக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றன. (ற-8)

## சட்ட விரோதமாக வெட்டப்பட்ட மரக்குற்றிகளுடன் லொறி மீட்பு



கொழும்பு, ஜூன் 12

அனுமதிப் பத்திரமின்றி சட்ட விரோதமாக மரங்களை வெட்டி பாரவூர்தியில் ஏற்றிச் செல்ல முற்பட்ட இருவரை கினிகத்தேனப் பொலிஸார் கைது செய்தனர். கித்துல்கல மீகத்தென்ன வனப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மரக்குற்றியுடன் புறப்படத் தயாராகவிருந்த பாரவூர்தியைப் பொலிஸார் சுற்றி வளைத்தனர்.

கினிகத்தேனைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே பொலிஸார் சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களும், கைப்பற்றப்பட்ட மரக்குற்றியுடனான பாரவூர்தியும் ஹற்றன் மாவட்ட நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ)



## பவுஸர் கொளுவி இழுத்ததில் சரிந்தது தொலைபேசி கம்பம்

காரைநகர், ஜூன் 12

காரைநகர் அபிவிருத்திச் சபையின் குடிதண்ணீர் பவுசர் மீது தொலைத்தொடர்புக் கம்பம் சரிந்து வீழ்ந்துள்ளது. அதில் பவுசர் பலத்த சேதமடைந்ததுடன் பிரதான வீதியூடான போக்குவரத்தும் பல மணி நேரம் தடைப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் மூளாய் பிரதான வீதியில் இடம்பெற்றது. குடி தண்ணீரை ஏற்றிக்கொண்டு காரைநகரை நோக்கிப் பயணித்த காரைநகர் அபிவிருத்திச் சபையின் குடிதண்ணீர் பவுஸர் மூளாய் பிரதான வீதியில் பயணித்தது. அப்போது பாரஊர்தி ஒன்று அந்த வீதியில் திருப்ப முனைந்த போது தொலைபேசி வயரைக் கொளுவி இழுத்துள்ளது. ஒரே நேரத்தில் வீதியில் உள்ள தொலைபேசி கம்பங்கள் இரண்டு சரிந்து வீழ்ந்துள்ளன.

சம்பவத்தில் குடிநீர் பவுசர் சேதமடைந்தது. வாகன உதவியாளர் காயங்கள் எதுவுமின்றித் தப்பிக் கொண்டார்.

சம்பவம் நடந்த நீண்ட நேரத்துக்குப் பின்னரே பொலிஸாரும் சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தினரும் வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். தடைப்பட்ட போக்கு வரத்தையும் சீர்ப்படுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10-250)

# வறுமை, சீதனக் கொடுமைகளால் வேறு மதம் மாறும் தமிழ் பெண்கள்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து கிருஸ்ணபிள்ளை தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 12

இந்து மதத்தையும், தமிழினத்தையும் பேணிப்பாதுகாப்பதற்குரிய சட்டங்களில்லை. ஆதியும், அந்தமும் இல்லாத எமது மதமும், தமிழினமும் இருப்பதற்கு ஒரு நாடு இல்லை. பல தமிழ் பெண்கள் வறுமை தாங்க முடியாமலும், சீதனக் கொடுமைகளாலும் ஏனைய மதங்களைத் தழுவுகின்றனர். இவற்றுக்கெல்லாம் காரணம் நமது மதத் தலைவர்களும், என் போன்ற மக்கள் தலைவர்களும், தனவந்தர்களும், என நான் கருதுகின்றேன்.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான ஞானமுத்து கிருஸ்ணபிள்ளை தெரிவித்தார்.

இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வுக் கொடி வாரத்தை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்ட திருஞான சம்பந்தர் குரு பூசைப் பேரணி நேற்று நடைபெற்றது. பேரணி முனைத்தீவு மற்றும், பெரியபோரதீவு ஆகிய இடங்களிலிருந்து ஆரம்பமாகி கேவில்போரதீவு கண்ணகியம்மன் ஆலயத்தை வந்தடைந்தது. ஆலயத்தில் திருஞான சம்பந்தர் குரு பூசை நடைபெற்று, மாணவர்களின் தேவார பாராயணங்களும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

கடந்த காலத்தில் சைவ சமயத்திலும், தமிழினத்திலும் எவற்றையெல்லாம் இழந்தோமோ அவற்றையெல்லாம் எதிர் காதலத்தில் மீளப் பெறவேண்டும். அறநெறிப் பாடசாலைகளின் பணியை மேன்மேலும் பல மடங்கு அதிகரிக்கச் செய்து, அவற்றினூடாக மாணவர்கள் அனைத்து நெறிகளையும் அறிந்தவர்களாக உருவாக்கப்பட வேண்டும்.

ஏனைய மதங்களைப் பேணிப்பாதுகாப்பதற்கு அந்த மதங்களைச் சேர்ந்த மக்கள் அவர்களின் மக்கள் பிரதிநிதிகள், மதப்பெரியார்கள், தனவந்தர்கள், கல்விமான்கள் என அனைவரும் ஒன்றிணைந்து ஒரு அமைப்பை உருவாக்கி வைத்துள்ளார்கள். தேவையில்லாத ஆடம்பரங்களை கோயில்களுக்குச் செய்யும் எமது இந்து மதத்தவர்கள் அறநெறி ஆசிரியர்களுக்கு மனம்குளிரக் கூடிய வேதனைத்தை வழங்க வேண்டும். என்றார்.

போரதீவுப்பற்று பிரதேச இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.உதயமலர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாணசபை உறுப்பினரான ஞானமுத்து கிருஸ்ணபிள்ளை, முனைத்தீவு விநாயகர் அறநெறிப் பாடசாலை, பெரியபோரதீவு முத்துவிநாயகர் அறநெறிப்பாடசாலை, கோவில் போரதீவு கண்ணகி அறநெறிப்பாடசாலை, போன்றவற்றின் மாணவர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ற-10-46)

# கூட்டு அரசின் ஆயுளை நீடிப்பதா? இல்லையா?

## விரைவில் முக்கிய பேச்சு

கொழும்பு, ஜூன் 12

கூட்டு அரசிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இடையிலான தேசிய அரசு தொடர்பான ஒப்பந்தத்தை நீடிப்பது தொடர்பான பேச்சு வெகு விரைவில் நடைபெறவுள்ளது.

இரண்டுமுதன்மைகட்சிகளுக்கு இடையிலான இந்த ஒப்பந்தம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்துடன் நிறைவுக்கு வரவுள்ளது.

இந்த நிலையில் தேசிய அரசின் ஆயுட்காலத்தை நீடிப்பதா? இல்லையா? என்பது தொடர்பான முக்கிய கலந்துரையாடலுக்கு இரண்டு கட்சிகளும் தயாராகி வருவதாகக் கூறப்படுகின்றது.

> இரண்டு முதன்மை கட்சிகளுக்கு இடையிலான இந்த ஒப்பந்தம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் நிறைவுக்கு வரவுள்ளது. இந்த நிலையில் தேசிய அரசின் ஆயுட் காலத்தை நீடிப்பதா? இல்லையா? என்பது தொடர்பான முக்கிய கலந்துரையாடலுக்கு இரண்டு கட்சிகளும் தயாராகி வருவதாகக் கூறப்படுகின்றது.

இதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அமைச்சர்களான கபீர் காசிம், தலதா அத்துகோரள, ரஞ்சித் மத்தும பண்டார, மலிக் சமரவிக்ரம, ரவி கருணாநாயக்க ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

மேலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்து வப்படுத்தி அமைச்சர்களான துமிந்த திஸாநாயக்க, மஹிந்த அமரவீர, சுசில் பிரேமஜயந்த, அநுர பிரியதர்ஷன யாப்பா, லசந்த அலகியவன்ன, லக்ஸ்மன் செனவிரத்ன ஆகியோர் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த வார இறுதியில் குறித்த பேச்சு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தினால் அது பிற்போடப்பட்டுள்ளதாகவும், வெகு விரைவில் இந்தப்பேச்சு இடம்பெறும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரான கபீர் காசிம் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தேசிய அரசைத் தொடர்ந்து 2020ஆம் ஆண்டு தேர்தல் வரை கொண்டுசெல்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களிடையே ஏகமனதான தீர்மானம் இருக்கின்ற போதிலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

# கட்டாருக்கும் ரிசாத்துக்கும் இடையே என்ன தொடர்பு?

## சிங்கள ராவய அமைப்பு கேள்வி

கொழும்பு, ஜூன் 12

ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு உதவி வழங்கும் கட்டார் அரசுக்கும், அமைச்சர் ரிசாத் பதியூதீனுக்கும் இடையில் இருக்கும் தொடர்பு என்னவென்பது தொடர்பில் அரசு விரிவான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமெனச் சிங்கள ராவய அமைப்புக் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்த சுத்தாத்த தேரர், கட்டார் அரசு என்ன நோக்கத்தில் அமைச்சர் ரிசாத் பதியூதீனுக்கு நிதியுதவி அளிக்கின்றது எனவும் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்டார் நாட்டுடனான இராஜதந்திர மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட அனைத்து தொடர்புகளையும் சவூதி அரேபியா உள்ளிட்ட ஆறு நாடுகள் துண்டித்துள்ளன. அதற்குக் காரணம் அந்த நாடு ஐ.எஸ் ஆயுததாரிகளுக்கு உதவியளிப்பதாகக் குற்றம்சாட்டியே அவர்கள் அந்த தொடர்புகளைத் துண்டித்துள்ளனர்.

கட்டார் அரசு என்ன தேவைக்காக ரிசாத்துக்கு நிதியுதவி அளித்திருக்கின்றது என்பது தொடர்பில் விசாரணை செய்ய வேண்டும். இது அரசின் கடமைஎன்றார். (த)

# நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு சந்தர்ப்பம் அளித்துள்ளது இடர்

## ஜப்பானியத் தூதுவர் அரசுக்குச் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 12

இடர் ஏற்படும்போது அதனை மேலும் பாதுகாப்பான நெகிழ்திறன் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்தவேண்டும் என இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் கெனிச்சி சுகனுமா தெரிவித்தார்.

ஜப்பானியக் குழு வெள்ளம் மற்றும் மண் சரிவுகளுக்கான காரணத்தை ஆராய்ந்ததுள்ளதோடு, பல திட்டங்களையும் பரிந்துரைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் தென் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் மண் சரிவுகள் தொடர்பாகஆய்வுகளைமேற்கொண்ட ஜப்பானிய இடர் நிவாரண நிபுணர் குழு அதன் இறுதி அறிக்கையை நேற்று முன்தினம் இடர் முகாமைத்துவாவ அமைச்சில் வைத்து அரச தரப்பினரிடம் கையளித்தது.

இதன்போது அரச தரப்பின் சார்பில் இடர் முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஸன யாப்பா, நீர்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜேய முனி சொய்ஸா மற்றும் அரச தலைவரின் செயலாளர் பி.பி. அபேக் கோன் ஆகியோர் அறிக்கையைப் பெற்றுக் கொண்டனர்.

இதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட ஜப்பானியத் தூதுவர் கெனிச்சி சுகனுமா, "ஜப்பானியக் குழு வெள்ளம் மற்றும் மண் சரிவுகளுக்கான காரணத்தை ஆராய்ந்தது. பல திட்டங்களையும் பரிந்துரைத்தது.

இடர் இடம்பெற்றுள்ள இந்தச் சந்தர்ப்பத்தை நாம் மேலும் பாதுகாப்பான நெகிழ்திறன் கொண்ட இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக பயன்படுத்தவேண்டும்.

இடர் இடம்பெற்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உட்கட்டுமானங்களை மேம்படுத்துவதானது மீண்டுமாக சிறப்பாக கட்டியெழுப்புதல் என்ற கருத்திட்டத்தை மையப்படுத்தியதாகும்.

இந்த கருத்திட்டமானது ஐ.நாவின் இடர் முகாமைத்துவ மாநாடுகளில் வலியுறுத்தப்படுவதாகும். உலகெங்கிலும் இந்த கருத்திட்டத்தை முன்னெடுக்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றது. அந்த வகையில் நாம் ஒத்துழைப்பதுடன் ஒவ்வொரு நாடும் அனர்த்தத் தவிர்ப்பு முகாமைத்து வத்திட்டங்களில் முதலிடுவதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

இதன் மூலமாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பல இடர்களைத் தவிர்க்கமுடியும் என்பதுடன் எமது எதிர்காலச் சந்ததிக்கு பாதுகாப்பானதும், நெகழ்திறன் கொண்டதுமான நாட்டைப் பெற்றுக்கொடுக்க முடியும்" என்றார். (த)

## கேள்வி அறிவித்தல்
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத் திட்டம் (PSDG) – 2017
## மன்னார் நகர சபை ,மன்னார்

| திட்டங்களின் பெயர் | ஒப்பந்த இல. |
|---|---|
| தாழ்வுபாடுவீதி –எமில்நகர் 3ஆம் குறுக்குவீதி (கொங்கிறீற் இடல்) | NP/PSDG/MN/MNUC/W/01 |
| மதரசாவீதி (கொங்கிறீற் இடல்) | NP/PSDG/MN/MNUC/W/02 |
| எமில்நகர் புதுமைமாதா 5ம் ஒழுங்கை 1ஆம் குறுக்குவீதி (கொங்கிறீற் இடல்) | NP/PSDG/MN/MNUC/W/03 |
| செல்வநகர் பிரதானவீதி (கொங்கிறீற் இடல்) | NP/PSDG/MN/MNUC/W/04 |

01. தலைவர், பெறுகைக்குழு, மன்னார் நகர சபை, மன்னார். தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்கு கோருகின்றார்.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. இருப்பினும், வடமாகாணத்தின் நிர்வாக எல்லையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே வரையறுக் கப்பட்டுள்ளது.

03. கேள்வி பெறதகுதியுடையவராவதற்கு, பொதுநிதி சுற்றறிக்கை 04/2016 (I) இலக்க 16.03.2016 ஆம் திகதிய சுற்றறிக்கைக்கு அமைவாகவும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்பிற்கான இக்ராட் (ICTAD) பதிவு பதிவுள்ளவராகவும், கறுப்புப் பட்டியலில் (BlackList) பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர்/ செயலாளர், மன்னார் நகரசபை, மன்னார், (தொலை பேசி: 023-2222351/ 023- 2222591, மின்னஞ்சல் – mannaruc154@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணிவரை 04.07.2017 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர்/ செயலாளர், மன்னார் நகரசபை, மன்னார், எனும் இடத்திலிருந்து 12.06.2017 ஆம் திகதியிலிருந்து 04.07.2017 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர்/ செயலாளர், மன்னார் நகரசபை, மன்னார்.எனும் முகவரிக்கு 04.07.2017 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.


07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித்திகதியிலிருந்து 63 (05.09.2017) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.

08. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறுஅமையும்.

| கேள்வி எண் | வேலைவிபரம் | மதிப்பீட்டுதொகை (ரு) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | தாழ்வுபாடுவீதி–எமில்நகர் 3ம் குறுக்குவீதி (கொங்கிறீற் இடல்) | 1.098 | 11/2 மாதம் | C9 | 11,000.00 | 03.10.2017 |
| 2 | மதரசாவீதி (கொங்கிறீற் இடல்) | 1.098 | 11/2 மாதம் | C9 | 11,000.00 | 03.10.2017 |
| 3 | எமில்நகர் புதுமைமாதா 5ம் ஒழுங்கை முதலாம் குறுக்குவீதி (கொங்கிறீற் இடல்) | 1.132 | 11/2 மாதம் | C9 | 11,500.00 | 03.10.2017 |
| 4 | செல்வநகர் பிரதானவீதி (கொங்கிறீற் இடல்) | 3.039 | 2 மாதம் | C8 | 30,500.00 | 03.10.2017 |

09. கேள்விகோரல் பற்றிய முன் கூட்டியகூட்டம் 23.06.2017 மாலை 14.30 மணிக்கு மன்னார் நகர சபை,மன்னாரில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,**
**மன்னார் நகரசபை, மன்னார்,**
**10.06.2017**



தென்னமரிக்க நாடான வெனிசுலாவில், அதிபர் நிக்கோலஸ் மதுரோவைப் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி லட்சக்கணக்கான இளைஞர்களின் பங்குபற்றலுடன் தலைநகர் கரஸ்கஸ் உள்ளிட்ட பல இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அவ்வாறு நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பெண் ஒருவரின் ஒளிப்படமே இது. (ம)

# மேற்கு ரக்காவில் அமெ

பக்தாத், ஜூன் 12

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தாயகம் என்று வர்ணிக்கப்படும் சிரியாவின் ரக்கா நகரின் மேற்குப் பகுதிக்குள் அமெரிக்காவின் ஆதரவு பெற்ற படைகள் நுழைந்துள் ளன.

ஈராக், சிரியாவின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் சிரியாவின் ரக்கா நகரும் இருந்தது. இந்த நகரே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தாயகம் என்று வர்ணிக்கப்பட்டது. ஐ.எஸ். அமைப்பின் கோட்டையான ரக்காவை கைப்பற்றிவிட்டால் அந்த அமைப்பின் கதை முடிவுக்கு வரும் என்று பொதுவான அபிப்பிராயங்கள் உள்ளன.

நகரை மீட்கும் போரில் அமெரிக்கா மும்முரம் காட்டுகிறது. அமெரிக்காவுடன் இணைந்து சிரியாவின் எல்லைகளை நன்று அறிந்த குர்தீஸ் கிளர்ச்சிக்குழுவும் போரிடுகிறது. கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் இரண்டாம் கட்டப் போர் ஆரம்பமாகியிருந்தது.

படைகள் தற்போது மேற்கு ரக்காவுக்குள் நுழைந்துள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அது தொடர்பிலான ஒளிப்படங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

# பிரிந்தாலும் பிரிட்டன் நட்பு நாடே

## மெர்க்கல் பகிரங்கம்

“ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் பிரிந்து சென்றாலும் அது எமது நட்பு நாடே” இவ்வாறு தெரிவித்தார் ஜேர்மனியின் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிந்து செல்லுவதற்குத் தனது பெரும்பான்மையை நிரூபிப்பதற்காகப் பிரிட்டன் தலைமை அமைச்சர் திரேசா மே, அண்மையில் பொதுத் தேர்தலை நடத்தினார். வெற்றியும் பெற்றார். இதனையடுத்து ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் பிரிந்து செல்வதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அவ்வாறு பிரிந்து சென்றாலும் பிரிட்டன் எமது நட்பு நாடே என்று ஜேர்மனியின் தலைமை அமைச்சர் ஏஞ்சலா மெர்க்கல் தெரிவித்தார்.

“ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுகிற முடிவில் பிரிட்டன் விடாப்பிடியாக இருக்கும் என்று கருதுகிறேன். திரேசா மே இது தொடர்பில் பேச்சு நடத்தத் தயாராக இருப்பார். நாங்களும் விரைவாக பேச்சு நடத்த விரும்புகிறோம். குறிப்பிட்ட கால அட்டவணைப்படி பேச்சு நடந்து முடிய வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறினாலும், பிரிட்டன், ஐரோப்பாவின் ஒரு அங்கம்தான். அந்த நாடு நல்லதொரு கூட்டாளியாகத் தொடர வேண்டும் என்று விரும்புகிறேன்” என்றும் மெர்க்கல் மேலும் குறிப்பிட்டார். (ம)



# பலஸ்தீனக் குழந்தைக்கு பாலூட்டினார் யூதப்பெண்

## நெகிழவைக்கும் சம்பவம்

பலஸ்தீனப் பெண்ணின் கைக் குழந்தைக்கு மருத்துவத் தாதியாகப் பணிபுரியும் யூதப் பெண் பாலூட்டிப் பசியாற்றியமை உலகையே நெகிழவைக்கும் சம்பவமாகப் பதிவானது.

இஸ்ரேலில் உள்ள இன் கரீம் என்னும் பகுதியில் தந்தை, தாய், கைக்குழந்தை எனப் பலஸ்தீனக் குடும்பமொன்று சென்ற வாகனம் விபத்துக்கு உள்ளானது. தந்தை உயிரிழந்தார். தாய் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். குழந்தையும் சிறு காயங்களுடன் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டது.

குழந்தை, மருத்துவமனையில் பணிபுரியும் தாதியான உலா என்ற யூதப் பெண்ணிடம் ஒப்படைக்கப்பட்டது. பச்சிளங்குழந்தை பசி தாங்காமல் அழத் தொடங்கிவிட்டது. குழந்தையின் தாய் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்ததால் அவரால் தாய்பால் கொடுக்க முடியாத சூழல். பசியில் துடிக்கும் குழந்தைக்கு உலா பாலூட்டியுள்ளார். இந்தக் காட்சியைப் பார்த்த ஒட்டுமொத்த மருத்துவமனையும் கண்ணீர் மல்கியது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

யூதர்களுக்கும், பலஸ்தீனர்களுக்கும் இடையே அங்கு நூற்றாண்டு காலப் பகை நிலவி வருகிறது. ஐக்கிய நாடுகள் சபை பலமுறை முயற்சித்தும் பகையை முடிவுக்குக் கொண்டுவர முடியவில்லை. இந்த நிலையில் இந்தச் சம்பவம் உலகையே நெகிழவைக்கும் விதத்தில் அமைந்தது. (ம)

# ஓ.பி.எஸ்.- இ…

# விரைவில் இ…



சென்னை, ஜூன் 12

தமிழகத்தில் ஆட்சியமைத்துள்ள அ.தி.மு. கழகம் தற்போது மூன்றாக உடைந்துள்ளது. முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தற்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளர் என்று தன்னைச் சொல்லிக்கொள்ளும் டி.டி.வி. தினகரன் ஆகியோர் தலைமையில் சில சட்டமன்ற உறுப்பினர்கள் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

அ.தி.மு. கழகத்தில் ஏற்பட்ட முறுகல்களைத் தொடர்ந்து சசிகலா, தினகரன் இருவரையும் கட்சியை விட்டு அடியோடு நீக்கினால் எடப்பாடி பழனிச்சாமியுடன் தாம் இணைந்து செயற்படத் தயார் என்பது ஓ.பன்னீர் செல்வத்தின் கருத்தாக அமைந்துள்ளது. இதற்கு எடப்பாடி பழனிச்சாமி தரப்பினர் சம்மதம் தெரிவித்து விட்டபோதிலும் இணைப்பு என்பது கடந்த பல வாரங்களாகச் சாத்தியமற்ற ஒன்றாகவே இருந்து வருகிறது. இந்த நிலையில் பன்னீர்செல்வம் திருச்சி செல்வதற்காககச் சென்றபோது,



## ஐ.எஸ். ஆதரவு ஆயுததாரிகள் புகுந்துள்ள

# பிலிப்பைன்ஸின் மாராவி தீவில் வீடுவீடாகத் தேடுதல் வேட்

பிலிப்பைன்ஸின் மாராவி தீவில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆதரவு ஆயுததாரிகளுக்கு எதிராக அந்த நாட்டு அரச படைகள் கடும் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன. மட்டுமல்லாமல் வீடுவீடாகத் தேடுதல் வேட்டையும் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இந்தத் தீவு ஆயுததாரிகளின் பிடிக்குள் வந்தது. சில பாதிரியார்களையும், கிறிஸ்தவ மக்களையும் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆதரவு ஆயுததாரிகள் பிணையக் கைதிகளாக பிடித்த வைத்துள்ளனர். ஏனைய மக்கள் தீவில் இருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். மாராவியில் தனது கட்டளைக்கு உட்பட்ட இராணுவ ஆட்சியை அறிவித்துள்ளார் பிலிப்பைன்ஸ் றொட்றிக்கோ டுடேர்தே. கடந்த மூன்று வாரகா அங்கு கடும் போர் நடைபெற்று வருகிறது. சில கு மங்கள் அரசதரப்பால் மீட்கப்பட்டுள்ளன. மக்கள் வெ றியுள்ள வீடுகளில் ஆயுததாரிகள் பதுங்கியிருக்க புள்ளதுஎன்பதால்வீடுவீடாகசோதனைநடத்தப்படுகிற

# அமெரிக்க ஆதரவுப் படைகள்

வுக்கு வரும்
பிராயங்கள்
அமெரிக்கா
அமெரிக்காவு
வின் எல்லை
த குர்தீஸ்
கிறது. கடந்த
இரண்டாம்
பிருந்தது.
கு ரக்காவுக்
று பன்னாட்டு
பிட்டன. அது
களும் வெளி

படைகள் தற்போது மேற்கு ரக்காவுக்குள் நுழைந்துள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அது தொடர்பிலான ஒளிப்படங்களும் வெளியிடப்பட்டுள்ளன. மேற்கு ரக்காவில் இருந்து சில கிலோமீற்றர் தூரத்தக்கு அப்பால் தற்காலிக தங்குமிடங்கள், மருத்துவக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்கு ரக்காவில் இருந்து சில கிலோ மீற்றர் தூரத்தக்கு அப்பால் தற்காலிக தங்குமிடங்கள், மருத்துவக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
மக்களை மீட்பதற்குத் தேவையான ஏற்பாடுகளும் சிறந்த முறையில் செய்யப்பட்டுள்ளன.
அகதிகள் முகாம், மருத்துவக் கூட்டங்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தாக்கலாம் என்ற அச்சம் உள்ளதால் அமெரிக்காவின் ஏவுகணைத் தடுப்பு வாகனங்களான தாட் அங்கு நிறுத்தப்பட்டுள்ளன என்று சில ஊடகங்கள் குறிப்பிட்டன. எனினும் இது உறுதிப்படுத்தப்படவில்லை. (ம)



# ஓ.பி.எஸ் இணைவு



. தினக
விட்டு
பாடி பழ
ணைந்து
பன்னீர்
மந்துள்
ரிச்சாமி
து விட்ட
கடந்த
ற ஒன்
. இந்த
திருச்சி
போது.

சென்னை விமானநிலையத்தில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையில் "எமது தர்மப் போர் வெற்றியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது" என்று குறிப்பிட்டார். ஓ.பி.எஸ். தமது வெற்றி என்று குறிப்பிட்டது தினகரன், சசிகலா இருவரும் அந்தக் கட்சியில் இருந்து முழுமையாக நீக்கப்படவுள்ளனர் என்பதையும், அ.தி.மு. கழகம் இணையப்போகிறது என்பதையும் குறிப்பிடுகிறது என்று சில இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



## கட்டாருக்கு எதிராக ஆதாரங்கள் இல்லை

### கை கொடுக்கிறார் எர்டகன்

டோகா, ஜூன் 12

கட்டாருக்கு எதிராக வளைகுடா நாடுகள் வைத்துள்ள குற்றச்சாட்டுக்களுக்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை என்று துருக்கி அதிபர் ரயிப் எர்டகன் தெரிவித்தார். கட்டார், ஈரானில் செயற்படும் ஆயுதக் குழுக்களுக்கு நிதி உதவி செய்கிறது என்று தெரிவித்து சவூதி அரேபியா, எகிப்து, ஐக்கிய அரபு இராச்சியம், பக்ரைன் ஆகிய நாடுகள் அதனுட னான தமது உறவுகளைத் துண்டித்துள்ளன. கட்டார், ஈரான் ஆயுதக் குழுக்களுக்கு நிதி உதவி செய்து எமது நாட்டில் நாச வேலைகளைச் செய்ய சதித்திட்டம் தீட்டியுள்ளது என்று பஹ்ரைன் கடும் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளது. இந்த நான்கு நாடுகளுக்கு ஆதரவாக லிபியா, ஏமன், மாலை தீவுகள் ஆகிய நாடுகளும் கட்டாருடன் உறவைத்துண்டித்துள்ளன.

இந்த விவகாரம் முறுகலடைந்துவரும் துருக்கி கட்டாருக்கு ஆதரவாக உள்ளது. கட்டாருடன் தமது உறவு எவ்வித மாற்றமும் இல்லாமல் அப்படியே தொடரும் என்று துருக்கி அதிபர் எர்டகன் ஏற்கனவே அறிவித்திருந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் அவர் மேலும் சில கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளார். "கட்டார் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு எவ்வித ஆதரங்களும் இல்லை. ஆதாரமற்ற குற்றச்சாட்டை வைத்து கட்டாருடன் உறவை முறித்துக்கொள்ள நாம் தயாராகவில்லை" என எர்டகன் மேலும் தெரிவித்தார். (ம)

# வேட்டை



பிலிப்பைன்ஸ் அதிபர்
ஒன்று வாரகாலமாக
ருகிறது. சில குக் கிரா
ன. மக்கள் வெளியே
துங்கியிருக்க வாய்ப்
நடத்தப்படுகிறது. (ம)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம்
## கேள்வி கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் பிராந்திய கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் தகுதியும் தகைமையும் வாய்ந்த கேள்விப்பத்திரதாரர்களிடமிருந்து பின்வரும் வேலைகளுக்கு மூடிய கேள்விப்பத்திரங்களைக் கோருகின்றார்.

| இல. | கேள்விப் பத்திர அடையாளம் | வேலை விவரம் | மதிப்பிடப் பட்ட செலவு (மில்லியன் ரூபாவில்) | ஒப்பந்தக்காலம் (நாட்காட்டி நாள்களின் எண்ணிக்கை) | ஆகக் குறைந்த ICTAD தரம் | தேவைப்படும் கேள்விப்பத்திரப் பாதுகாப்பு (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | VC/AD/RE/ 2017/04 | நிருவாகத் தொகுதிக் கட்டடத் திருத்தவேலை, பூங்காவீதி, வவுனியா. | 1.3 | 45 | C9 அல்லது அதற்குமேல் | 13,000.00 |
| 2. | VC/AD/RE/ 2017/05 | நூலக மற்றும் ஆய்வுகூடக் கட்டடத் திருத்தவேலை, பூங்காவீதி, வவுனியா. | 0.8 | 30 | C9 அல்லது அதற்குமேல் | 8,000.00 |
| 3. | VC/AD/RE/ 2017/06 | துடுப்பாட்டப் பயிற்சிக் கூடம் அமைத்தல், பம்பைமடு. | 0.4 | 21 | C9 அல்லது அதற்குமேல் | 3,500.00 |
| 4. | VC/AD/RE/ 2017/07 | துடுப்பாட்ட ஆடுகளத் திருத்தவேலை, பம்பைமடு. | 0.1 | 21 | C9 அல்லது அதற்குமேல் | 1,000.00 |

1. கேள்விப்பத்திரதாரர்களின் தெரிவு தேசிய போட்டித்தன்மையின் நடைமுறைக்கமைய இடம் பெறும். எனினும் வடமாகாண நிருவாக எல்லைக்குள் பதிவு செய்தவர்களுக்கென இது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
2. தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தக்காரர் முன்னர் செய்த வேலைகளின் பொருட்டு தடைசெய்யப்படாதவராகவும் மேலே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிருமாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவுசெய்த தகுதியினையும் கொண்டிருக்கவேண்டும்.
3. கேள்விப்பத்திரங்களுடன் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரப்பாதுகாப்பும் இணைக்கப்படுதல் வேண்டும்.
4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க ஆர்வமுள்ளோர் மேலதிகத் தகவல்களைப் பெறவும் கேள்விப்பத்திரங்களைப் பார்வையிடவும் வவுனியா பூங்கா வீதியிலுள்ள வவுனியா வளாக நிருவாகக்கிளைத் தொலைபேசியில் (024-2223316) வேலைநாள்களில் முற்பகல் 9.00 மணியிலிருந்து பிற்பகல் 4.00 மணிவரை தொடர்புகொள்ளலாம்.
5. ஆங்கிலமொழியிலான முழுமையான கேள்விப்பத்திர ஆவணங்களை வவுனியா பூங்கா வீதியிலுள்ள வவுனியா வளாக நிருவாகக்கிளையிலிருந்து 12/06/2017 இலிருந்து 23/06/2017 வரை வேலைநாள்களில் முற்பகல் 9.00 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை மீளளிக்கப்படாத பின் வரும் கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளமுடியும்.

   கேள்விப்பத்திரம் 1, 2 - ரூபா 2500/=
   கேள்விப்பத்திரம் 3, 4 - ரூபா 300/=
6. முழுமையான கேள்விப்பத்திரங்கள் 28/06/2017 பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாக வவுனியா வளாகத்தை வந்தடையக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும் அல்லது வளாக முதல்வரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 28/06/2017 பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாக இடப்படுதல் வேண்டும்.
7. கேள்விப்பத்திரங்கள் 28/06/2017 பிற்பகல் 3.00 மணிக்கு வவுனியா பூங்கா வீதி வவுனியா வளாகச் சபை அறையில் சமுகமளிக்கும் கேள்விப்பத்திரதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னால் திறக்கப்படும்.
8. கேள்விப்பத்திரங்கள் விண்ணப்ப முடிவுத்திகதியிலிருந்தோ அல்லது அதன் நீடித்த காலப்பகுதியிலிருந்தோ 49 நாள்களுக்குச் செல்லுபடியாகும்.
9. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் கேள்விப்பத்திரப் பாதுகாப்பைக் கொண்டிருக்கவேண்டும். அதில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.
   - கேள்விப்பத்திர ஆவணத்தின் பகுதி 9 இல் உள்ள விண்ணப்பப்படிவம்
   - மேலே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணம்
   - 77 நாட்களுக்கான செல்லுபடியாகுந்தன்மை
   - வவுனியா வளாகமுதல்வர் சார்பாக இருத்தல்
   - அட்டவணை ITB இன் 16வது சரத்திலுள்ள முகவர்களால் வழங்கப்பட்டதாயிருத்தல்
10. எல்லாக் கேள்விப்பத்திரங்களுக்குமான விளக்கமளிக்கும் கூட்டம் 20/06/2017 முற்பகல் 10.00 மணிக்கு பம்பைமடு வவுனியா வளாக வேலைப்பொறியியலாளரின் அலுவலகத்தில் இடம்பெறும்.

**தலைவர்,**
**பிராந்திய கேள்விப்பத்திரச்சபை,**
**வவுனியா வளாகம்,**
**பூங்கா வீதி, வவுனியா.**
**09/06/2017.**

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இன்றைய சந்திப்பு பயனுள்ளதாகட்டும்!

முற்கூட்டியே திட்டமிடப்படாத பயணமாக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இன்று யாழ்ப்பாணம் வருகிறார். தெற்கில் மண்சரிவு மற்றும் வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணிகளின்பின்னர் இடம்பெறும் அவரது இந்தப் பயணம் வடக்கிலும் உணர்வு புர்வமான நிலையிலேயே இடம்பெறுகிறது. இந்தப் பயணம் அவருக்கு அவ்வளவு இலகுவானதாக இருக்கப் போவதில்லை.

வடக்கில் சுமார் 3 மாதங்களுக்கு மேலாக தமது காணிகளை மீட்பதற்காக காணி உரிமையாளர்களும், காணாமற்போனவர்களுக்கு நடந்தது என்ன என்று கேட்டு அவர்களது உறவுகளும், வேலை தருமாறு கேட்டுப் பட்டதாரிகளும் தொடர்ச்சியாகப்போராட்டங்களைநடத்திவரும்ஒருஉணர்ச்சிகரமான நிலையில் அரச தலைவரின் பயணம் அழுத்தங்கள் நிறைந்ததாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

யாழ்ப்பாணமாவட்டஅபிவிருத்திக்குழுவின்சிறப்புஅமர்வு ஒன்றை நடத்தி அதில் பங்கேற்பதும் அவரது இந்தப் பயணத்தின் நோக்கங்களில் ஒன்று. போருக்குப் பின்னரான அபிவிருத்தியில், குறிப்பாக 2015 ஆட்சி மாற்றத்தின் பின்னரும் வடக்கில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படாத நிலையில் இந்தச்சிறப்புஅமர்வும்அரசதலைவருக்குசவால் மிக்கதாகவே இருக்கும்.

வேறு எந்தவொரு அரச தலைவரையும்விட பதவியேற்ற குறுகிய காலத்திற்குள் வடக்கு மாகாணத்திற்கு அதிக தடவைகள் பயணம் செய்தவர் தானே என்று அரச் தலைவர் மைத்திரிபாலசிறிசேனமுன்பொருதடவைதெரிவித்திருந்தார். ஆனால் அந்தப் பயணங்கள் பயனுள்ளவையாக இருக்கவேண்டும் என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும்.

இன்றைய நிலையில் குறைந்தபட்சம் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம்கூட அமைக்கப்படாதநிலையில்காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம் காத்திரமான வாக்குறுதி எதையும் கொடுக்கும் நிலையில் அரச தலைவர் இல்லை. அந்த அலுவலகத்தைஅமைப்பதற்கானசட்டத்தில்திருத்தங்களைச் செய்வதற்கான விவாதம் மீண்டும் ஒரு தடவை எதிர்வரும் 20ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் காட்டப்பட்டுவரும் தொடர்ச்சியான தாமதமும் மெத்தனமும் தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை எழுப்பி வருகின்றன. அதன் உணர்ச்சிக் கொந்தளிப்பை அரசதலைவர்நிச்சயமாக இன்றுசந்திப்பார். ஆனால், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம் விரைவில் அமைக்கப்படும் என்கிற வாக்குறுதியை அவர்களுக்குத் தருவதைவிட உருப்படியான எந்தவொருவிடயமும்அவரிடம் இருப்பதாகத்தெரியவில்லை.

மக்களுக்கோ இது அலுத்துப் புளித்துப்போன வாக்குறுதி. இந்த அலுவலகத்தையே அவர்கள் முழுமையாக இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்கிற நிலையில் அது அமைக்கப்படும் பணிகள் தாமதமாகிக் கொண்டு செல்வது அவர்களிடம்எந்தவகையிலும்நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் அமையவில்லை.

எந்தவொரு விசாரணையும் உள்நாட்டில் உள்ளூர்ப் பொறிமுறையின் கீழேயே நடக்கவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கும் அரச தலைவர், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் கோரிக்கையான பன்னாட்டு விசாரணை என்பதை ஏற்றுக்கொள்வார் என்று எதிர்பார்க்க முடியாது.

இந்த விடயத்தை இந்தியாவின் தி இந்து நாழிதளுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவர் ஏற்றுக்கொண்டிருந்தார். தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய வகையிலான பொறிமுறை ஒன்றைக் கண்டறியவேண்டும் என்பதன் அவசியத்தை அவர் அந்தச் செவ்வியில் தெரிவித்திருந்தார். எனவே இன்றைய சந்திப்பு அரச தலைவருக்கும் காணாமல்ஆக்கப்பட்டவர்களுக்கும் இடையில் அந்த ‘நம்பிக்கையான பொறிமுறையைக்’ கண்டறியும் வகையில் இடம்பெறவேண்டும். அப்படியில்லையெனில், அரச தலைவரின் வடக்குக்கான இத்தகைய பயணங்களாலும் சந்திப்புக்களாலும் எந்தவிதப் பயனும் ஏற்படப்போவதில்லை. பத்தோடு பதினொன்றாக இடம்பெறும்பயணங்களால்இலங்கைக்குஎந்தநன்மையும் கிடைகப்போவதில்லை என்பதை அரசி [illegible] லவர்கள் [illegible]ல்கொள்ள வேண்டும்.

# மனக்குழப்பத்தில் மூழ்கியுள்ளனர் தமிழ்நாட்டின் ஈழ அகதிகள்

ஆங்கிலமூலத்திலிருந்து மொழியாக்கம்- நித்தியபாரதி

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக இடம்பெயர்ந்த ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழ் அகதிகள் இந்தியாவின் தமிழ்நாட்டு அகதி முகாம்களில் தற்போது வாழ்கின்றனர். தாம் தற்போது வாழும் அகதி முகாமானது ஒரு போதும் தமக்கான சொந்த வீடாகாது என்பதை இவர்கள் நன்கறிந்துள்ளனர் .

எனினும் தமது சொந்த இடத்திற்குத் திரும்பிச் சென்று தமது வாழ்வைமீளக்கட்டியெழுப்புவது என்பது இவர்களுக்கு பெரும் பிரச்சினையாகவே உள்ளது. இவர்களைப் பொறுத்தளவில் தாம் வாழும் அகதி முகாம் மட்டுமே தற்போது இவர்களுக்கான வீடாக உள்ளது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து எட்டாவது ஆண்டு நிறைவு விழா கடந்த மாதம் 18ம் திகதி அன்று நினைவுகூரப்பட்டது.

**சிதைந்த கனவு**


தான் ஒரு பேராசிரியராக வரவேண்டும் என்ற கனவுடன் தனது 20வது வயதில் இலங்கையை விட்டு வெளியேறித் தமிழ்நாட்டின் அகதிமுகாமில் தஞ்சம் புகுந்தவரான எஸ். மூர்த்திக்கு தற்போது 54 வயது. இவர் நான்கு மகன்களின் தந்தையார். ஆனால் பேராசிரியராக வரவேண்டும் என்கின்ற இவரது கனவு உள்நாட்டுப் போரினால் சிதைவுற்றுள்ளது.

இவர் தற்போது சென்னையிலிருந்து 50 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கும்மிடிப்பூண்டி அகதி முகாமில் சிறிய பலசரக்குக் கடை ஒன்றை நடத்துகிறார். இலங்கையின் கிழக்கிலுள்ள திருகோணமலையிலுள்ள தனது சொந்த வீட்டிற்குத் திரும்பிச் செல்வதற்கான நாளை எதிர்பார்த்து நாதன் என்பவர் காத்திருக்கிறார்.

“கடவுச்சீட்டு மற்றும் ஏனைய ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன். இந்த முகாமில் 25 ஆண்டுகளுக்கும் மேல் வசித்து விட்டேன். சிறிய கடையையும் நடத்தி வருகிறேன். இந்த நிலையில் என்து சொந்த இடத்திற்குத் திரும்பிச் செல்லும் போது அங்கு அனைத்தையும் இல்குவாகப் பெற்றுவிட முடியும் என நான் நினைக்கவில்லை. அங்குசிறந்த வாழ்வொன்றை நான் வாழ்வதற்கு பல இடர்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்” என தொட்டிலில் படுத்திருந்த தனது ஒரு வய

> “
> முகாமில் 25 ஆண்டுகளுக்கும் மேல் வசித்து விட்டேன். சிறிய கடையையும் நடாத்தி வருகிறேன். இந்நிலையில் எனது சொந்த இடத்திற்குத் திரும்பிச் செல்லும் போது அங்கு அனைத்தையும் இலகுவாகப் பெற்றுவிட முடியும் என நான் நினைக்கவில்லை. அங்கு சிறந்த வாழ்வொன்றை நான் வாழ்வதற்கு பல இடர்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்' என தொட்டிலில் படுத்திருந்த தனது ஒரு வயதுப் பேரனை நித்திரை யாக்கிய வாறு நாதன் தெரிவித்தார்.





துப் பேரனை நித்திரை யாக்கியவாறு நாதன் தெரிவித்தார்.
“திருகோணமலையிலுள்ள எனது கிராமத்தில் 1980களில் 55 குடும்பங்களுக்கும் மேலிருந்தன.
தற்போது அங்கு மூன்று குடும்பங்கள் மட்டுமே உள்ளன. இந்தக் கடையை நான் அங்கு நடத்தினால் என்னால் போதி யளவு வருமானத்தைச் சம்பாதிக்க முடியாது" என அவர் மேலும் தெரிவித்தார்.

**மீண்டும் திரும்பி வந்த மக்கள்**

அந்த முகாமில் வசிக்கும் 60 வயதான பெண்மணியான ஜி.லக்ஸ்மி தனது சொந்த ஊரான மன்னாருக்குத் திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். “எனது மூத்த மகள் கடந்த ஆண்டு ஊருக்குச் சென்றிருந்தார். ஆனால்அவரால்அங்கிருக்க முடியாததால் மீண்டும் இரண்டு மாதத்தில் இங்கு வந்துவிட்டார். எனது இளைய மகள் இந்த மாதம் தனது கணவரின் இடத்திற்குச் செல்லவுள்ளார்" என லக்ஸ்மி தெரிவித்தார்.
“இங்கிருக்கும் தற்போதைய தலைமுறையினர் இலங்கையிலிருந்து வெளியேறியபோது சிறுவர்களாகவே இருந்தனர். அல்லது சிலர் தமிழ்நாட்டில் பிறந்தவர்களாகவும் உள்ளனர். உண்மையில் அவர்களின் சொந்த நாடாக இந்தியாவே உள்ள போதிலும் அவர்களும் அகதிகள் என்றே அழைக்கப்படுகின்றனர்" எனப் போரின் இறுதிக் கட்டத்தில் நாட்டிலிருந்து வெளியேறி தமிழ்நாட்டு அகதி முகாமில் அடைக்கலம் புகுந்த 35 வயதான ஆண் ஒருவர் தெரிவித்தார்.
“நான் ஒருபோதும் இலங்கையில் இருந்ததில்லை. நானும் எனது சகோதரியும் தமிழ்நாட்டு அகதிமுகாமிலேயே பிறந்து வளர்ந்தோம். இலங்கையில் போர் முடிவடைந்ததால் அங்கு திரும்பிச் செல்லவேண்டும் என எமது பெற்றோர்கள் விரும்பு கின்றனர். ஆனால் நான் கல்லூரிக் கல்வியை இங்கு நிறைவுசெய்ய வேண்டும். தொழில் ஒன்றைப் பெற்றுக்கொண்டு முகாமுக்கு வெளியே சென்று வசிக்க விரும்புகிறேன்" என 19 வயதான மாணவி.பி.ஜென்சி தெரிவித்தார்.


**107 அகதி முகாம்கள்**

தற்போது தமிழ்நாட்டு அரசால் நடத்தப்படும் 107 அகதி முகாம்களில் 64ஆயிரத்து 208 ஈழத்தமிழர்களும், முகாங்களுக்கு வெளியே குறைந்தது 40 ஆயிரம் வரையான ஈழத்தமிழர்களும் வாழ்கின்றனர் என ஈழத்தமிழ் அகதிகளுக்கான புனர்வாழ்வு நிறுவனத்தின் தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் புள்ளிவிபரத்தின் பிரகாரம், அகதி முகாங்களில் வாழும் ஈழத்தமிழர்களில் 40 சதவீதத்தினர் தமது சொந்த நாடான இலங்கைக்குத் திரும்பிச் செல்லவே விரும்புகின்றனர்.
எனினும், தமிழ்நாட்டில் இவர்கள் நீண்டகாலம் தங்கியிருந்தவர்கள் என்ற வகையில் இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்போது அங்கு இவர்கள் தமக்கான உடைமைகள், அடிப்படைச் தேவைகள், சேவைகள், தமக்கான அடையாளம், தொழில் வாய்ப்பு போன்றவற்றை மீளவும் பெற்றுக்கொள்ள முடியுமா எனக் கேள்வியெழுப்புகின்றனர்.
இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் என்பது மக்களின் மனங்களில் மாறாத நினைவுகளாக உள்ளன. மே 18 இனை உலகில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் “துக்கநாள்" என்று கடைப்பிடிக்க வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அண்மையில் அறிவித்திருந்தார்.
இறுதிக்கட்டப் போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்காலில் உள்ள புனித பவுல் தேவாலயத்திற்கு அருகில் எந்தவொரு நினைவு வணக்க நிகழ்வுகளும் நடத்தப்படக் கூடாது என 14 நாள் தடையுத்தரவை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி அறிவித்திருந்தார். இவ்வாறான நிகழ்வுகள் ‘நாட்டின் ஒருமைப்பாடு, தேசிய பாதுகாப்பு மற்றும் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும்' என்ற அடிப்படையிலேயே இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இறுதிக்கட்ட உள்நாட்டுப் போரின்போது 40ஆயிரம் வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்று ஐ.நா மதிப்பிட்டது.

> “
> போரின் போது தனது அனைத்து ஆவணங்களையும் தொலைத்தமையாலும், நிதி நெருக்கடி உள்ளதாலும் தன்னால் தனது சொந்த இடத்தில் வாழ்வதில் இடரை எதிர்நோக்குவதாக தமிழ்நாட்டு அகதி முகாமிலிருந்து அண்மையில் வன்னியிலுள்ள தனது சொந்த வீட்டுக்குத் திரும்பிச் சென்ற 42 வயதான தமிழர் ஒருவர் தெரிவித்தார். இவர் தனது சொந்த இடத்தில் வாழ்வதில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளதால் மீண்டும் கும்மிடிப்பூண்டி அகதி முகாமுக்குத் திரும்பிச் சென்றுள்ளார். ‘நாங்கள் ஒரு தடவை அகதி ஆகியதால் எப்போதும் அகதிகளாக வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்' என இவர் தெரிவித்தார்.

**எப்போதுமே அகதி வாழ்வு**

போரின் போது தனது அனைத்து ஆவணங்களையும் தொலைத்தமையாலும் நிதி நெருக்கடி உள்ளதாலும் தான் தனது சொந்த இடத்தில் வாழ்வதில் இடரை எதிர்நோக்குகிறேன் என்று தமிழ்நாட்டு அகதி முகாமிலிருந்து அண்மையில் வன்னியிலுள்ள தனது சொந்த வீட்டுக்குத் திரும்பிச் சென்ற 42 வயதான தமிழர் ஒருவர் தெரிவித்தார். இவர் தனது சொந்த இடத்தில் வாழ்வதில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளதால் மீண்டும் கும்மிடிப்பூண்டி அகதி முகாமுக்குத் திரும்பிச் சென்றுள்ளார்.
“நாங்கள் ஒரு தடவை அகதி ஆகியதால் எப்போதும் அகதிகளாக வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்" என இவர் தெரிவித்தார்.
“நாங்கள் போர் காரணமாக இடம்பெயர்ந்ததன் பின்னர் எமது அடையாளங்களை இழந்தோம். நாங்கள் இதனை எவ்வளவு தூரம் தேடிய போதிலும் இவற்றை எம்மால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இவற்றை நாங்கள் இங்கோ அல்லது இலங்கையிலோ திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாது" எனப் பெயர் வெளியிட விரும்பாத ஈழத்தமிழர் ஒருவர் தெரிவித்தார்.



# ஆசிரியருக்கான கடிதம்

## மினிபஸ்களில் பயணிகளின் கௌரவம் பாதுகாக்கப்படுமா?

நேற்றைய தினம் காலை 9 மணியளவில் காங்கேசன்துறை வீதி வழியாக யாழ்ப்பாணம் செல்லும் மினிபஸ்சில் மல்லாகத்துக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் ஏறினேன். உள்ளே அதிக கூட்டம் இல்லை. மினிபஸ்சின் இடப்பக்கமாக அமைந்துள்ள ஆசனத்தில் தலையைக் கீழே தொங்கவிட்டவாறு ஒருவர் அமர்ந்திருந்தார். அவரது வலது கால் மினிபஸ்சின் நடுப்பகுதியை ஆக்கிரமித்தவாறு நீண்டு காணப்பட்டது. இதனால் பஸ்சினுள் பின்நோக்கி நகர்ந்து செல்வதில் சிரமத்தை எதிர்கொண்டேன். இதன் காரணமாக அந்த நபரைப் பார்த்து “தம்பி காலைக் கொஞ்சம் உள்ளே எடுங்கள்" என்று மரியாதையாகக் கூறினேன். அப்போது அவரது வாயிலிருந்து காதால் கேட்கக் கூடாத கெட்ட வார்த்தைகள் வெளிப்பட்டன. நான் அவரது காலை உள்ளே தள்ளவிட்டு அப்பால் சென்றேன். காலை நீட்டி வைக்கின்ற காரியம் தொடர்ந்தது. இடையில் பஸ்சினுள் ஏறிய பயணிகள் (அதிகமானவர்கள் பெண்கள்) காலைக் கடந்து செல்லமுடியாது சிரமங்களை எதிர்கொண்டனர். பஸ் நடத்துநரும், சாரதியும் அவருடன் கதைத்தபோதிலும் அவர் அசையவேயில்லை. ஆனால் கெட்டவார்த்தைகள் அவரது வாயிலிருந்து தாராளமாகவே வெளிவந்து கொண்டிருந்தன. அப்போது நடத்துநர், ‘பயணிகள் பார்த்துக் கொண்டிருக்கும்போது எமக்கு ஏன் தேவையில்லாத வேலை'யெனக் கூறியது காதில் தெளிவாகக் கேட்டது.
பயணிகளைப் பத்திரமாகவும் கௌரவமாகவும் உரிய இடங்களுக்கு ஏற்றி இறக்குவது மினிபஸ்சின் சாரதி மற்றும் நடத்துநரின் கடமையாகும். மேலும் போதையுடன் வருபவர்களைப் பஸ்சில் ஏற்றுவதும் ஏற்க முடியாதது.
பயணிகள் சாரதியையும், நடத்துனரையும் நம்பித்தான் பஸ்சில் ஏறுகிறார்கள். ஆகவே அவர்கள் இருவரும் பொறுப்புடன் செயற்பட்டு அவர்களின் நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும் நேற்றைய தினம் இடம்பெற்ற சம்பவம் போன்று இனிமேலும் நடக்காதவாறு மினிபஸ்சேவையுடன் தொடர்புடைய அனைவரும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பா.தர்மினி
மல்லாகம்

# கைத்தொழில் துறையின் உற்பத்தியில் அதீத வளர்ச்சி

## நூற்றுக்கு 1.5 சதவீதமாக அதிகரித்துள்ளது

இலங்கை கைத்தொழில் துறையின் உற்பத்தியில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதான கருத்தை குடிசன மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.
இதன்படி 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் இவ்வாண்டின் மார்ச் மாதம் வரையிலான காலப்பகுதியில் கைத்தொழில் துறையின் உற்பத்தியானது நூற்றுக்கு 1.5 சதவீதமாக அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.
குறிப்பாக ஆடை உற்பத்தி, உணவு உற்பத்தி மற்றும் பல்வேறுபட்ட இரசாயன பொருள்களின் உற்பத்தி போன்ற துறைகளின் அடிப்படையிலேயே இந்த கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ‘கோம்ஸ்ரேரோர்’ காட்சியறை கொழும்பில்

## சுவர் அலங்காரத் தாள்களை நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ள முடியும்



வீடுகள் மற்றும் வசிப்பிடங்களின் நேர்த்தியையும், கவர்ச்சியையும் சௌகரியமான முறையிலே பேணி நவீன வீட்டு வசதி ஏற்பாடுகளைச் செய்துகொள்ளக் கூடியதான பொருள்களை நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ளகூடிய `கோம் ஸ்ரோர்' காட்சிறை கொழும்பில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.
அந்தவகையிலே இல்லங்களுக்கு கூடுதல் அழகைக் கொடுக்கும் சிறந்த வடிவமைப்பையுடைய சுவர் அலங்காரத் தாள்களை விநியோகிக்கும் ஒரு அற்புதமான காட்சியறையாக இது அமைந்துள்ளது.
கடந்த 10 ஆண்டுகளுக்க முன்பாக ஒரு குடும்ப வியாபாரமாக ஆரம்பிக்கப்பட்ட கோம் ஸ்ரோர் நிறுவனமானது பிரதானமாக ஜேர்மனியில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற சுவர் அலங்காரத் தாள்களை விநியோகித்து வந்துள்ளது.
இந்தப் புதிய ஆரம்பம் தொடர்பில் கருத்துரைத்துள்ள நிறுவனத்தின் பணிப்பாளர் "எமது காட்சியறையில் கிடைக்கப்பெறுகின்ற சுவர் அலங்காரத் தாள்களுக்குப் புறம்பாக மிகச் சிறந்த சுவர் அலங்காரத் தாள்கள் சிலவற்றைக் கொண்ட எங்களிடமுள்ள 20 இற்கும் மேற்பட்ட வழிகாட்டல் அட்டவணைக் கையேடுகளை உபயோகித்து சுவர் அலங்காரத் தாள்களை தெரிவு செய்து கொண்டு அவற்றைத் தமது தேவைகளுக்கேற்ப இறக்குமதி செய்து கொள்ள முடியும். இந்த வசதியை எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்றோம். அத்துடன் வாடிக்கையாளர்கள் தமது விருப்பத்திற்குரிய வடிவமைப்பிற்கேற்ப அவற்றைப் பிரத்தியேகமாக வடிவமைத்தும் நவநாகரிகத் தோற்றம் கொண்ட ஏராளமான உற்பத்திகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அது மட்டுமல்லாது, ஜேர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற மிகச் சிறந்த தரத்திலான வர்த்தகநாம அடையாளத்தின் கீழ் சுவர் அலங்காரத் தாள்களையும் இக்காட்சியறை கொண்டுள்ளது" - என்றார்.
இவைதவிர ஒவ்வொரு வாரத்திலும் குறித்த தினமொன்றில் தெரிவுசெய்யப்பட்ட உற்பத்திகளுக்கு ஊக்குவிப்பு சலுகைகளையும் கோம் ஸ்ரோர் அறிமுகப்படுத்தியுளளது. இதன்படி வாடிக்கையாளர்கள் காட்சியறையில் விசேட சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. தெரிவு செய்யப்பட்ட உற்பத்திகளுக்கு 2 வாங்கினால் 1 இலவசம் என்ற சலுகையுடன் பருவகாலம் முழுவதும் கிடைக்கப்பெறுகின்ற ஊக்குவிப்புச் சலுகைகளையும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கேள்வி அறிவித்தல்

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத் திட்டம் (PSDG) – 2017

## பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம் பள்ளிமுனைவீதி,மன்னார்

| திட்டங்களின் பெயர் | ஒப்பந்த இல. |
|---|---|
| மன்னார் நகரசபை, எமில்நகர் பிரதானவீதி (கொங்கிறீற் இடல்) | NP/PSDG/MN/ACLG/W/01(MNUC) |

01. பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பெறுகைக் குழு, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் மன்னார். தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்கு கோருகின்றார்.

02. தேசியபோட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்விகோரப்படுகின்றது. இருப்பினும், வடமாகாணத்தின் நிர்வாக எல்லையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது.

03. கேள்விபெற தகுதியுடையவராவதற்கு, பொதுநிதி சுற்றறிக்கை 04/2016(I) இலக்க 16.03.2016 ஆம் திகதிய சுற்றறிக்கைக்கு அமைவாகவும் அட்டவணையிற் காட்டியப்படி பொருத்த மானதரத்தில் வீதி அமைப்பிற்கான இக்ராட் (ICTAD) பதிவு பதிவுள்ளவராகவும், கறுப்புப் பட்டிய லில் (BlackList) பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் மன்னார், (தொலைபேசி: 023-2222267/ 023- 2222269, மின்னஞ்சல் – raclgmannar@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை 04.07.2017 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் மன்னார், எனும் இடத்திலிருந்து 12.06.2017 ஆம் திகதியிலிருந்து 04.07.2017 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் மன்னார், எனும் முகவரிக்கு 04.07.2017 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்கள் அல்லதுஅவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. கேள்வியானது கேள்விசமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (05.09.2017) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.

08. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| கேள்வி எண் | வேலைவிபரம் | மதிப்பீட்டுதொகை (ரு) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | மன்னார் நகர சபை.எமில்நகர் பிரதானவீதி (கொங்கிறீற் இடல்) | 6.643 | 3 மாதம் | C7 | 67,000.00 | 03.10.2017 |


09. கேள்விகோரல் பற்றியமுன் கூட்டியகூட்டம் 22.06.2017 மாலை 14.30 மணிக்குபிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் மன்னாரில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமதுசொந்தசெலவில் கலந்துகொள்ளலாம்.

**திரு.M.A.J.துரம்,**
**பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர்**
**பிராந்திய பெறுகை குழு,**
**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்**
**மன்னார்.**
**10.06.2017**

# வெளிநாட்டவர்களும் இலங்கையில் பண வைப்புக் கணக்கை ஆரம்பிக்கலாம்

## சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள அரசு தீர்மானம்

வெளிநாட்டவர்களும் இலங்கையில் விசேட பண வைப்புக் கணக்குகளை ஆரம்பிக்க முடியும் என்பதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.
இதன்படி வெளிநாட்டவர்கள் 5 லட்சம் டொலர் தொகை மதிப்புடையதான விசேட பண வைப்புக் கணக்குகளை இலங்கையில் ஆரம்பிக்கலாமெனவும் அதற்கான சட்டத் திருத்தங்களை அரசு மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும் கூறப்படு கின்றது.
மேலும், வேறு நாடுகளின் நாணயப் பெறுமதிகளை நாட்டினுள் வைப்புச் செய்ய அனுமதிக்க முடியும் என்ற அடிப்படையில் `விசேட வைப்புக் கணக்குகள்' என்ற பெயரின் கீழான வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்படவுள்ளன. அதேபோன்று அமெரிக்க டொலர்களுக்கு மேலதிகமாக ஸ்ரெலிங் பவுண்ஸ், சுவிஸ் பிராங், ஆஸ்திரேலிய டொலர், சிங்கப்பூர் டொலர், கனேடிய டொலர், ஜப்பானிய யென் மற்றும் யூரோ போன்றவற்றையும் வைப்புச் செய்வதற்கு ஏற்ற வகையில் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது எனத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.



# கண்ணகி அம்மன் வரலாறு

இரா.தனம்



கண்ணகியை உமாபாகர் அருள் வரம் கொண்டு நெடுஞ்செழியன் மனைவி கோப் பெருந்தேவி பெற்றாள் என்றும், பாண்டியன் உலக மாதாவின் மார்பகம் கண்டு சிற்றாசை கொண்டமையால் தேவியின் கிளப்பெறி கண்ணகியான தென்றும், சோதிடப் பலனைக் கேட்ட மன்னன் குழந்தையைப் பேழையிலிட்டு கடலிலே தள்ளினான் என்றும் வரலாறுகள் கூறுகின்றது.

**கண்ணகி பிறப்பு**

மேலும் பூம்புகார் கடற்கரையில் கப்பல்களைப் பார்வையிடத் தமது மைத்துனர் மாசாத்தரோடு சென்ற மானாகர் குழந்தையை எடுத்து வளர்த்தார் என்றும் விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது. குழந்தையைக் கண்டபோது ஒளி வீச்சினால் கண்ணொளிகள் மழுங்கின. மானாகரும் மாசாத்தரும் அபிராமியை

“சிவாயநம தானதிரு வருளிலொளி மாதே
தேவியெம் நயனவொளி தெரியவருள் செய்யே” என

வேண்டித் துதி பாடி தேவி அருளால் கண்ணொளியைப் பெற்றனர். அதன் காரணம் கொண்டே குழந்தைக்குக் கண்ணகை எனப் பெயர்சூட்டினர். மானாகரும் அவர் மனைவி இந்திரவல்லியும் கண்ணகையை அன்போடு வளர்த்துக் கோவலனுக்குத் திருமணம் செய்து கொடுக்க இசைந்தனர். இந்த விடயங்களை சிலம்பு கூறல் சிறப்புற எடுத்துரைக்கிறது.

**காற் சிலம்பு**

கண்ணகியின் காற்சிலம்பு வேலைப்பாடுகள் அதிகம் அமைந்த விலைமதிப்பற்ற சிலம்பாகும். கண்ணகியின் காற்சிலம்பு ஒன்று பிறப்பில் அமைந்ததென்றும் மற்றையது அதற்கிணையாகச் செய்யப்பட்டது எனவும் கூறப்படுகிறது.

கண்ணகியானவள் கோவலனை திருமணம் செய்து கொண்ட போதிலும் அவள் ஒரு அக்கினிப் பெண்ணாக விளங்கினாள். அவளை அணுகினால் நீறாக நேரிடும் எனத் தெரிந்து கொண்டும் கோவலன் மாதவியின் மையலில் கட்டுண்டு அவள் மீது கொண்ட மோகத்தால் அடிமையாகிப் போனான். ஈற்றில் கோவலனின் சொத்துக்கள் அழிவடைந்ததன் பின்னாக கண்ணகியின் காற்சிலம்பை விற்றுப் பணத்தைப் பெறச் சென்ற வேளை கோவலனைக் கள்வனென்று பொற்கொல்லன் விழித்திடச் சூழ்ச்சியால் அவன் உயிர்துறந்தான் எனவும் சிலம்பு கூறலில் கூறப்பட்டுள்ளது.

கண்ணகியானவள் சீற்றமடைந்து தனது கணவன் கள்வன் இல்லை என வழக்காடினாள். தனது காற்சிலம்பின் பரல் மாணிக்கம் என்றும் பாண்டிமாதேவியின் சிலம்பு முத்துப் பரல்எனவும் நிரூபித்துக்காட்டினாள். பாண்டியன் தனது குற்றத்தை உணர்ந்து கொண்டு உயிரிழந்து போகிறான்.

**பத்தினிக் கோட்டம்**

சேரன் செங்குட்டுவன் எடுத்த பத்தினிக்கோட்டத்தில் அமர்ந்த கண்ணகியும் வரந்தரும் தெய்வமானாள். மதுரையை எரித்துச் சீற்றம் அடைந்த கண்ணகியின் கோபத்தைத் தணிக்க அவளை அழைத்துச் சென்று மரநிழலில் இருத்திப் பூசைசெய்து மழை வேண்டிப்பாடிட அவள் அருள்மழை பொழிவித்தாள். இவ்வாறு அருள் மழை பொழிவித்த கண்ணகி அம்மன் இலங்கையை அடைந்து பல இடங்களுக்கும் சென்று பத்தாம்பளை எனக் கூறப்படும் (பத்தாவது இடம் என்பது. மருவி வற்றாப்பளையானது) வற்றாப்பளையை அடைந்து நந்திக்கடல் ஓரத்தில் ஒரு வேப்பம் படவாளின் மீது வீற்றிருந்தாள்.

அந்தப் பகுதியிலே இடையர்கள் மாடுமேய்ப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை கிழவி ஒருத்தி அங்கு வீற்றிருந்ததைக் கண்ணுற்று அவரிடம் வந்து யார் எனக் கேட்டபோது நான் வெகுதூரத்திலிருந்து வந்துள்ளேன், எனக்கு மாடுகளிலே பால்கறந்து, பொங்கலிட்டு ஆலமிலையிலே படையுங்கள் நான் பசியின்றி நிறைவாக உண்ண வேண்டும் எனக்கூறினாள். இடையர்கள் அப்படியே பொங்கலிட்டு ஆலமிலையிலே படைத்தனர். கண்ணகி அதனை உண்டு இளைப்பாறிய வேளை, இடையர்களை அழைத்து எனது தலையிலே பேன் இருக்கிறது அதனைப்பாருங்கள் எனக் கூறினாள். அவ்வாறே இடையர்களும் அவள் தலையை விரித்தபோது தலையிலே கண்கண்ணாக விம்பங்கள் தோன்றியதால் அவ்விடம் விட்டுப் பயந்து ஓடினர். தமது உறவினர்களிடம் நடந்ததைக் கூறினர். அவர்களும் வந்து பார்த்தபோது கண்ணகி இருந்த படவாள் தளைத்து வளர்ந்துள்ளதைக் கண்டு வியப்புற்றனர். ஆனால், கண்ணகியைக் காணமுடியவில்லை. அன்றிரவு இடையர் தலைவனின் கனவிலே தோன்றிய கண்ணகி தனக்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்ய வேண்டும் எனக் கோட்டுக் கொண்டாள். அங்கு கண்ணகை அம்மன் ஆலயமும் உருவானது. அதன் பின்னர் அந்தக் கிராமம் மட்டுமல்ல அதனை அண்டிய கிராமங்களும் புதுப்பொலிவு பெற்றன. இவர் புரிந்ததான அற்புதங்கள் பல உண்டு.மோட்டார்காரிலே பொங்கலுக்கெனவந்த போது பெற்றோல் இல்லாது நின்று விட்ட காரைக் கொண்டுவந்துவிட்டமை, வயலுக்கு காவலாக இருந்தமை எனப் பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்.

இதைவிட, ஆலயத்தில் நகைகளை திருடியவர்களின் கண்களைக் குருடாக்கி விடியும்வரை அவர்களை ஆலயத்திலே வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இப்படியாக மக்களோடு மக்களாகவும், அனைத்து மக்களின் நல்வாழ்வு சிறக்கவும் ஒரு காவல்த் தெய்வமாக கண்ணகி விளங்கினாள். இன்று முல்லைத்தீவு மாவட்டத்திலே நந்திக்கடல் ஓரமாக வீற்றிருந்து அனைத்து மக்களுக்கும் அருள் மழை பொழிந்து கொண்டிருக்கின்ற கண்ணகி அம்மன் ஆலயமானது இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட கற்தூண்களைக்கொண்டுபுனரமைக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு திங்கள் கிழமைகளிலும் ஏராளமான பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்கு வருகை தருகின்றனர். அவரின் தரிசனத்தைப் பெறுகின்றனர்.

**அனைவருக்கும் ஆசி**

எமது மாவட்டமக்கள் மட்டுமல்ல இலங்கையின் பலபாகங்களிலுமிருந்தும் வரும் சிங்கள மக்கள் உட்பட அனைவருக்கும் ஆசிவழங்கும் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா உற்சவமானது கடந்த 29 ஆம் திகதி பாக்குத் தொண்டலுடன் ஆரம்பமாகியது. கடந்த 7 ஆம் திகதி அதிகாலை தீர்த்தத்தோடும், மடப்பண்டங்களோடும் கண்ணகி அம்மன் ஆலயம் சென்று பொங்கலுக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றிருந்தன. இன்றைய தினம் இலங்கையின் பலபாகங்களிலிருந்தும் மக்கள் ஆலயம்நோக்கிவருகை தருவதுடன் ஆங்காங்கே கடற்கரை ஓரம் பொங்கல்ப் பானைகள் வைத்துப் பொங்கலிடுவதைக் காணலாம். கற்பூரச்சட்டி ஏந்தல், காவடிகள், பறவைக்காவடி, பாற்செம்பு எடுத்தல் எனப் பல்வேறு நேர்த்திக்கடன்களை மக்கள் நிறைவேற்றுவர்.

கண்ணகி அம்மனின் திருவருளாகி இந்த அருள் நிறையும் பொங்கல்த்திருநாளில் அடியவர் அனைவருக்கும் பூரணத்துவமுடைய மேன்மைகள் கிடைக்கட்டும். எல்லோரும் இன்புற்றிருக்கட்டும்.

> இவரது அற்புதங்கள் பல உண்டு.மோட்டார்காரிலே பொங்கலுக்கெனவந்த போது பெற்றோல் இல்லாது நின்று விட்ட காரைக் கொண்டுவந்துவிட்டமை, வயலுக்கு காவலாக இருந்தமை என்று பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். இதைவிட, ஆலயத்தில் நகைகளை திருடியவர்களின் கண்களைக் குருடாக்கி விடியும்வரை அவர்களை ஆலயத்திலே வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.






போராட்டங்களைப் பற்றிக் கவலைப்படாமல் வெற்றியையே குறிக்கோளாக கொண்டு செயற்படும் சிம்ம ராசியினரே. இந்தக் காலகட்டத்தில் ராசிநாதன் சூரியன் தொழில் ஸ்தானத்தில் பலம் பெற்றிருக்கிறார். எல்லாக் காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் இலாபம் கிடைக்கும். கடன்கள், நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பீர்கள். சப்தம ஸ்தானத்தில் கேது சஞ்சாரம் இருப்பதால் நட்பு வகையில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. சிலநேரத்தில் விபரீதமான எண்ணம் தோன்றலாம். தொழில் ஸ்தானத்தை சனி பார்க்க, தொழில் ஸ்தானாதிபதி சுக்கிரன் பாக்கிய ஸ்தானத்தில் இருக்கிறார்.

தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். கடன் பிரச்னைகள் குறையும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. உத்தியோகஸ்தர்கள் மிகவும் கவனத்துடன் செயற்படுவது நல்லது. பணி நிமித்தமாக வெளியூர்ப் பயணங்கள் செல்ல வேண்டி வரலாம். குடும்பஸ்தானத்தில் பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியான குரு இருந்து அருள் புரிகிறார். கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். குடும்ப உறவினர்களால் வீண் அலைச்சல் உண்டாகலாம். மன வலிமை அதிகரிக்கும். உறவினர்கள் மத்தியில் மதிப்புக் கூடும். குடும்பத்தில் உங்களுக்கான வாக்குவன்மை அதிகரிக்கும். பெ[illegible]ள் நன்மை தீமை பற்றிய கவலை இல்லாமல் எதையும் செய்ய முற்படுவீர்கள்.

நட்பு வட்டத்தில் நிதானமாகப் பழகுவது நல்லது. கலைத்துறையினருக்கு சிறப்பான காலகட்டமாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். முக்கிய நபர்களின் ஆதரவும் கிடைக்கப் பெறுவீர்கள். பணம் சம்பாதிக்கும் திறமை அதிகரிக்கும். கொடுத்த வேலையைத் திறமையுடன் செய்து முடித்துப் பாராட்டுப் பெறுவீர்கள். அரசியல்துறையினருக்கு எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். நண்பர்களால் தேவையான உதவி கிடைக்கும். எந்தத் தடைகளையும் தாண்டி எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். மனதில் மகிழ்ச்சி உண்டாகும். பதவிகள் சம்பந்தமான விஷயங்களில் முன்னேற்றம் உண்டாகும். எதிர்ப்புக்களைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். மாணவர்களுக்கு பாடங்களில் இருந்த சந்தேகம் நீங்கும். உற்சாகமாகப் படிப்பீர்கள். சகமாணவர்களிடம் பழகும்போது கவனம் தேவை.

**பரிகாரம்:**
தினமும் சூரியனை வணங்கிவர காரியத் தடைகள் நீங்கும். குடும்பத்தில் அமைதி உண்டாகும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**
திங்கள், புதன், வெள்ளி.

## வரலாற்றில் இன்றைய தினம்

1772 -கண்டுபிடிப்பாளர் மார்க் யோசப் மரியன் டூ ஜேமஸும் அவரது ஆள்கள் இருபத்தைந்து பேரும் நியூசிலாந்து பழங்குடி மக்கள் மாயோறிஸால் கொல்லப்பட்டனர்.

1898 -பிலிப்பைன்ஸ் சுதந்திர அறிவிப்பு ஜெனரல் எமிலியோ அகியூனால்டோ ஸ்பெய்னிடமிருந்து பிலிப்பைன்ஸ் சுதந்திரம் பெற்றதாக அறிவித்தார்.

1905 -இந்தியாவின் புனேயில் கோபால் கிருஷ்ண கோகலேயடல் இந்திய வேலைக்காரர் சபை நிறுவப்பட்டது.

1939-மூவர்ண டெக்னிசல் வர்ணத்தில் முதல் பயங்கரப் படமான டொக்டர் சைக்ளோபஸ் இன படப்பிடிப்பு தொடங்கப்பட்டது.

1940 -'பாலைவன ஓநாய்' என அறியப்பட்ட ஜேர்மனிய மேஜர் ஜெனரல் எரிவின் றொமெலிடம், 13 ஆயிரம் பிரித்தானிய மற்றும் பிரெஞ்சு படைகள் செயின்றவலறி என் கோக்ஸ் எனுமிடத்தில் சரணடைந்தன.

1943 -போலந்து பிறஷெஷனியில் ஆயிரத்து 180 யூதர்கள் பழைய யூதச் சவச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1964 -இனப்பாகுபாட்டுக்கு எதிரான செயற்பாட்டாளரும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவருமான நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்காவில் சேதங்கள் விளைவித்த குற்றத்துக்காக ஆயுள் சிறைத் தண்டனைக்கு உள்ளானார்.

1967 -அமெரிக்க உயர் நீதிமன்று ஐக்கிய அமெரிக்காவிலுமுள்ள இனங்களுக்கிடையேயான திருமணத்தைத் தடுக்கும் சட்டங்கள், அரசியலமைப்புக்கு முரணானதென தீர்ப்பளித்தது.

1987 -மத்திய ஆபிரிக்கக் குடியரசின் முன்னாள் பேரரசர் ஜூன் பெடல் பொக்காஸாவுக்கு தனது 13 ஆண்டுகால ஆட்சியில் புரிந்த குற்றங்களுக்கான சாவுத் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது. ஆயினும் ஆறு ஆண்டுகளின் பின்னர் 1993 இல் அவர் விடுவிக்கப்பட்டார்.

1987 -பிறண்டன் பேர்க் கேற்றில், அமெரிக்க அரச தலைவர் றொனால்ட் றீகன், மிக்கெல் கொர்பச்சேவிடம் பகிரங்கமாக, பேர்லின் சுவரை தகர்த்தெறியுமாறு சவால்விடுத்தார்.

1990- ரஷ்ய நாடாளுமன்றமான ரஷ்ய பெடரேஷன், தனது இறையாண்மையை (ரஷ்ய தினம்) முறைப்படி அறிவித்தது.

1991 -கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு நகருக்குச் சமீபமாக அமைந்துள்ள கொக்கட்டிச்சோலைக் கிராமத்தில் 151 தமிழர்கள் இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர்.

1991 -ரஷ்யர்களால் ஜனநாயக முறைப்படி முதன் முதலாக, பொறிஸ்ஜெல்ற்சின் ரஷ்ய அரச தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**நாளை**

**வைகாசி-30**
செவ்வாய்க்கிழமை -13.06.2017
திதி: சதுர்த்தி பி.இ.01.02
நட்சத்திரம்: உத்தராடம் பி.ப. 12.10
சுபநேரம்:10.22-11.52 வரை
ராகுகாலம்:02.52-04.22 வரை
சங்கடஹர சதுர்த்தி

## பிளாஸ்டிக் கழிவுகளில் இருந்து ஆமைகளையாவது காக்கலாமே

யாழ்.குடாநாடு முழுவதும் பிளாஸ்டிக் மேடுகளாகிக் கொண்டிருக்கின்றது. சுற்றுச்சூழல் பற்றிய எந்தவித விழிப்புணர்வோ பொறுப்போ அற்று சர்வ சாதாரணமாக வீசியெறியப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் நகரத்தையே ஆக்கிரமித்துக் கிடக்கின்றன. நமக்கென்ன என்று இது சாதாரணமாகக் கருதக் கூடிய காரியமல்ல.

பிளாஸ்டிக் கழிவுகள், நாவாந்துறையின் வட கரையான குடாக்கரையிலிருந்து தெற்கு நோக்கி வில்லூன்றி முனை தொடக்கம், அதிலிருந்து கிழக்காக கொட்டடியிலிருந்து குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை வரை கரையோரங்களில் நிறைந்தும், குவிந்தும் காணப்படுகின்றன.

நகரத்திலிருந்து தெற்காக கடலை நோக்கி வரும் ஐந்து கழிவுநீர் வாய்க்கால்கள் வழியாக இந்தப் பிளாஸ்டிக் கழிவுகள் மேற்படி கரைகளை வந்தடைகின்றன.

அதிகமான பிளாஸ்டிக் கழிவுகள் குருநகர் வாடியடி கிழக்குக் கரையிலிருந்து கொய்யாத்தோட்டம் சந்திக்கு வந்தேறும் கரை வரை மிக அதிகளவான குவிந்து காணப்படுகின்றன. எக்காலத்திலும் இவற்றை அகற்ற முயற்சி எடுக்கப்பட்டதற்கான எந்தவித அறிகுறிகளும் இல்லை. குருநகரை எடுத்துக் கொண்டால் இந்தக் கழிவுகள் குவிந்து கிடக்கும் கரையோரத்துக்கும் குடியிருப்புகளுக்கும் இடையிலுள்ள தூரம் 20இலிருந்து 30மீற்றர் இடைவெளிதான். இந்த நச்சுக் கழிவுகளிலிருந்து வெளியேறும் மாசடைந்த காற்றையே மக்கள் நேரடியாகச் சுவாசிக்கிறார்கள்.

வெய்யிலின் வெப்பம் உவர்நீரைச் சூடாக்கும் போது பிளாஸ்டிக் கழிவுகளின் நச்சுத் தன்மை அழுகிய கடற்பாசிகளுடன் கலந்து காற்றை மாசடையச் செய்வதோடு, இதைச் சுவாசிக்கும் குழந்தைகளையும், கர்ப்பிணிப் பெண்களையும் அதிகமாகப் பாதிப்படையச் செய்கிறது. இதனால் பிறக்கப்போகும் குழந்தைகள் ஊனமாகப் பிறப்பதற்கான சாத்தியங்களும், காரணிகளும் மிக அதிகமாகக் காணப்படுகின்றன.

எவரும் சென்று குருநகர் பகுதியில் இந்த கவனிக்கப்படாத விஷக் கழிவுகளைக் காணலாம். தமிழ்மக்கள்மீது அரசுக்கு அக்கறையில்லாமல் இருப்பதில் எந்தவித அதிசயமும் இல்லை. தமிழ் அரசியல்வாதிகளுக்கு இவற்றைக் கவனத்தில் எடுக்க துளியளவும் நேரம் இல்லை. அவர்கள் வேறு முக்கிய காரியங்களில் படு பிஸி. ஆனால், அரசுக்கு இன்னொரு விசயம் தெரிந்திருக்க வேண்டும்.

ஆமைகளைப் பாதுகாக்கும் பௌத்த அரசுக்கு இது கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும்.

கடலில் கலக்கும் இந்தப் பிளாஸ்டிக் கழிவுகளால் அதிகளவில் கடலாமைகள் பாதிப்புக்கு உள்ளாகி வகை தொகையின்றி இறந்து விடுகின்றன. இதை கடல்வள உயிரியல் ஆய்வு நிறுவனங்கள் சொல்லியிருக்கின்றன. ஆக, மக்களைக் காப்பாற்ற வகையில்லையாயினும், கடலாமைகளையாவது காப்பாற்றும் பொருட்டு இந்த நச்சுக் கழிவுகளை அகற்றி அழித்து அரசு தனது கடமையைச் செய்ய முன்வர வேண்டும். இந்தப் பிளாஸ்டிக் கழிவுகளை வீசி எறிந்து நிலத்தையும், கடலையும், காற்றையும் மாசு படுத்தாமல், அவற்றைச் சேகரிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, மறுஉற்பத்திக்கு பயன்படுத்துவது பற்றி ஏன் இன்னமும் அரசு யோசிக்க வில்லை என்பது விளங்கவேயில்லை. இதில் அதிக வருமானமும் உண்டல்லவா?! ஒரு கல்லில் பல மாங்காய்கள்.



அன்பே
உன்னுடன்
பேசாத
நாள்கள்...



என்னோட
மொபைல்
நல்லாவே
சார்ஜ்
நிக்குது...

ஏழு கழுதை வயசாகியும் மூதேவிக்கு
கேக் எப்படி
வெட்டிக் கொடுக்கனும்னு தெரியல



சோத்துல குழம்ப ஊத்தி குழப்பின
மாதிரி குழப்பி வச்சிருக்கு... சை






மொத்த உலகையும் புரட்டிப் போட்டது இந்த வருடம் ஜனவரியில் நடந்த ஜல்லிக்கட்டு போராட்டம். தமிழ்நாடு முழுவதும் மாணவர்கள், இளைஞர்கள், குடும்பங்கள் என்று போராட்டம் விரிந்து சென்றது. ஜல்லிக்கட்டு எனும் ஒரு வீர விளையாட்டு உலகம் முழுவதும் போய்ச் சேர்ந்தது, ஐந்தே நாளில் உலகம் முழுவதும் பேசப்பட்டது. இந்த போராட்டத்தை பலர் படமாக எடுக்க முயன்றார்கள். ஆனால் முடியவில்லை. தற்போது இதனை சந்தோஷ் என்பவர் படமாக்கவுள்ளார். இவர் பி.சி.சிறி ராமிடம் உதவி ஒளிப்பதிவாளராக இருந்து, பின்னர் ஹொலிவூட் படங்களிலும் ஒளிப்பதிவாளராகப் பணிபுரிந்துள்ளார். இந்த படத்தின் அறிமுகக் காணொலி அண்மையில் வெளியிடப்பட்டது. இந்த படம் குறித்து சந்தோஷ், "இதற்கு முன் காந்தி படத்தில் தான் ஒரே ப்ரேமில் 3 லட்சம் பேர் இருப்பது போல் காட்சி வரும். இந்த படத்தில் 10 லட்சம் பேர் இருப்பார்கள் பாகுபலியை மிஞ்சும் பிரமாண்டம் இதில் இருக்கும். தேவைப்பட்டால் மீண்டும் மெரினாவில் மாணவர்களைத் திரட்டிப் படப்பிடிப்பு நடத்துவோம்" என்று பெருமையாக கூறியுள்ளார். தற்போது இந்த படத்தின் சிறு அறிமுகக் காணொலி இணைய தளங்களில் வெளியிடப்பட்டுள்ளது..!



# படமாகிறது ஜல்லிக்கட்டுப் போராட்டம்

நான் சின்ன பையனாயிருக்கும்
போது பஞ்சாயத்துல ஒரு டிவி
இருந்துச்சி...



இப்ப என்னடானா எல்லா
டிவிலயும் ஒரே பஞ்சாயத்தா
இருக்கு...

ஒவ்வொரு வீட்டிலும் அம்மாதான்
கூகிள்... வீட்டில் எந்த பொருள்
எங்கு இருக்கென்பதற்கான விடை
அம்மாவுக்கே தெரியும்...

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** விடாமுயற்சியுடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடும். விருப்ப தெய்வ வழிபாடு நன்மை அளிக்கும்.

**இடபம்:** சமூக நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாகலாம். பெண்கள், குழந்தைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**மிதுனம்:** செயலில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**கடகம்:** பொறுமையுடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிச் செல்வர். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் கூடும். கடன் தொல்லை மறையும்.

**சிங்கம்:** உங்களின் ஜதார்த்த பேச்சு பிறரை சங்கடப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை உருவாகும். இலாபம் சுமாராக இருக்கும். உறவினர் வகையில் திடீர் செலவு ஏற்படலாம்.

**கன்னி:** மற்றவர் விஷயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைய கூடுதல் பணிபுரிவீர்கள். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**துலாம்:** நண்பர்களால் உதவி கிடைக்கும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். அரசியல்வாதிகளுக்கு பதவி கிடைக்க யோகமுண்டு.

**விருச்சிகம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். வீடு, வாகன வகையில் பராமரிப்பு பணி மேற்கொள்வீர்கள்.

**தனுசு:** தடைகளைக் கடந்து வாழ்வில் வெற்றி பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை உண்டாகும். பணவரவுக்கேற்ப செலவுகளை திட்டமிடுவீர்கள். பெண்களுக்கு தாய்வீட்டாரின் உதவி கிடைக்கும்.

**மகரம்:** வழக்கத்திற்கு மாறான பணியில் ஈடுபட நேரிடலாம். தொழில், வியாபார நடைமுறை சீராக நண்பரின் உதவி கிடைக்கும். வருமானம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு உடல்நலனில் அக்கறை தேவை.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு முன்னேறுவீர்கள். மற்றவர் கருத்துக்கு மதிப்பளிப்பீர்கள். தொழிலில் ஆதாயம் பன்மடங்கு உயரும். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும்.

**மீனம்:** மனசாட்சிக்கு முக்கியத்துவம் அளித்து செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவைப்படும். வருமானம் மிதமாக இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | 4 | | 6 | | 8 | | |
| 3 | 9 | | 8 | 7 | 4 | | 1 | |
| 8 | | | 2 | | 6 | | | 3 |
| 1 | | | | | | | | 2 |
| | | 3 | | | | 4 | | |
| 9 | | | 4 | 3 | 8 | | | 7 |
| | 3 | | 7 | 9 | 5 | | 6 | |
| | | 7 | 6 | | | 3 | | |


நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 3 | 8 | 2 | 4 | 7 | 9 | 1 |
| 2 | 8 | 9 | 5 | 7 | 1 | 4 | 6 | 3 |
| 7 | 4 | 1 | 6 | 9 | 3 | 2 | 8 | 5 |
| 8 | 1 | 5 | 2 | 3 | 9 | 6 | 4 | 7 |
| 4 | 3 | 2 | 7 | 5 | 6 | 8 | 1 | 9 |
| 6 | 9 | 7 | 4 | 1 | 8 | 5 | 3 | 2 |
| 1 | 5 | 8 | 3 | 4 | 2 | 9 | 7 | 6 |
| 9 | 7 | 6 | 1 | 8 | 5 | 3 | 2 | 4 |
| 3 | 2 | 4 | 9 | 6 | 7 | 1 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியவிவி சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கி யது. 2005 இல்இது உலக அளவில் பிரபல்யமானது.

# எளிமைக்கு மரியாதை



மரியாதை என்பது கடைகளில் கிடைக்கக் கூடிய பொருளோ, வலியச் சென்று கேட்டுப் பெறும் விஷயமோ அல்ல என்பதை நாம் அறிவோம். மரியாதை வயதின் காரணமாகவும், பதவியின் பொருட்டும் வரக்கூடிய முழுமையான ஒன்று என்று கூறி விடமுடியாது. வயதுக்கும் பொறுப்புக்கும் தகுந்த படி நடத்தை அமையாமல் போனால் அல்லது பதவியே பறிபோனால் இருந்த மரியாதையும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து ஓடி விடும்.

மரியாதை நமது வளர்ச்சியினாலோ, நல்ல பெயரினாலோ, திறமையான நிர்வாகத்தினாலோ, அன்பினாலோ மற்றவர் மனதில் தானாக உண்டாக வேண்டிய ஒரு பண்பு.

மரியாதையைக் காட்டும் விதமாக எம் எதிரில் ஒருவர் நின்றவாறு நம்மோடு பேசினார் என்றால், அவரை உட்காரச் சொல்லிப் பேச்சைத் தொடரும் போது நம்மிடம் அவருக்கு முன்பிருந்த மரியாதை பன்மடங்கு பெருகுவதைப் பலரும் அனுபவித்திருப்போம். "நான் பெரியவன், எனவே இவர் நின்றுதான் பேச வேண்டும்" என்கிற தோரணையில் அதிகாரத்துடன் நாம் நடந்து கொண்டோமானால் பேசி முடித்து நாம் அப்பால் போன பின்பு "அவர் பெரிய இவரா? இந்த ஆளுக் கு கொஞ்சம் கூட மரியாதையே தெரியவில்லையே" என்று தன் மனதுக்குள் கிண்டலும் எரிச்சலுமாக எண்ணிக் கொள்வார் நம்மிடம் பேசியவர். நாம் முதலில் அவருக்கு மரியாதை கொடுத்து விட்டால் அவரிடமிருந்து தானாக மரியாதை நம்மைத் தேடி வந்து விடும். எல்லா நல்ல குணங்களுக்கும் சிகரம் வைத்த மாதிரி எளிமை என்ற ஒன்று எங்கு இருக்கிறதோ அங்கு மரியாதை தானாகவே போய்ச் சேரும் என்பது உறுதி. நாம் வளர வளர எவ்வளவுக்கெவ்வளவு சாதாரணமாக எளிமையாக இருக்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நம்மிடம் மற்றவர்களுக்கு மரியாதை அதிகரிக்கும்.

# வழிகாட்டுவோம்





# தீயினால் ஒரு தியாகம்

பல வருடங்களுக்கு முன்னால் ஜப்பானில் ஹமருச்சி எனும் மதிநுட்பம் மிக்க விவாசாயி வாழ்ந்து வந்தார். வயோதிபரான அவரது புத்திக் கூர்மையையிட்டு கிராம மக்கள் பெருமையாகப் பேசிக் கொள்வர். அவரை மிகவும் மதித்தனர். அவரது விவசாயப் பண்ணை கடற்கரையை அண்டிய மேட்டு நிலப்பகுதியில் இருந்தது. அந்தப் பகுதி மக்கள் அனேகமாக எல்லோரும் விவசாயிகள் அவர்கள் பண்ணையைச் சூழவுள்ள மேட்டுப் பகுதிகளிலும் கரையோரப் பகுதிகளிலும் வீடுகளை அமைத்து வாழ்ந்து வந்தனர். முதியவரின் வீட்டைச் சூழ பரந்து விரிந்து கிடந்த நிலப் பரப்பில் அவரது செழுமை மிக்க நெல் வயல்கள் பரந்து கிடந்தன.

ஜப்பானில் நெல் அறுவடைக் காலம் தொடங்கியதால் அறுவடை முடிந்தது. நூற்றுக் கணக்கான நெற் போர்கள் சூடு மிதிப்புக்காக களத்து மேடுகளில் காத்து நின்றன. அமோக நெல் விளைச்சலால் கிராம மக்கள் மகிழ்ச்சியில் திளைத்தனர். அன்று மாலை வேளை வீதிகளில் கொடிகளை பறக்க விட்டும் வெளிச்சக் கூடுகளைத் தொங்க விட்டும் தமது மகிழ்ச்சியைக் கொண்டாடிக் கொண்டும், கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்க கரையோரத்தில் ஒன்று திரள்வதுமாக இருந்தனர். பெரியவர் தனது வீட்டு முற்றத்தில் இருந்து மக்களின் மகிழ்ச்சி கொண்டாட்டங்களை ரசித்துக் கொண்டிருந்தார். சூரியன் வெப்பக்கதிர்களைப் பரப்பியபடி மேற்கு அடிவானில் நகர்ந்து கொண்டிருந்தான்.

திடீரென மலைப்பகுதி அதிர்ந்தது. அவரது வீடும் ஒரு கணம் அதிர்ந்து மீண்டும் அமைதியடைந்தது. 'நிலநடுக்கம்' இதுவென பெரியவர் உணர அதிகம் நேரம் பிடிக்கவில்லை. ஜப்பான் நாட்டில் பல தடவைகள் இப்படி ஏற்படுவதுண்டு. பெரியவர் திடீரென எழுந்து நின்று கடலை உற்று நோக்கினார். அங்கே கடல் இருண்டு கிடக்க, கடல் நீர் கரையை விட்டு உள்வாங்கி தூரத் தூரச் சென்று கொண்டிருந்தது முன்னதாக கலை நிகழ்வுகள் காண திரண்டிருந்த மக்கள் எல்லோரும் கடல் பின் வாங்கும் விேனாதத்தைக் காண கடற் பகுதியை நோக்கி ஆரவாரித்துக் கொண்டு ஓடினர். பெரியவர் உசாரானார். தன் பேரனை அழைத்து தீப்பந்தம் ஒன்றைக் கொழுத்தி வரச் சொன்னவர். அதனை வாங்கிக் கொண்டு சூடு மிதிப்ப தற்காக குவித்து வைத்திருந்த நெற் போர்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக தீ மூட்டினார். நன்கு உலர்ந்திருந்த நெற் போர்கள் எல்லாம் தீப்பற்றிக் கொண்டன. கடலில் இருந்து காற்றும் வீசிக் கொண்டிருந்தால் தீ நாக்குகளும் கடும் புகையும் விண்நோக்கி எழுந்தன. தீப் பிளம்புகள் வானை நோக்கி கிளம்புவதைக் கண்ட கோயில் மணி அடிப்பவர் கோயில் மணியைப் பலமாக இழுத்தடித்தார். கடற்கரையில் கடலில் நடப்பதை வேடிக்கை பார்த்த மக்கள் வைக்கோல் போர்கள் எரிவதையும் கோயில் மணி அடிப்பதையும் கேட்டு கோயில் இருந்த மலைப்பகுதிக்கு விழுந்த டித்து ஓடிச் சென்று குழுமினர்.

இளைஞர்கள் தீயை அணைக்க முன்வந்த போதும் கைகளை அசைத்து அவர்களைத் தடுத்து விட்டார் பெரியவர். பெரியவரின் பேரப்பிள்ளையோ "தாத்தாவுக்கு விசர் பிடித்து விட்டதே! நெற் போர் எல்லாவற்றையும் எரிக்கிறாரே" என மற்றவர்களிடம் முறையிட்டு அங்குமிங்குமாக ஓடி அழுது கொண்டிருந்தான். கைக்கோல் போர்கள் எரிந்து சாம்பலாயின. எல்லா மக்களும் மலைப்பகுதிக்கும் மேடான பகுதிக்கும் வந்து சேர்ந்து விட்டதை உறுதிப் படுத்திய பெரியவர் கடலை நோக்கி கையை நீட்டி "அதோ பாருங்கள்! கடலும் வானும் சேரும் இடத்தில் இருந்து ஒரு கருங்கோடு கரையை நோக்கி வருகிறது" என்று கூறி முடிப்பதற்குள் பெரிய நீர்பாளம் போன்ற அலைகள் திரட்சியாக வந்து கரையில் இடி முழக்கத்தை மிஞ்சிய ஓசையுடன் மோதின. மலைப் பிரதேசம் ஒருமுறை ஆட்டம் கண்டு நிலை பெற்றது. மக்கள் எல்லோரும் ஒரு தடவை பெருங்கூச்சலிட்டு ஓய்ந்தனர்.

அப்போது பெரியவர் "கடலோடு அள்ளுண்டு போகவிருந்த உங்களை மேட்டுக்கும் மலைப் பகுதிக்கும் அழைக்கவே உங்கள் கவனத்தைத் திருப்ப வைக்கோல் போர்களை எரித்தேன்" என்று கூறி "தாத்தாவுக்கு விசர் இல்லைப் பேரா" என அழுது கொண்டிருந்த பேரனைக் கட்டி அணைத்தார்.

தங்களது உயிர்களைக் காக்க தனது பெரும் செல்வத்தையெல்லாம் அழித்துவிட்ட அந்தப் பெரியவர் முன் கிராம மக்கள் அனைவரும் சிரம் பணிந்து நின்றனர்.

## பேரிடர்கள் வருமுன் காப்போம்

# மலரே... குறிஞ்சி மலரே....

பல ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் தாவரம் குறிஞ்சி. குறிஞ்சி சிறு செடியாகவோ குறுகிய மரமாகவோ வளரும். இதன் பூக்கள் ஊதா அல்லது வெண்மை நிறமானவை. மஞ்சள் நிறத்திலும் பூப்பதுண்டு. இதில் 200 வகையான இனங்கள் உண்டு. இவை 7 முதல் 12ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும். தென் இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் இவை வளர்கின்றன. கோடைக் கானல் நீலகிரி போன்ற இடங்களில் வளர்வன 12ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கின்றன. பண்டைத் தமிழர்கள் நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையாகப் பிரித்தனர். இவற்றில் குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த இடமும் ஆகும். இந்தப் பகுதிகளில் குறிஞ்சி மலர் மிகுதியாகக் காணப்படுவதால் இந்த நிலத்துக்கு 'குறிஞ்சி' எனப் பெயர் ஏற்பட்டது.






மனிதர்களின் இன்றைய வாழ்க்கை முறை இயற்கையோடு இயைந்ததாக இல்லை. இதன் விளைவாக புவிமாசுபடுதல், புவிவெப்பமடைதல் போன்ற ஆபத்துகளிடையே நாம் தளர்ந்த நடைபயில்வினை மேற்கொண்டிருக்கிறோம். எம்மை இன்னுமொரு ஆபத்தும் எதிர்நோக்கியிருப்பதாக அறிவியல் வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். வனவிலங்குகளிடமிருந்து மனிதர்களைத் தொற்றக்கூடிய நோய்களின் அச்சுறுத்தல் உச்சத்தில் இருப்பதான தகவலே அது.


வனவிலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு பரவும் வைரஸ்கள் மற்றும் நோயுக்கிகளினால் உருவாகக்கூடிய புதிய நோய்களைத் தடுக்கும்பணியில் 'யூ.எஸ்.எயிட்' எனும் அமைப்பு இயங்கிவருகிறது.

விஞ்ஞானிகளின் பார்வையில் முழுச் சுகாதாரம் என்பது மனிதர்கள், விலங்குகள், சுற்றுச்சூழல் ஆகிய மூன்றையும் உள்ளடக்கியதாக விளங்குகிறது. உலகநாடுகள் அனைத்திலும் நோய்க்கிருமிகளின் பரவலைக் கண்காணித்துக் கட்டுப்படுத்தும் பணியில் இந்த அமைப்பு ஈடுபட்டுள்ளது. தென் அமெரிக்காவின் அமேசான் வடிநிலம், ஆபிரிக்காவின் காங்கோ வடிநிலம், அதனை ஒட்டிய ரிப்ட் பள்ளத்தாக்கு, தெற்கு ஆசியாவின் கங்கை சமவெளி, தென் கிழக்கு ஆசியா ஆகிய பகுதிகள் இந்தப் பன்னாட்டு நிறுவனத்தின் கண்காணிப்பில் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. இங்கெல்லாம் விலங்குகளிடையே தோன்றி மனிதர்களிடம் பரவக்கூடிய நோயுக்கிகள் கண்காணிக்கப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. அதிகளவான மக்களை அழித்தொழிக்கும் கொள்ளை நோய்கள் ஒவ்வொரு 30 முதல்40ஆண்டுகளில்தோன்றுவதாக வரலாறுகள் கூறுகிறது. நவீன

பறவைகளும் வனவிலங்குகளுடன் நெருங்கிவருவதால் நாம் இதுவரை அறிந்திராத வைரஸ்களும், பக்டீரியாக்களும் வெகுவேகமாக மனிதர்களிடம் பரவுகின்றன. மனிதர்களிடம் நோயை உண்டாக்குபவை என்று இதுவரை சுமார் ஆயிரத்து 461 நோயுக்கிகள் கண்டறியப்பட்டுள்ளன. ஏறத்தாழ 60 சதவீதம் நோயுக்கிகள் விலங்குகளிடமிருந்து தோன்றியவைதான். இவ்வாறு மனிதகுலம் அழிவுநிலையினுள் ஆட்பட்டுக்கொள்ள வேண்டிய நோய்களின் பட்டியல் நீளமானது.

1918 ஆம் ஆண்டில் உலகை உலுக்கிய இன்புளுவன்சா என்னும் கொள்ளைநோய் ஏறத்தாழ 50 மில்லியன் மக்களை அழிவுநிலைக்கு உட்படுத்தியது. இந்தநோய்க்குக்காரணமான வைரஸ் பறவைகளிடமிருந்துதான் மனிதருக்குப் பரவியது.

ஆக, உலகம் முழுவதிலும் பரவும் இத்தகைய கொள்ளை நோய்களால் மொத்தமக்கள் சனத்தொகையில் கால் பகுதியினர் வரை பாதிக்கப்படுகின்றனர். இவர்களுள் 51 மில்லியன் முதல் 81 மில்லியன் மக்கள் மரணத்தைச் சந்திக்கின்றனர் என்று ஆய்வுகள் கூறுகின்றன. அமெ




உலகத்தில் இதுவரை தோன்றியிராத புதிய நோய்கள் மனிதர்களைத்தாக்குவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துவருகின்றன. எம்முடைய வாழ்க்கை முறை மாறிக்கொண்டிருக்கிறது.

முன்னெப்போதையும் விட மனிதர்கள் இப்போது அதிகமாகப் பயணம் மேற்கொள்கிறார்கள். நம்முடைய குடியிருப்புகளும் சாலைகளும் காடுகளை அடுத்தும், பல இடங்களில் காடுகளுக்குள்ளும் அமைந்திருக்கின்றன. நாம் வளர்க்கும் விலங்குகளும்,

ரிக்க ஐக்கிய நாடுகளில்மட்டும் 4 லட்சம் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தநிலையிலே உலகின் பொருளாதார இழப்பை கணக்கிட்டுக் கொண்டால் அது நான்கு ட்ரில்லியனைத் தாண்டும் என்கிறனர் விஞ்ஞானிகள். ■

---

## கத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யர்களால் பலமாகத் தாக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

கில்லாறு மருத்துவனைக்கு எதிர்த் திசையில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலேயே கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது. கதவை கொத்தி உடைத்து உட்புகுந்த சுமார் 10 பேர் அடங்கிய குழுவினர் உரிமையாளரை அடித்து அச்சுறுத்தினர். வர்த்தகர் எழுப்பிய அவலக் குரல் கேட்டு அருகில் இருந்த அவரது வீட்டில் படுத்துறங்கிய மனைவி, பிள்ளைகள் ஓடிவந்துள்ளனர். கொள்ளையர்கள் அவர்களையும் பலமாக தாக்கினர். கத்தி முனையில் அச்சுறுத்தி அவர்கள் அணிந்திருந்த தங்க நகைகளையும் கொள்ளையிட்டனர். அந்தக் குடும்பம் எழுப்பிய அவலக் குரலினால் அயலவர்கள் ஒன்றுகூட முற்பட்டனர். கொள்ளையர் குழு அயலவர்களையும் கண்டபடி தாக்க முற்பட்டது. அனைவரும் அச்சத்தால் சிதறி ஓடினர். இது தொடர்பாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தர முன்னர் கொள்ளையர்கள் சுமார் 8 மோட்டார் சைக்கிள்களில் தப்பிச் சென்றனர். 40 பவுண் தங்க நகைகள் மற்றும் 6 லட்சம் ரூபா பணம் 8 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள் என்பவை கொள்ளையிடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் விசாரணைள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-10.6.101.35)

## மரண அறிவித்தல்

### சீனியர் குணரத்தினம் (குணம்)



சூராவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் தற்போது பழம்பதி விநாயகர் ஆலய பின் வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சீனியர் குணரத்தினம் (குணம்) நேற்று (11.06.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனியர் - இலட்சுமி தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற கந்தன் கார்த்தி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் நாகராணியின் அன்புக் கணவரும் திருமகன் (சீலன்), சத்தீயசீலன் (மஞ்சு), காலஞ்சென்ற ஜெயசித்திரா (நிலா) மற்றும் ஜெயசீலன் (மதி), ஜெயவதனி (மீரா) ஆகியோரின் தந்தையும் சந்திரகுமாரன் காலஞ்சென்ற சந்திரலிங்கம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 250 3609,
077 346 5605, 021 321 6233

## வேலைவாய்ப்பு

முகாமைத்துவ துறையில் பல வருடமாக இலங்கையில் தடம்பதித்து இருக்கும் GMI கம்பனிக்கு பின்வரும் ஊழியர்கள் தேவை.

* அலுவலக உதவியாளர் O/L
* மேற்பார்வையாளர் O/L
* உதவி மேலாளர் A/L
* நிர்வாக அதிகாரி A/L

அனுபவம் தேவையில்லை

பயிற்சியின் போது 12000/= - 15000/= பயிற்சியின் பின்னர் 60 000/= மற்றும் பிற சலுகைகள் சரியான தகைமையாளர்களுக்கு வழங்கப்படும்.
(ஆங்கிலம், சிங்களம், கணினி அறிவு மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.)

நேர்முக தேர்விற்கு அழைக்க 077 8021 371, 076 8863 253

## ராசி

| திகதி | வெற்றிவாரம் | வர்ணம் |
|---|---|---|
| 11.06.2017 | 2144 | ஊதா |

மேடம் 03 12 41 42

செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 4, 403, 296/=

2017.06.13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.

## SUPER BALL
சுப்பர் போல்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 661
சீட்டிழுப்பு திகதி 10.06.2017
சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்
02 42 47 48 X

அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 48, 109, 400/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

வெற்றிபெறும் டிக்கட்டுக்கள் 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## கோடீசுவர

சீட்டிழுப்பு வாரம்: 148
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 11.06.2017

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 89,831,068/-

U 08 09 33 49

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.

## கண்ணீர் அஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22 | 11 |
| 11 | 06 |
| 1954 | 2017 |

எமது நிறுவனப் பணியாளரும் நிர்வாக உத்தியோகத்தருமாகிய இராம்தீபன் அவர்களின் அன்புத்தந்தை

### அமரர் திரு. சண்முகம் இராமநாதன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி.. ஓம் சாந்தி.. ஓம் சாந்தி...

பணிப்பாளரும் பணியாளர்களும்
கரிகணன் (தனியார்) நிறுவனத்தினர்

## வற்றாப்பளை...

மணிக்குமடப்பண்டம்ஆலயத்தைவந்தடையும். நந்திக்கடலில் இருந்தும் தீர்த்தம் எடுக்கப்பட்டு, காலைப் பூசையுடன் உப்பு நீரில் விளக்கெரியும் அற்புதத்துடன் வைகாசி பொங்கல் உற்சவம் நடைபெறும்.

மடப்பண்டம் வந்ததும் ஆலய பூசகர்கள் கச்சி நேரும் நிகழ்வு நடைபெறும். காலை ஆறு மணியளவில் பூசைக்குரிய தூளி பிடிக்கும் நிகழ்வு நடைபெறும். காலை ஏழு மணியில் இருந்து ஆலயத்தில் பூசைகள் நடைபெறும்.

நோட்பு மண்டபத்தில் இருந்து வளந் துப்பானை எடுத்துவரப்பட்டு இரவு 12 மணிக்கு வளந்துப் பானை வைத்து பொங்கல் நடைபெறும். அடியார் களும் ஆலய மண்டபத்தில் பொங்கி அம்ம னுக்கு படையல் செய்வார்கள். வளத்துப்பானையில் பொங்கிய பொங்கல் நாளை அதிகாலை 3 மணி யளவில் அம்மனுக்கு படையல் செய்யப்படும். இன்று காலை நடைபெறும் பூசைகளுடன் ஏற்றப்படும் உப்பு நீரில் விளக்கெரியும்.நாளை காலை பரிகளம்பதி விடுதல் வரைக்கும் தீபம் எரிந்து கொண்டு இருக்கும். (ῃ-7)

## முகாமுக்குள்...

பிரதான சாலை வற்றாப்பளை கண்ணகி அம் மன் ஆலய உற்சவத்துக்காக நேற்றுக் காலை இராணுவத்தால் திறந்து விடப்பட்டது.

கோப்பாப்பிலவில் தமது காணிகளை விடுவிக்கக் கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக் கள் சாலையூடாகச் சென்று சாலையோரங்க ளில் நின்று தமது காணிகளைப் பார்த்தனர். பின்னர் அங்கிருந்த முருகன் கோயில் ஒன்றில் வழிபாடு களை நடத்தினர். வழிபாடுகளின் பின்னர் அங்கு தங்கியிருந்தனர்.

தொடர்போராட்டங்களில் ஈடுபடும் மக்களைச் சந்தித்து ஆதரவு தெரிவிப்பதற்காக நேற்று தென் பகுதியில் இருந்து சம உரிமை இயக்கம் என்னும் அமைப்பு கேப்பாபிலவு வந்தது. போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் முருகன் ஆலயத்தில் தங்கியுள் ளதை அறிந்து அந்த இயக்கத்தினர் அங்கு சென்று மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். மக் களுடன் தங்கினர். அங்கு வந்த இராணுவத்தினர் ஆலயச் சூழலில் இருந்து அனைவரையும் வெளி யேறு மாறு பணித்தனர். தாங்கள் வழிபாட்டுக்கா கவே ஆலயத்துக்கு வந்துள்ளோம் என்று தெரி வித்து, அங்கிருந்து அகல மறுத்தனர். அதை யடுத்து சம உரிமை இயக்கத்தினர் அகன்று வெளிச்செல்ல வேண் டும் என்று இராணு வத்தினர் வற்புறுத்தி னர். சமஉரிமைஇயக் கத்தினரும் இராணு வத்தினரின் பணிப்பை ஏற்க மறுத்தனர்.

மக்கள்வெளியேறாதநிலையில்இராணுவத்தினர் சாலையின் பிரதான நுழை வாயிலை மூடினர். அதனால் அங்கு பதற்ற நிலமை ஏற்பட்டது.

முகாமுக்குள் இருந்த மக்களை முல்லைத்தீவு மாவட்ட உதவிப்பொலிஸ்உதவிஅத்தியட்சகரும், முள்ளியவளை பொலிஸ் பொறுப்பதிகாரியும் நேற்று மாலை சந்தித்து கலந்துரையாடி அவர் களை வெளியே அழைத்து வந்தனர்.

நேற்று இரவு வரை பிரதான நுழைவாயில் திறக் கப்படாதிருந்தபோதும், ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் நன்மை கருதி இன்று பிரதான நுழைவாயில் திறக்கப்படும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார். (ῃ-7)

## மைத்திரிபால...

இணைய முடியாமல் உள்ளது என்று நாடா ளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஸ தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எம்மைச் சிறையில் அடைத்ததையும் பொருட் படுத்தாது எம்மை அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கியதையும் பொருட்படுத்தாது கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாம் அவருடன் இணைந்து செயற்பட்டோம். அவரது தலைமை யின்கீழ் போட்டியிட்டோம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியை நிறுவும் நோக்கில்தான் நாம் அந்தத் தேர்தலில் போட்டி யிட்டோம். ஆனால், யார் வென்றாலும் ரணில் தான் தலைமை அமைச்சராக நியமிக்கப்படுவார் என்று அரச தலைவர் இறுதிச் சந்தர்ப்பத்தில் அறிவித்தார். அதன்படியே செய்தார்.இதனால் அவர்மீது நாம் நம்பிக்கை இழந்துவிட்டோம்.

ஆனால்,அவருடன் நாம் இணைந்து செயற்பட வேண்டும் என்று சிலர் விரும்புகின்றனர். அப்படி இணைவதாக இருந்தால் அவர்மீதான நம் பிக்கை இன்மையுடன்தான் இணைய வேண் டும்.அது வெற்றிகரமான இணைவாக இருக்காது. இப்போது இந்த அரசுக்கு'எதிராகஇந்த அரசின் மக்கள் விரோததேச விரோத கொள்கைக்கு எதி ராக மக்கள் கிளர்ந்தெ ழுந்துள்ளனர்.இந்த நிலை யில்,எம்மால் அரசுடன் இணைய முடியாது அரசு டன் இணைந்து தேர்தல்களில் போட்டியிட முடியாது. நாம் அரசுடன் இணைந்தால் அம்பாந் தோட் டையை சீனாவுக்கு விற்கும் அரசின் முடிவை எம்மால் எப்படி எதிர்க்க முடியும்?அரச சொத்துக் களை விற்கும் திட்டத்தை எப்படி எதிர்க்க முடி யும்?ஜெனிவா தீர்மானத்தை எப்படி எதிர்க்க முடியும்? இப்படியானதொரு நிலைமையில் எப்படி எம்மால் அரசுடன் இணைந்து மக்களிடம் செல் வது? - என்றார். (கு-3)

## ரூ.10கூட

கடந்த சில நாள்களில் மட்டும் லட்சக்கணக்கான மீன்கள்-இறந்து கரையொதுங்கியமையே கார ணம் என்று கூறப்பட்டது.

நந்திக்கடல் பரப்பில் வட்டுவாகல் பாலத்தின் இரு புறமும் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். நந்திக்கடலின் வடக்கு ஆற்றுப் பக்கமாக கடந்த ஒரு வார காலமாக இலட்சக்கணக்கான மீன்கள் இறந்து கரையொதுங்கின. மீன்கள் இறப்பதற்கு பலரால்பலவிதமான காரணங்கள் கூறப்பட்டன. இதனால் கடலில் மீனபிடிப்பதற்கு மீனவர்க ளுக்கு தடை போடப்பட்டது. மீன்களின் உயிரி ழப்புக் குறித்து தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும்மேம்பாட்டுநிறுவனமான நாரா ஆய்வை மேற்கொண்டது. ஆய்வின் பிரகாரம், குறித்த பிராந்தியத்தில் ஏற்பட்ட வெப்பநிலை அதிகரிப்பே இதற்கு காரணமென நாராவின் சூழல்ஆய்வு பிரிவின் தலைவர் எஸ்.ஏ.எம். அஸ்மி தெரிவித் தார். முல்லைத்தீவில் தொடரும் வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக, நந்திக்கடலின் வட்டுவா கல் பகுதியின் நீர் மட்டம் குறைந்துள்ளது. இத னால் களப்பு பகுதிக்கும் கடலுக்குமான தொடர்பு துண்டிக்கப்பட, கடல் நீருடன் நதி நீர் கலக்கும் போது உருவாகும் ஒக்சிசனின் அளவு அதிகமாகி நீரின் வெப்பநிலை அதிகரித்துள்ளது.

அத்தோடு தொடர் வறட்சியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பகுதியில் இடையில் ஒருநாள் பெய்த மழை காரணமாகக் கடலுக்கு அடித்துவ ரப்பட்ட கழிவுகள் மற்றும் அதனால் ஏற்பட்ட இர சாயன தாக்கத்தினாலேயே மீன்கள் இறக்க நேரிட்டதாக அவர் தெரிவித்தார். அதன் பின்னர் மீனவர்கள் தொழில் செய்வதற்கு அனுமதிக்கப் பட்டனர். நேற்றுமுன்தினம் மீனவர்கள் தொழி லில் ஈடுபட்டனர். எனினும் ஒரு மீனவருக்குக் கூட 10 ரூபா வருமானமும் கிடைக்கவில்லை என்று மீனவர்கள் தெரிவித்தனர். "நந்திக்கட லின் வடக்கு ஆற்றுப்பக்கமாக வட்டுவாகல், செல்வபுரம், மணல்குடியிருப்பு, வேலன் குடி யிருப்பு என நான்கு கடற்றொழில் சங்கத்தைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் தொழில் புரிகின்றனர். அண்மையில் நந்திக்கட லில் மீன்கள் இறந்து கரையொதுங்கிய பின்னர் நேற்று தொழில்நடவடிக்கைகளில் ஈடுபட்டோம். எனினும் எவருக்குமே 10 ரூபாய் வருமானம் கூடக்கிடைக்கவில்லை. மீன்கள் பிடிபடாதத னால் பாதிப்படைந் துள்ளோம்.அதனால் 5 ஆயி ரம் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திட மும், மாவட்டச்செயலாள ருக்கும் தெரியப்படுத்தி யுள்ளோம். எங்களு டைய வாழ்வாதாரத்துக்கு அவர்கள் விரைந்து நடவடிக்கைகளை முன் னெடுக்க வேண்டும்" என்று நந்திக்கடல் வடக்கு ஆற்றுப் பகுதியில் தொழில் புரியும் மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர். (4, 21)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி ரஞ்சிதம் திவாகரசர்மா

வேலணையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி மீசாலை யை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரஞ்சிதம் திவாகரசர்மா நேற்று (11.06.2017) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுச்சாமிக்குருக்கள் மற்றும் நவரத்தினாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும் திவாகரசர்மா வின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற யோகீஸ்வரக்குருக்கள் மற்றும் அன்னலட்சுமிஅம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் றஜீபன், பிரதீபன், பிரணவன், துஷ்யந்தன், கஸ்தூரி ஆகியோ ரின் அன்புத் தாயாரும் கஜேந்தினியின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2017) திங் கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக நண்பகல் 12.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சாவகச்சேரி வடக்கு, மீசாலை.**

**தகவல்: குடும்பத்தினர் 077 255 9484**

### சோமசுந்தரம் பழனிவேல்

(பூசகர், சுன்னாகம் பழனிகோயில்)



டாக்டர் சுப்ரமணியம் வீதி, சுன்னாகத்தை பிறப்பிட மாக வும்வசிப்பிடமாகவும்கொண்ட சுன்னாகம் பழனி கோயில் பூசகர், சோமசுந்தரம் பழனி வேல் நேற்று (11.06.2017) ஞாயிற்றுக்கிழமை இறைவ னடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சோமசுந்தரம் செல் லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் கந்தசாமி, காலஞ் சென்ற சண்முகரத்தினம் மற் றும் பரமசிவானந்தன் ஆகி யோரின் பாசமிகு சகோதரரும் காலம்சென்ற பாக்கியலட்சுமி மற்றும் தவமணிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (12.06.2017) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தி யாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் .உறவினர் அடியவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**டாக்டர் சுப்ரமணியம் வீதி, சுன்னாகம்.**

**தகவல் குடும்பத்தினர்.**

**077 912 3086**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி குமாரசாமி சிவன்செயல்




கந்தரோடையைப் பிறப்பிட மாகவும் அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி சிவன்செயல் நேற்று (11.06.2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான செல்லத்துரை - சீவநா யகம் தம்பதிகளின் அன்பு மக ளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமக ளும், குமாரசாமியின் அன்பு மனைவியும், தசிதரன், ஜெயந்தன், ஜெயானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், உமாராணி, கிரிஜா, வேதிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், மகேஸ்வரி, பவளராணி, மகாதேவா, காலஞ்சென்ற விக்கினராஜா மற்றும் லோகேஸ்வரி, லோகேஸ்வரன், தவமலர், வைத்தீஸ்வரன், மகேந்திரராசா ஆகி யோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

**மாரியம்மன் வீதி, அளவெட்டி தெற்கு, அளவெட்டி.**

**தகவல் குடும்பத்தினர்.**



### முத்தையா சின்னத்துரை

*(ஓய்வுபெற்ற ஊழியர், காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)*

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமா கவும் கொண்ட முத்தையா சின்னத்துரை நேற்று (11.06.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான முத்தையா - சின்னாச்சிப் பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற அண் ணாமலை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் குணாளன் (கூட்டு றவு அபிவிருத்தி அலுவலர்), விஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் றோஜினி, பாஸ்கரலிங்கம் ஆகியோரின் அன்பு மாம னும் ராஜவியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.06.2017) ஞாயிற் றுக்கிழமை இடம்பெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வேதவுடையார் வளவு, மல்லாகம்.**

**தகவல்: சீ.குணாளன் (மகன்)**

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி ஆறுகால்மடத்தடியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 9131 128

### வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு

சூராவத்தை சுன்னாகத்தில் 3 அறை களுடன் 1450 சதுரஅடி அளவுள்ள வீடு 2 பரப்புக்காணியுடன் விற்பனைக் குண்டு. தொடர்பு -

021 224 0465, 077 615 8800

## நான்கு...

முதலமைச்சர் சபையில் அறிவித்திருந்தார். இது தொடர்பான சிறப்பு அமர்வு நாளை மறுதினம் புதன் கிழமை, வடக்கு மாகாண சபையில் நடைபெறவுள்ளது.

இதற்கிடையில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றைய தினம், ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு நேரடியாக அலைபேசியில் அழைப்பெடுத்துப் பேசினார். 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அமைச்சரவையை மாற்றியமைக்குமாறு கையெழுத்திட்டு கடிதம் தந்திருந்தீர்கள். இது தொடர்பில் தற்போது உங்களின் நிலைப்பாடு என்ன என்று அவர் வினவியுள்ளார்.

அந்தக் காலப் பகுதியில் சபை உறுப்பினர்களாக இல்லாமல் அதன் பின்னர் பதவியேற்ற உறுப்பினர்களிடம், முதலமைச்சர் கருத்துக்களைக் கேட்டறிந்துள்ளார்.

இதேவேளை, முதலமைச்சர் விக்னேஸ்வரன் நியமித்த விசாரணைக் குழு இரு அமைச்சர்களைப் பதவி நீக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ள நிலையில் முழு அமைச்சரவையையும் மாற்ற நினைப்பது அவரது விசாரணைக் குழு மீதான நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கும் என்று அரசியல் அவதானிகளும், சிவில் சமூகத்தினரும் சுட்டிக்காட்டியுள்ளனர். குற்றவிசாரணை மீதான நம்பகத்தன்மையை இழிவாக்கும் செயல் இது என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர். (வ-5,101)

## அமைச்சுப்...

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் குற்றஞ்சாட்டினார்.

'நீந்திக் கடந்த நெருப்பாறு பாகம் - 2' நூல் வெளியீட்டு விழா, கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"நாங்கள் முள்ளிவாய்க்கால்வரை அனுபவித்த சொல்லொணாத் துன்பங்களை இந்த நூல் வெளிப்படுத்தி நிற்கின்றது. வரலாற்றில் மிகவும் முக்கியமானது. எமது வரலாற்றை நாளைய தலைமுறையும் அறிய வேண்டும் என்பதற்கான சிறந்த ஆதாரங்களுடன் இந்த நூல் படைக்கப்பட்டுள்ளது.

போரின் பின்னரான இந்தக் காலப் பகுதியில் நாம் இப்போது எல்லாவற்றையும் மறந்து, எமது இலக்கு என்ன என்பதையும் மறந்து அற்ப அமைச்சுப் பதவிகளுக்கு ஆசைப்பட்டு எங்களை நாமே காட்டிக்கொடுத்துத் துரோகம் இழைக்கின்றோம்.

கூட இருந்துகொண்டே பதவிக்காக குழி பறிப்பதென்பதைவிட துரோகச் செயல் வேறொன்றுமில்லை. எமது மக்கள் பல்வேறுபட்ட துன்பங்களையும் துயரங்களையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்க, நாம் பதவிகளுக்காக எல்லாவற்றையும் மறந்து எமது இலக்கை மறந்து நிற்பதானது எமக்கு ஆரோக்கியமானதல்ல. இந்தக் காலம் தமிழர்களுக்குச் சோதனைக் காலம் என்று நான் கூறமாட்டேன். உணர்வுகளை மழுங்கடிக்கின்ற காலமாகவே காணப்படுகின்றது. இது ஆரோக்கியமானதல்ல" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண அமைச்சர்களான த.குருகுலராசா, பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ப.அரியரட்ணம், சு.பசுபதிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (வ-5,35)

## பன்னாட்டு...

எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது,

தமிழர்கள் சுயமரியாதையுடன் வாழ அரசியல் தீர்வு நிச்சயம் தேவை. அரசியல் தீர்வை ஏற்படுத்த பொது வாக்கெடுப்பால் மட்டுமே தீர்மானிக்கமுடியும். இதற்கு ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் தீர்வு கிடைக்கும் என்று நம்புகின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார். (த-5)

## ஞானசாரரைக்...

படுகின்றன". இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயகொடி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கலபொட அத்தே ஞானசார தேரரைக் கைது செய்வதற்காக 4 பொலிஸ் குழுக்கள் களத்தில் செயற்படுகின்றன. அவரைக் கைது செய்வதற்கான அனைத்துச் சட்டரீதியான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம். கடந்த மாதத்திலிருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் 2 பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் சில மீது தீமூட்டிய சம்பவங்கள் பதிவாகின. அவை தொடர்பான விசாரணைகளை அந்தந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொலிஸார் முன்னெடுக்கின்றனர்.

நுகேகொட விஜேராம பகுதியில் மட்டும் 4 வர்த்தக நிலையங்கள் மீது தீ வைக்கப்பட்டன. இந்த சம்பவத்துடன் நேரடியாக தொடர்புபட்ட சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மருத்துவர் ஒருவரது மகனான 32 வயதான இவர் உணகவ மொன்றில் தொழில் செய்பவர். இவர் 2014ஆம் ஆண்டிலிருந்து பொதுபல சேனா அமைப்பில் இணைந்து இதுவரை அந்த அமைப்பின் அத்தனை செயற்பாடுகளிலும் பங்கேற்றுள்ளார். ஞானசார தேரர் மற்றும் பொதுபல சேனாவின் பங்காளிக் குழுக்களுடனும் நெருங்கிய தொடர்பையும் அவர் கொண்டிருக்கிறார். ஞானசார தேரரைக் கைது செய்ய வேண்டாம் எனக்கோரி பொறளையில் நடத்திய ஆர்ப்பாட்டத்திலும் இவர் பங்கேற்றிருந்தார்.

திருகோணமலையில் பள்ளிவாசல் மீது நடத்திய தாக்குதல் தொடர்பில் தமிழ் இளைஞர் ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். அதேபோன்று திருகோணமலை தந்துரே பகுதியில் புத்தர் பெருமானை அவமானப்படுத்தி முகநூலில் பதிவேற்றிய முஸ்லிம் இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தையடுத்து குறித்த பகுதியில் சிங்கள இளைஞர்கள் முஸ்லிம் மக்களின் வீடுகளை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்- என்றார்.

முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டிவரும் குற்றச்சாட்டை பொதுபல சேனா அமைப்பு எதிர்கொண்டுள்ளது. முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல் சம்பவங்களுக்குப் பின்னால் செயற்படுகின்றது என்றும், அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரைக் கைது செய்ய வேண்டும் என்றும் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். எனினும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் இதுவரை கைது செய்யப்படவில்லை. (வ-ற)

## இனவாதம்...

நிறைவேற்றிக்கொள்வதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு முழுவதும் இன்று முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதை வெறுமனே ஓர் இனவாதச் செயற்பாடாகப் பார்க்க முடியாது. இதன்பின்னால் பெரும் அரசியல் நிகழ்ச்சிநிரல் ஒன்று இருக்கின்றது. இந்த இனவாதச் செயற்பாடுகளின் பின்னால் ஒளிந்துகொண்டு அரசு அதன் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றப் போகின்றது.

அரசின் எந்தெந்தத் திட்டங்களுக்கு மக்களின் எதிர்ப்பு உள்ளதோ அந்தத் திட்டங்கள் அனைத்தையும் இவ்வாறு நிறைவேற்றுவதே அரசின் ஒரே நோக்கமாகும். இனவாதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல் என்ற பெயரில் முதலில் அவசர காலச் சட்டம் கொண்டு வரப்படும். அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் மேலும் ஒத்திப்போடப்படும்.

கூட்டாட்சித் தீர்வை வழங்கும் அரசமைப்பை எப்படியாவது நிறைவேற்றிவிட வேண்டும் என்று இந்த அரசு துடியாய்த் துடிக்கின்றது. அதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருவதால் முஸ்லிம் - சிங்களப் பிரச்சினையில் மறைந்துகொண்டுஅவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தி இந்த அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தமும் இவ்வாறே நிறைவேற்றப்படும்.

இந்த அடிப்படையில் சிங்களமுஸ்லிம் இனக் கலவரம் ஏற்பட்டால் அதில் நன்மையடையப் போவது யாரென்று எண்ணிப் பார்க்க வேண்டும். கறுப்பு ஜூலையை உருவாக்கியவர்கள் ஐக்கிய தேசிய கட்சியினர்தான். அதனால் நன்மையடைந்தவர் பிரபாகரன்.

அந்தக் கலவரத்தில் சொத்துக்களை இழந்த தமிழர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று புலிகளுக்குப் பணம் அனுப்பினர். அதன் பின்பு தான் தற்கொலைப் புலிகளே உருவாகினர். கறுப்பு ஜூலை வீடியோக்களை, ஒளிப் படங்களைக் காட்டிக் காட்டியே தற்கொலைப் புலிகள் உருவாக்கப்பட்டனர். இப்போது இந்த அரசு வேறு ஒரு ஜூலையை உருவாக்கப் போகின்றது. நல்லாட்சி என்ற பெயரில் நாட்டுக்கு பேராபத்தை விளைவிக்கும் செயற்பாடுகளில் இந்த அரசு ஈடுபட்டுக்கொண்டு வருகின்றது. இந்த உண்மையை உணர்ந்து மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்- என்றார். (த-3)

## ஐ.தே.க...

என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மைத்திரியை தாங்களே அரச தலைவர் ஆக்கினோம் என்று ஐக்கிய தேசிய கட்சியினர் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றனர். அப்படியொரு பலம் அவர்களிடம் இருந்திருந்தால் ஏன் அவர்களின் கட்சியின் சார்பில் அரச தலைவர் வேட்பாளரை நிறுத்தவில்லை? ஏன் மைத்திரியைத் தெரிவு செய்தார்கள்?

மைத்திரி அரச தலைவராக இருப்பதால்தான் இன்று ஐக்கிய தேசிய கட்சியால் ஆட்சியில் அமர முடிந்துள்ளது; அமைச்சுப் பதவிகளை வகிக்க முடிந்துள்ளது. அவர் இல்லையென்றால் ஆட்சி அதிகாரம் என்பதை ஐக்கிய தேசிய கட்சியால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. தொடர்ச்சியாக எதிர்க்கட்சியில்தான் இருந்திருப்பர்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கு 82 ஆசனங்கள்தான் கிடைத்தன. அந்தக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட ஏனைய ஆசனங்களையும் சேர்த்து 106 ஆசனங்கள் உள்ளன. இந்த எண்ணிக்கையைக் கொண்டு அவர்களால் ஆட்சி அமைக்க முடியாது.

ஆனால், ஐக்கிய தேசிய கட்சி அரச தலைவருக்குச் சவால் விடுக்குமேயானால் மைத்திரி இன்றே தனித்து ஆட்சி அமைத்துக் காட்டுவார். அவருக்கு இது பெரிய விடயம் அல்ல. ஆனால், அவர் அப்படிச் செய்வதற்கு விரும்பவில்லை. அவருக்கு கட்சியின் முன்னேற்றத்தைவிடவும் நாட்டின் முன்னேற்றம் மீது தான் அக்கறை அதிகம்.

நாட்டை முன்னேற்ற வேண்டும் என்பதால் தான் ஐக்கிய தேசிய கட்சியினர் பேசுகின்ற மோசமான வார்த்தைகள் எல்லாவற்றையும் அரச தலைவர் சகித்துக்கொண்டு இருக்கின்றார். இருந்தும், தீர்மானம் எடுக்க வேண்டிய தருணத்தில் துணிந்து தீர்மானம் எடுக்கின்றார் - என்றார். (த-3)

## தங்கம்...

இலங்கைத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த பெண் ஒருவர் பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தலில் சுமார் 37 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத் தில் அமோக வெற்றியைப் பெற்றுள்ளார். தொழிற்கட்சி சார்பில், பிரிஸ்டல் மேற்குத் தொகுதியில் போட்டியிட்ட தங்கம் டெபோனயர், 47, 213 வாக்குகளைப் பெற்றார்.

இவரை எதிர்த்துப் போட்டியிட்ட கொன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளர், 9877 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார்.

தங்கம் டெபோனயரின் தந்தை ஒரு இலங்கைத் தமிழர் என்பதும், அவரது தாயார் ஆங்கிலேயப் பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)

## 2 அருட்தந்தையர்கள்...

துக்கு திடீர் பயணமாக இன்று வருகை தரும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவினர்களுடன் சந்திப்பு நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்கு வடக்கு கிழக்கின் 8 மாவட்டங்களையும் சார்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். வவுனியா மாவட்டத்தின் சார்பில் பாலேஸ்வரி, கிளிநொச்சி மாவட்டத்தின் சார்பில் கனகரஞ்சினி, லீலாதேவி, யசோதரன், முல்லைத்தீவு மாவட்டத்தின் சார்பில் ஈஸ்வரி, யாழ்ப்பாண மாவட்டத்தின் சார்பில் சித்திராதேவி, மன்னார் மாவட்டத்தின் சார்பில் உதயசந்திரா, மட்டக்களப்பு மாவட்டத்தின் சார்பில் அமலி, திருகோணமலை மாவட்டத்தின் சார்பில் ஜெயலக்சுமிபிள்ளை, அம்பாறை மாவட்டத்தின் சார்பில் செல்வராணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்களுடன் சட்டத்தரணியான இரத்தினவேல், அருட்தந்தை செபமாலை ஆகியோரும் மேலும் மூவரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## யாழ்....

பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்காக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தைச் சுற்றி நுளம்பைக் கட்டுப்படுத்தும் புகை விசிறப்பட்டது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திடீர் பயணமாக யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தரவுள்ளார். வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்காலத் திட்டம் தொடர்பில் ஆராயப்படவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு திணைக்களத் தலைவர்கள், நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டச் செயலகத்தில் நடைபெறும் இந்தக் கூட்டம் தொடர்பில் செய்தி சேகரிப்பு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் அரச தலைவரின் ஊடகப் பிரிவுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரச தலைவரின் வருகையை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் ஆளுநர் அலுவலகத்தைச் சுற்றி கடும் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. (வ-5,8)

## 360இராணுவத்தினருக்கு...

யுள்ளது. மாலியில் ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றுவதற்காக 212 இராணுவத்தினரைக் கவச வாகனங்கள் மற்றும் ஆயுதங்களுடன் தருமாறு ஐ.நா. கோரியிருந்த[illegible] இதற்காகத் தெரிவு செய்யப்பட்ட 400 ப[illegible]யினரைக் கொண்ட பட்டியல் ஐ.நாவுக்கு அனுப்பப்பட்டது.

இதில் 40 பேரை மட்டுமே ஐ.நா அங்கீகரி[illegible]துள்ளது. ஏனையவர்கள் இறுதிக்கட்ட[illegible] போரில் பங்கேற்றவர்கள் என்ற அடிப்படையில், நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

மாலியில் இராணுவத்தினருக்கான கட்டளை அதிகாரியாகப் பணியாற்றத் தெரிவு செய்யப்பட்ட கேணல் சமந்த விக்கிரமசேனவின் பெயரும் ஐ.நாவினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஆயுதங்கள், வாகனங்களுடன் படையினர் தர நியமனங்களுக்கேற்ப உள்ளனரா என்பதை, ஆய்வு செய்ய ஐ.நா குழுவொன்று எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## புதிய...

அணிக்கு ஆதரவு தெரிவிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என வும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு சாரார் எச்சரிக்கை விடுத்துள்ளதாக அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் கடந்த அரசமைப்புக் குழுக் கூட்டத்தின்போது சிங்களத்தில் 'ஏகிய' எனக் குறிப்பிடப்பட்டிருந்த வார்த்தையை ஆங்கிலத்தில் 'ஐக்கிய' எனக் குறிப்பிடப்படுவதற்கு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் குழுவினர் ஆட்சேபம் தெரிவித்திருந்தனர். அத்துடன், நிறைவேற்று அரச தலைவர் முறைமையை ஒழிப்பதற்கும் உடன்பாடு காணப்படவில்லை.

அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் இந்த அரசு தொடர்ந்து 5 வருடங்கள் பதவியில் இருக்கவேண்டுமென கருத்துத் தெரிவித்தபோது ஒருசாரார் அதற்கு எதிரான கருத்தைத் தெரிவித்திருந்தனர்.


அத்துடன், இந்த அரசுடன் தொடர்ந்து 5 வருடங்கள் இருந்தால் அடுத்த தேர்தலில் தாங்கள் மக்களால் முற்றாக நிராகரிக்கப்படுவோம் எனவும் அவர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர். இவ்வருட வரவு செலவுத்திட்டத்தின் பின் அரசில் பாரிய மாற்றமொன்று வரும் எனவும் அவர்கள் எதிர்வுகூறியுள்ளனர். (த)

## செய்தி...

இந்தத் [illegible] நேற்று [illegible] பிற்றுக் கிழமை மாலை இடம்பெற்றது. [illegible]பத்தில் உயிரிழந்தவர்கள் 12 மற்றும் 2[illegible] வயது மதிக்கத்தக்கவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக வி[illegible]ரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு [illegible]நகின்றனர்.

தொடர்ச்சியாக ஆபத்தான இடங்களில் ஒளிப்படம் எடுக்கும் முயற்சியில் பல உயிரிழப்புக்கள் இடம் பெற்றுள்ளன. (வ-5)



# நீலங்களின் போரில் மானிப்பாய் இந்து சம்பியன்

## இன்னிங்ஸ் வெற்றியாகவும் பதிவானது






யாழ்ப்பாணம், ஜூன் 11

'நீலங்களின் போர்' என வர்ணிக்கப்படும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான துடுப்பாட்டத்தில், இன்னிங்ஸால் வெற்றிபெற்றது மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று, நேற்றுமுன்தினம் என்று இரண்டு தினங்கள் இந்த ஆட்டம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 66.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குக்களையும் இழந்து 337 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கனிஸ்ரன் 103 ஓட்டங்களையும், துஸ்யந்தன் 46 ஓட்டங்களையும், அனோசன் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வாகீசன் 4 இலக்குகளையும், யதீசன் 2 இலக்குகளையும், தரன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 20 பந்துப் பரிமாற்றங்களை எதிர்கொண்டு 6 இலக்குகளை இழந்து 69 ஓட்டங்களை பெற்றிருந்த போது முதல்நாள் முடிவுக்கு வந்தது. நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அந்த அணி 113 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. திவ்யானந் பெற்ற 36 ஓட்டங்களே அதிகபட்சம். பந்துவீச்சில் கனிஸ்ரன் 4 இலக்குகளையும், சுஜீபன் 3 இலக்குகளையும், ரவீசன், விக்னேஸ்வரன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 224 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த யூனியன் கல்லூரி அணி, 140 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து இன்னிங்ஸாலும் 83 ஓட்டங்களாலும் படுதோல்வியடைந்தது. லவன்ராஜ் 52 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் விக்னேஸ்வரன் 7 இலக்குகளைக் கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பி.அனோசன், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் சிறந்த சகலதுறை வீரராகவும் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் எஸ்.கனிஸ்ரன், சிறந்த பந்துவீச்சாளராக மானிப்பாய் இந்துவின் ஜெ.விக்னேஸ்வரன், சிறந்த களத்தடுப்பாளராக தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் எஸ்.தரன் ஆகியோர் தெரிவாகினர். (ம-422-23)










## உடுப்பிட்டி நவஜீவன்ஸ் மகுடம்

கரணவாய், ஜூன் 12

வல்வை றெயின்போ விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி கிண்ணம் வென்றது.

றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. வதிரி பொம்மர்ஸ் அணியும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 14 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தார் பொம்மர்ஸ் அணியின் சாரங்கன். மாற்றங்கள் ஏற்படாத நிலையில் முதல்பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் பொம்மர்ஸ் ஆதிக்கம் செலுத்தியது.

இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் நவஜீவன்ஸ் அணி ரவிசாந்... பதிலடி கொடுத்தது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றிருந்தன. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றது. ஆட்ட நாயகனாக நவஜீவன்ஸ் அணியின் ரவிசாந்தும் சிறந்த பின்கள வீரராக அதே அணியைச் சேர்ந்த கௌதமனும் தொடர் ஆட்ட நாயகனாக பொம்மர்ஸ் அணியின் சாரங்கனும் தெரிவாகினர்.

முன்னதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நவிண்டில் கலைமதியை 2:1 என வீழ்த்தி மூன்றாமிடத்தைத் தமதாக்கியது.

## நண்பர்களின் கால்பந்துத் தொடரில் சிவானந்தா, கலைமதி முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் மற்றும் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றன.

நண்பர்களின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டத்தின் 23ஆவது நிமிடத்தில் சிவானந்தாவின் சார்பாகக் கோல் பதிவானது. முதல் பாதியின் முடிவில் சிவானந்தா அணி 1:0 என்று முன்னிலை பெற்றது. இரண்டாம் பாதியின் 12ஆவது நிமிடத்தில் அண்ணா சிலையடிக்குக் கிடைத்த தண்டனை உதையை கவியமுதன் கோலாக மாற்றினார். இறுதிக்கட்டத்தில் சிவானந்தா அணியின் சார்பாக சுபாஸ் மற்றொரு கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது சிவானந்தா அணி.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டத்தின் பதினெட்டாவது நிமிடத்தில் கிடைத்த தண்ட உதையை மைக்கல் சரியாகப் பயன்படுத்த அந்த அணியின் முதல் கோல் பதிவானது. மாற்றங்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 15ஆவது 20ஆவது நிமிடங்களில் மைக்கல் அணியினர் விதிக்கு முரணாக விளையாட கிடைத்த இரண்டு சந்தர்ப்பங்களையும் கலைமதியின் பானு கோலாக்க 2:1 கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம். (ம-108)

## பற்றிக்ஸை வென்றது யாழ். மத்தி

யாழ்ப்பாணம் யூன் 12

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பரிவினருக்கான கூடைப் பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியின் முடிவில் 29:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி. அந்த அணி தொடர்ந்தும் தனது ஆதிக்கத்தை வலுவாகத் தக்கவைத்தது. முடிவில் 62:34 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# சங்கக்காரவின் ஆலோசனைகள் இன்று இல்லை

மினி உலகக்கிண்ணத் தொடரில் வாழ்வா சாவா நிலையில் இலங்கை அணி இன்று பாகிஸ்தானை எதிர்கொள்ளும் நிலையில், இந்த ஆட்டத்தில் இலங்கை அணிக்கு சங்காவின் ஆலோசனைகள் கிடைக்க வாய்ப்பில்லாத சூழல் உருவாகியுள்ளது.

மினி உலகக்கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இலங்கை அணி தனது முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்காவிடம் தோற்றது. இரண்டாவது ஆட்டத்தில் இந்தியாவை வென்றது. மூன்றாவது ஆட்டத்தில் இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது. இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி அரையிறுதிக்குத் தகுதிபெறும் என்ற நிலை உள்ளது.

இலங்கை, தனது இரண்டாவது ஆட்டத்தில் இந்தியாவைத் தோற்கடிக்க சங்கா முக்கிய காரணமாக இருந்தார். ஆட்டத்துக்கு முன்பாக அணித்தலைவர் மத்தியூஸைச் சந்தித்த அவர் ஆடுகளம் தொடர்பாகவும், மைதானம் தொடர்பாகவும் கலந்துரையாடினார். பற்பல ஆலோசனைகளை வழங்கினார்.

வெற்றிக்குப் பின்னர் கருத்துத் தெரிவித்த மத்தியூஸ், சங்காவின் ஆலோசனைகள் தமது வெற்றியில் பெரும் பங்கை வகித்தன என்று கோடிட்டுக் காட்டினார். இங்கிலாந்துக் கழகமான சர்ரேக்கு எஸெக்ஸ்டன் தற்போது ஆட்டம் நடைபெற்று வருகிறது. சர்ரேக்கு சார்பாக சங்காவும் விளையாடுகிறார். இந்த டெஸ்ட் ஆட்டத்தின் இறுதிநாள் இன்று. இதனால் சங்காவின் ஆலோசனைகள் இலங்கைக்கு இன்று இருக்காதமை பெரும் பின்னடைவே. (ம)






# அரையிறுதிக்கு தகுதி பெறுமா இலங்கையணி

மினி உலகக்கிண்ணத் தொடரில் இன்று நடைபெறும் கடைசி லீக் ஆட்டத்தில் இலங்கையும், பாகிஸ்தான் அணியும் மோதவுள்ளன. இந்த ஆட்டம் இரு அணிகளுக்கும் வாழ்வா சாவா நிலையிலேயே அமைந்துள்ளது. இலங்கை அணியைப் பொறுத்தவரை அந்த அணி தனது முக்கிய வீரரான தரங்கவை இழந்துள்ளது. அது போதாதென்று குசல் பெரேராவும் காயத்தால் விலகியுள்ளார். திசர பெரேராவுக்கும் காயம் என்று சொல்லப்படுகிறது. ஒருவேளை இவரும் விலகினால் அது மிகப்பெரும் பின்னடைவே.

இலங்கை அணியின் பலமாக முன்வரிசையில் நிதானமாகவும், அதிரடியாகவும் துடுப்பெடுத்தாட வல்லவரான குசல் மெண்டிஸ், மத்திய வரிசையில் சந்திமல் மற்றும் மத்தியூஸ் உள்ளனர்.

இலங்கை அணியின் முதலாவது லீக் ஆட்டத்தில் காயம் காரணமாக மத்தியூஸ் விளையாடவில்லை. இரண்டாவது ஆட்டத்தில் இந்தியாவுக்கு எதிராக விளையாடினார். எனினும் பந்துவீசவில்லை. இதனால் அவர் காயத்தில் இருந்து முழுமையாக விடுபடவில்லை என்று கருதப்பட்டது. இன்று அவரின் உடல்தகுதி தொடர்பில் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. பாகிஸ்தானைப் பொறுத்தவரை காயம் காரணமாக ரியாஸ் விலகியமை பின்னடைவு. ஆனால் ஆமிரை இலங்கையின் துடுப்பாட்ட வீரர்கள் எவ்வாறு எதிர்கொள்ளவுள்ளார்கள் என்பது சுவாராஸ்யத்தை அதிகரித்துள்ளது. பாகிஸ்தானின் துடுப்பாட்டப் பலமாக அசாம், அகமட், மலிக், ஹபிஸ் ஆகியோரைக் குறிப்பிடலாம். இரு அணிகளும் தலா ஓர் வெற்றியைப் பெற்றுள்ள போதிலும் சராசரியின் அடிப்படையில் இலங்கை மூன்றாவது இடத்தில் (இந்தியா-தென்னாபிரிக்கா ஆட்டத்துக்கு முன்னர்) உள்ளது. இதனால் இன்றைய ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டு கைவிடப்பட்டால் இலங்கை அணி அடுத்த அரையிறுதிக் கு முன்னேற வாய்ப்புண்டு. (ம)

# இளநிலைப் பிரிவு கூடைப்பந்தாட்டம்; இன்று எவரெவர் எதிர்த்து மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பிரிவு கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று இடம்பெறவுள்ளன.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் 13 வயது பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் உயர்தரப் பாடசலை 'ஏ' அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.40 மணிக்கு இடம்பெறும் 20 வயது பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து இராமநாதன் மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது.

மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் 15வயது பிரிவு ஆண்களுக்கர்ன ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.40 மணிக்கு இடம்பெறும் 13 வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

# ஸ்கந்தவரோதயா இன்னிங்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 12

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் 15 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி அணி 93 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. ஹரிஸ்மன் பெற்ற 28 ஓட்டங்களே அதிகபட்சம்.

பந்துவீச்சில் கபிலதாசன் 4 இலக்குகளையும், கஜதீபன், றொக்சன், பிரிந்தன் மூவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 7 இலக்குகளை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. றொக்சன் பெற்ற 74 ஓட்டங்களே அதிகபட்சம். பிரிந்தன் 71 ஓட்டங்களைப் பெற்றார்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 153 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி அணி 65 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து இன்னிங்ஸாலும் 88 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி. (ம-23)

# வரலாற்றுச் சாதனையுடன் ஜெலினா சம்பியன்



பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் லத்வியா வீராங்கனை ஜெலினா ஒஸ்ரபன்கோவ் சம்பியனானார். இதன்மூலம் பன்னாட்டு அந்தஸ்து பெற்ற கிண்ணத்தை வென்ற முதல் லத்வியர் என்ற வரலாற்றுச் சாதனையை அவர் நிலைநாட்டினார்.

பரிஸ் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் நான்காம் இடத்தில் உள்ள ருமேனிய வீராங்கனை கேலப்பை எதிர்த்து பன்னாட்டுத் தரப்படுத்தலில் 47ஆம் நிலையில் இருந்த ஜெலினா ஒஸ்ரபென்கோவ் மோதினார்.

இருவரும் பனனாட்டு அந்தஸ்து பெற்ற கிண்ணத்தை இதற்கு முன்னர் வென்றதில்லை. கேலப் சம்பியனானால் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்துக்கு வரும் வாய்ப்பு அவருக்கு இருந்தது. அனுபவம் வாய்ந்த கேலப்பை 20 வயதான ஒஸ்ரபென்கோவ் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார் என்பது தொடர்பில் பெரும் எதிர்பாரப்பும் இருந்தது.


முதல் செற் கேலப்புக்கு சாதகமானதாகவே அமைந்தது. அவர் அந்த செற்றை 4:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். ஒஸ்ரபென்கோவ் சம்பியனாக வேண்டுமாயின் அடுத்த இரு செற்களையும் கைப்பற்ற வேண்டும் என்ற நெருக்கடி நிலை இருந்தது. தனது குறைந்த அனுபவத்தால் அளவுக்கு அதிகமான நெருக்கடியை திறமையாகக் கையாண்ட அவர் அந்த செற்களை முறையே 6:4, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானார்.

**கதறியமுதார் ஒஸ்ரபென்கோவ்**

ஜெலினா ஒஸ்ரபென்கோவுக்குக் கிடைத்த இந்த வெற்றி சாதாரண வெற்றியல்ல. வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றி. லத்திவியாவுக்குக் கிடைத்த முதல் பன்னாட்டு அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் கிண்ணம். அந்த வகையில் வரலாற்றில் இடம்பிடித்த அவர் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராக இருந்தார். அதிகமாகக் கதறியழுதார். அடுத்த தரப்படுத்தலில் முதல் 15 இடங்களுக்குள் ஒஸ்ரபென்கோவ் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# தென்னாபிரிக்காவை தோற்கடித்து இந்தியா அரையிறுதிக்குத் தகுதி






மினி உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற முக்கிய ஆட்டத்தில் தென்னாபிரிக்காவை வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றது இந்திய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. தென்னாபிரிக்க அணியின் ஆரம்ப வீரர்களாக அம்லா மற்றும் குயின்டன் டி ஹொக் இருவரும் களமிறங்கினர். இலக்குச் சரிவும் ஏற்படவில்லை. அதேநேரம் அதிரடியும் இருக்கவில்லை. மெல்லமெல்ல நகர்ந்தது தென்னாபிரிக்காவின் இன்னிங்ஸ். முதல் 10 பந்துப்பரிமாற்றத்தில் அந்த அணி 35 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அணி 76 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அஸ்வினிடம் வீழ்ந்தார் அம்லா. குயின்டன் டி ஹொக் அரைச்சதம் கடந்தார். அவரை 53 ஓட்டங்களுடன் போல்ட் செய்தார் ஜடேயா. வில்லியர்ஸ், மில்லர் இருவரும் ரண்அவுட் செய்யப்பட்டனர். இதுவே தென்னாபிரிக்காவுக்கு பெரும் பின்னடைவைக் கொடுத்தது. டுமினி ஓர் முனையில் நிலைத்துநின்றாலும் பின்வரிசை பும்ரா, புவனேஸ்வர் குமாரால் பிடுங்கி எறியப்பட்டது. முடிவில் 191 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது தென்னாபிரிக்கா.

பந்துவீச்சில் புவனேஸ்வர் குமார், பும்ரா இருவரும் தலா 2 இலக்குகளையும், அஸ்வின், பாண்டியா, ஜடேயா மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 23 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆரம்ப வீரர் ரோகித் ஆட்டமிழந்தார். எனினும் வெற்றியிலக்கு மிகவும் இலகுவானது என்பதால் பதற்றம் உணரப்படவில்லை. கோக்லி, தவான் இருவரும் சிறந்த முறையில் விளையாடினர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். 78 ஓட்டங்களுடன் தவான் ஆட்டமிழந்தார். கோக்லியும் அரைச்சதம் கடந்து போர்முக்குத் திரும்பினார். முடிவில் 12 பந்துப்பரிமாற்றங்கள் மீதமிருக்க வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது இந்தியா.

**இந்தியா - பங்களாதேஷ் இரண்டாவது அரையிறுதியில்**


மினி உலகக்கிண்ணத் தொடரின் விதியின் படி 'ஏ' பிரிவில் முதலிடம் பிடிக்கும் அணி 'பி' பிரிவில் இரண்டாவது இடத்தைப் பிடிக்கும் அணியுடனும், 'பி' பிரிவில் முதலிடம் பிடிக்கும் அணி 'ஏ' பிரிவில் இரண்டாம் இடத்தைப் பிடிக்கும் அணியுடனும் அரையிறுதியில் மோதும். 'ஏ' பிரிவில் இங்கிலாந்து முதலிடத்தையும் பங்களாதேஷ் இரண்டாம் இடத்தையும் பிடித்தன. 'பி' பிரிவில் இந்தியா முதலிடத்தைப் பிடிக்க வாய்ப்புள்ளதால் எதிர்வரும் 15ஆம் திகதியன்று நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதியில் இந்தியா - பங்களாதேஷ் அணிகள் விளையாட அதிகளவில் வாய்ப்புள்ளது. (ம)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இளைஞர் யுவதிகள், தொழில்தேடுவோர்,
தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் 3 மாதங்களிலேயே
தமிழ்போல சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்.
3 மாத சனி,ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 17.06.2017
1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
வாரநாள் வகுப்புகள் (திங்கள் மற்றும் புதன்)
1.காலை 08-10 2.காலை 10-12 3.மாலை 03-05
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புற வீதி, யாழ்நகர்.
021 320 3313
077 1570 486.

## மீண்டும் மின்னியது மின்னல்

ஜமைக்காவைச் சேர்ந்த ஓட்டப்பந்தய வீரரான உசைன் போல்ட் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 100மீற்றர் குறுந்தூர ஓட்டத்தில் இலகுவாக தங்கப்பதக்கம் வென்றார்.

இந்த ஓட்டப்பந்தயமே உசைன் போல்ட் கலந்துகொள்ளும் கடைசி ஓட்டப்பந்தயமாகும். இதனால் இதைப் பார்ப்பதற்கு என்று கிட்டத்தட்ட 80ஆயிரம் ரசிகர்கள் தலைநகர் கிங்ஸ்ரனில் திரண்டிருந்தனர். ஆரம்பத்தில் சிறிது தளர்வாக ஓட்டத்தைத் தொடங்கினார் போல்ட் அரைவாசி தூரத்தைக் கடந்ததும் பின்னர் அவர் தனது வழக்கமான திடீர் வேக அதிகரிப்பைச் செய்தார். 10 செக்கன்கள் 03 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கப் பதக்கம் வென்றார். இறுதிவரை எவருமே வீழ்த்திவிட முடியாத ஓர் ஜாம்பவானாக விடைபெற்றுச் சென்றார். உசைன் போல்டின் வேகம் காரணமாக அவரை 'மின்னல் வேக மனிதர்' என்று அழைப்பார்கள். (ம)




முகாமையாளர் தேவை
யாழில் புதிதாக இயங்கும் விருந்தினர் விடுதி நிர்வாகத்துக்கு ஆங்கிலத்தில் உரையாடல் திறன் மற்றும் கணினி அறிவுடையவர் தேவை. வயதெல்லை இல்லை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
mathurainnjaf@gmail.com
075 999 2027

விற்பனையாகிறது!
Lanka win
G.C.E.O/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கடந்தகால வினாவிடை மாதிரி வினாத்தாள்கள் (முழுமையான புள்ளித்திட்டத்துடன் விடைகள்) அனைத்து மாணவர்களும் வாங்கக்கூடிய குறைந்த விலையில் நாடெங்கிலும் பிரபல புத்தக சாலைகளில் கிடைக்கும்.
(மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு)
விற்பனையாளர்:
லங்கா புத்தகசாலை
கொழும்பு-12
ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(C 29169) (10)

Rotary
யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் HOPE செயற்றிட்ட பயனாளிகளுக்கான அறிவித்தல்
இந்தியாவின் சேலம் றோட்டறி மாவட்ட றோட்டறிக் கழகங்களின் HOPE - செயற்கைக் கால்கள் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் அவயவங்களைப் பெற்றுக் கொண்ட பயனாளிகள் தங்களது அவயவங்களில் ஏதாவது திருத்தப்பணிகள் தேவைப்படின் கீழுள்ள தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.
செயற்றிட்டத்தில் பதிவு செய்து அவயவங்களை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் தொடர்பு கொள்ளுமிடத்து இயலுமானவரை விரைவாகப் பெற்றுக் கொடுப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
அவயவங்கள் தேவைப்படும், பதிவு செய்யத் தவறியவர்கள் தொடர்பு கொண்டு தங்கள் விவரங்களைப் பதிவு செய்யலாம்.
தொடர்புகளுக்கு : 021 492 7780

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.